மார்க்கோ போலோ

வி. எஸ். வி. இராகவன்

ராஜலக்ஷ்மி பப்ளிகேஷன்ஸ்
128, பவழக்காரத் தெரு,
சென்னை - 1.

பதிப்புரிமை] 1965 [விலை ரூ. 0-80 பை.

நான்காம் பதிப்பு : செப்டம்பர் 1965.

11.8 கி. கி. வெள்ளைத்தாளில் அச்சிட்டது.
12 Pts. டைப்புகள் பயன்படுத்தப்பட்டன.

[இந்நூலின் உரிமை ஆசிரியருடையது]

Bharathi Printers, 119, Broadway, Madras-1

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

தமிழாக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீ தான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்து-
கிறாய்.
நின் திருநாமம், பஞ்சாபையும், சிந்துவையும்,
குஜராத்தையும், மஹராஷ்டிரத்தையும்,
திராவிடத்தையும், ஒரிஸாவையும், வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சி யடையச் செய்கிறது.
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது.
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது.
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன ; நின் புகழைப்
பாடுகின்றன.
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

முன்னுரை

தமிழ் நாட்டின் நிலவளமும், நீர்வளமும், மலைவளமும், கடல் வளமும் அந்நியர் பலரை அன்போடழைத்து ஆதரவு அளித்து, அறிவுத்துறையிலும் சிறப்புற்று ஓங்கி வளர ஊக்கமளித்து நின்றன. அதுவும் யாத்திரிகர்கள் பற்பல தேசங்களினின்றும் ஓயாமல் வந்து நம் நாட்டின் பண்பாட்டை நன்கு தெரிந்து, தம் நாட்டிற்கேகி, அவற்றைப் பன்மடங்காகச் சிறப்பித்துக் கூறுவாராயினர். இத் தகைய யாத்திரிகர்களில் முக்கியமானவர் நாம் இந்நூலுள் கூற முனைந்திருக்கும் மார்க்கோ போலோ.[1]

மார்க்கோ போலோ வெனிசு[2] நகரத்தில் கி. பி. 1254 ஆம் ஆண்டு பிறந்தார். வெனிசு நகர வர்த்தக மக்கள் குடியைச் சேர்ந்த அவரது தந்தையின் பெயர் நிக்கொலோ போலோ[3]. தந்தையும் அவரது நண்பரான மாப்பியோ[4] என்பவரும் சேர்ந்து வர்த்தக நிமித்தமாகக் கான்ஸ்டான்டி நோபிள்[5] என்ற பெரு நகரத்துக்குப் பிரயாணப்பட்டனர். பற்பல இன்னல்களைக் கடந்து, இறுதியில் சீனப் பேரரசரான குப்ளாய்கானின்[6] அரண்மனையை அடைந்து, அவ்வரசரால் சில காரியங்களை முடித்து வர மீண்டும் ஐரோப்பாவுக்குத் திரும்ப ஏவப்பட்டனர். அவ்வாறே அவர்கள் திரும்பித் தம் நாடடைந்து, இரண்டாம் முறை சீனப் பேரரசுக்குப்

---

[1] Marco Polo [2] Venice [3] Nicholo Polo [4] Maffeo
[5] Constantinople [6] Kublaikhan

பிரயாணப்படும்போது பதினேழு வயது நிரம்பியுள்ள இளைஞர் மார்க்கோ போலோவைத் தம்முடன் அழைத்துச் சென்றனர். அவர்கள் அங்கே பதினேழு வருடங்கள் சீனப்பேரரசரிடம் பல்வேறு உத்தியோகங்களை வகித்து வந்ததாகவும், கடைசியாகப் பாரசீக மன்னர்க்கு மனைவியாகப் போகும் மங்கை யொருத்திக்குத் தக்க துணையாகத் திரும்பி அனுப்பப்பட்டதாகவும், திரும்பி வரும் வழியில் பல நாடுகளைத் தாம் கண்டதாகவும், மார்க்கோ போலோ தமது வரலாற்றில் விரிவாக எழுதி வைத்திருக்கிறார். அவர் எழுதிவைத்த யாத்திரைக் குறிப்புக்கள் அக்காலத்திலேயே மக்களால் மாயக் கதைகளாகப் போற்றப்பட்டு வந்தன.

மார்க்கோ போலோ 1295 ஆம் ஆண்டில் தம் தாய் நாடு திரும்பியதும், நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக, அவர் சிறைப் பிடிக்கப்பட்டு, 1299 ஆம் ஆண்டு விடுதலை அடைந்தார். அவர் வரலாற்றை முதன்முதல் ஆங்கிலத்தில் தொகுத்து எழுதியவர் ஜான் பாப்டிஸ்ட் ரமுசியோ[2] என்பவர். இவர் மார்க்கோ போலோவை அடிக்கடி 'கோடீஸ்வரர்'[3] என்று வருணிப் பதிலிருந்து, மார்க்கோ போலோ சீனப் பேரரசரிட மிருந்து எத்தகைய பெருமதிப்புக்கொண்ட வெகுமதிப் பொருள்களைப் பெற்றுத் திரும்பி யிருக்க வேண்டும் என்பது ஒருவாறு புலனாகும். கடைசியாக, இன்பம் நிறைந்த இல்வாழ்க்கை நடத்தி, 1324 ஆம் ஆண்டில் மார்க்கோ போலா காலமானார்.

மார்க்கோ போலோ எழுதிவைத்த புத்தகம் யாத்திரைப் புத்தகங்கள் யாவற்றிலும் தலை சிறந்து விளங்கு

[1]Fairy tales [2]John Baptist Ramusio [3]II Milione

கின்றது. இன்றைக்கும் மத்திய ஆசியா வழியாக செல்லும் யாத்திரிகர்களுக்கு இப்புத்தகம் ஒரு வழி காட்டியாகவும் உதவுகின்றது. ஆசியாக் கண்டத்தைக் கடந்து சீனப்பேரரசின் சீர்மையையும், மாட்சிமையையும் முதன் முதல் உலகத்துக்கு அறிமுகப்படுத்தியவர் மார்க்கோ போலோ அல்லவா ? சீனாவிலும், ஜப்பானிலும் கிடைக்கும் ஏராளமான முத்து, பொன், நவரத்தினம் முதலிய அரிய செல்வங்களும், அகில் துகில் முதலிய வாசனைப் பண்டங்களும் மார்க்கோ போலோவினால் மேலை நாட்டிற்குப் பின்னும் அறிமுகப் படுத்தப்பட்டன. இங்ஙனமே நமது பாரத நாட்டின் கடற்கரையிலமைந்த பல நாடு, நகரங்கள் பற்றியும் அங்கு விளையும் அரிய பொருள்கள் பற்றியும் மேனாட்டார் அறிவதற்கும் மூல காரணமாக இவரது குறிப்புக்கள் விளங்கின. இவைகள் யாவும் கதைபோல் வழங்கபட்டு, அக்கதைகளே அன்றிருந்த கிறிஸ்தோபர் கொலம்பஸ்[1] என்ற யாத்திரிகரை வசீகரித்து நின்றன. இவைகளின் சிறந்த தூண்டுதலினால் உந்தப் பெற்றுத் தாமும் கீழ்த்திசை நாடுகளையடையப் புதியதோர் பாதையிலே செல்ல அவர் புதியதோர் கண்டத்தை—அமெரிக்கா[2] என்னும் அழகிய பெரும் பூமியைக்—கண்டுபிடித்தார். மார்க்கோ போலோ எழுதிவைத்த குறிப்புக்களே தம்மை இவ்வாறு தூண்டிற்று எனக் கொலம்பஸே ஓரிடத்தில் வரைந்துள்ளார்.

எனவே இத்தகைய சிறப்புக்கள் பல வாய்ந்த மார்க்கோ போலோவின் யாத்திரை வரலாறு புதுமை பல நிறைந்து படிக்கப் படிக்க இன்பம் தருகின்றது.

---

[1] Christopher Columbus [2] America

அதுவும் மார்க்கோ போலோ எழுதிவைத்த நம் தமிழ் நாட்டுச் செய்திகளைப் படிக்கும் போது யாவற்றையும் விடப் பேரின்பம் அளித்து நிற்கும். தமிழ் நாட்டைப் பற்றி அவர் கூறும் செய்திகளில் சிற்சில முரண்பாடுகள் காணப்பட்டாலும், நமக்கு அக்காலத்தைப் பற்றிக் கிடைக்கும் ஆதாரச் செய்திகள் அவை ஒன்றே.

மார்க்கோ போலோ எழுதி வைத்த குறிப்புக்களில் காணப்படும் ஊர்ப்பெயர்கள், நாட்டின் பெயர்கள், அரசர் பெயர்கள் ஆகிய யாவும் இன்று மிகவும் திரிந்தே வழங்கி வருகின்றன. ஒவ்வொரு பெயருக்கும் பொருத்தமான பெயரைக் குறிப்பிட்டு, ஆராய்ச்சி மிகுந்த அடிவரவுகளாகச் சில குறிப்புக்களும் இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தமிழ்க் கூறும் நல்லுலகம் நன்முறையில் போற்றும் என்பதே எனது நம்பிக்கை.

இப் புத்தகத்தில் கொடுக்கப் பட்டிருக்கும் செய்திகள் அவர் **இந்தியாவிலும்** மற்றும் **சில வேளி நாடுகளிலும்** செய்த சுற்றுப் பிரயாணத்தைப் பற்றி எழுதிவைத்த குறிப்புக்களின் சீரிய தமிழ்த் தழுவலேயாகும். அவை முறையே முதல் இரண்டாம் பகுதிகளில் காணப்படும். ஏனைய நாடுகளைப் பற்றியும் ஈண்டு எழுதப்புகின், அது மிகப் பெரிய புத்தகமாக விரிந்து விடுமாதலால், சில பகுதிகளின் குறிப்புக்களை மட்டும் தொகுத்து இந்நூலில் கொடுத்துள்ளேன்.

எனது நண்பரும், பேரன்பரும், காலஞ் சென்ற **பேராசிரியர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை** பி. ஏ. பி. எல். அவர்களிடம் பலகாலம் தமிழ் பயின்று வந்தவருமான **வித்துவான் திரு. மு. சண்முகம் பிள்ளை** அவர்கள்

தமது பல வேலைகளுக்கிடையில் இதில் அரிய திருத்தங்கள் பல செய்திருக்கிறார். அவர்க்கு எனது உளங்கனிந்த நன்றி என்றும் உரித்தாகுக.

இத்தமிழ்த் தழுவலை அன்புடன் ஏற்று, என்னை மேன் மேலும் இப்பணியில் ஊக்குவிக்குமாறு ஆசிரிய அறிஞர்களையும் தமிழன்பர்களையும் வேண்டிக்கொள்கிறேன். அன்பர்கள் அளிக்கும் அரிய ஊக்கமே இதைப்போன்ற பல நூல்கள் யாத்தற்குரிய பெரும் தூண்டுகோலாக அமையும் என்பது உறுதி, உறுதி.

எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிக!

ஆக்கியோன்

பொருளடக்கம்

முதல் பகுதி

(இந்தியா தேசம் பற்றிய குறிப்புக்கள்)

அத்தியாயம்]		[பக்கம்
1. வரலாற்றுச் சுருக்கம்	...	1
2. மாபர் நாட்டில் மார்க்கோ போலோ	...	13
3. மாபர் நாட்டில் மக்கள் வாழ்க்கை	...	26
4. மயிலேயில் மறைந்த முனிவர்	...	42
5. காயலும் குமரியும்	...	46
6. இலங்கை நாடும் ஆதாம் சிகரமும்	...	51
7. மசூலி நகரமும் லார் நாடும்	...	61
8. கௌளமும் மலையாளமும்	...	74
9. குஜராத்தும் தாணுவும்	...	81
10. இந்தியாவில் செய்த இறுதிப் பிரயாணம்	...	85

இரண்டாம் பகுதி

(பிற நாடுகள்பற்றிய குறிப்புக்கள்)

1. பாரசீக நாட்டில் கண்ட புதுமைகள்	...	91
2. ஆர்மஸ் துறைமுகம்	...	100

1. வரலாற்றுச் சுருக்கம்

பண்டைக் காலந் தொட்டுப் பண்புமிக்க நாடுகள் பலவற்றுள் நம் இந்தியாவும் சீனவும் அரும்பெரும் புதையல்கள் பல கொண்ட நாடுகளாகக் கருதப்பட்டு வந்தன. முத்தும், பொன்னும், மணியும், அகிலும், துகிலும், ஆரமும் அளவின்றிக் கிடைக்கும் நாடுகளாகத் தலை சிறந்து விளங்கிவந்தன. இவ்விருநாடுகளின் பெருமைகளைப்பற்றியும், கிடைக்கும் அரிய பொருள்களைப் பற்றியும் மேனாட்டு யாத்திரிகர்கள் பலர் பலவாறு எழுதி வைத்திருக்கின்றனர். ஆதிகாலந் தொட்டே நம் நாட்டிற்கும் மேலை நாடாகிய கிரேக்க நாட்டிற்கும் வாணிபத் தொடர்பு உண்டென்பது யாவரும் அறிந்த தொன்றே. அரிசி, தோகை, கர்பூரம், மிளகு, அகில் போன்ற பல தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியில் மருவி வழங்குவதும், ஓரா[1] போன்ற கிரேக்கச் சொற்கள் நம் நாட்டு மொழி வழக்கில் இடம் பெற்றிருப்பதுமே இதற்குப் போதிய சான்றுகளாகும்.

இந்தியாவின் பெரும் புகழ்

கீழைநாடு போந்த மேலை நாட்டு யாத்திரிகர்கள் தம் நாடு திரும்பியவுடன், அந்நாடுகளின் பெருமையையும், புகழையும் பலபடப் புனைந்து எழுதி வைத்தனர். அவ்வாறு அவர்கள் எழுதி வைத்ததனலன்றே மேனாட்டார் பலர் இந்தியா போன்ற செல்வம் கொழிக்கும் நாடுகளுக்குச்சென்று, அச் செல்வங்களைக் கொணரப் பெரிதும் அவாக் கொண்டனர்.

யாத்திரைக் குறிப்புக்கள்

---

[1] Hora

ஆயினும் அவா மட்டும் இருந்து விட்டால் போதுமா? அதனை அடையும் மனத்துணிவும் பெரிதும் வேண்டுவதன்றே? அவ்வரிய மனத் துணிவு பெற்ற சிலரே கப்பலேறிக் கடல் கடந்து காணாத் தேசங்களையும் கண்டுகளித்தனர்.

யாத்திரிகர்கள் எழுதிவைத்த குறிப்புக்களுள் மேலை நாட்டு மக்களின் மனத்தை மிகவும் தூண்டி யது சீனப் பேரரசைப் பற்றிய பெரும் வரலாற்று உண்மைகளே. குப்ளாய்கான் என்பவர் சீனப் பேரரசைப் பதின்மூன்றும் நூற்றாண்டின்[1] பிற் பகுதியில் ஆண்டு வந்தார். அவருடைய செல்வ மும், பெருந்தகைமையும், புகழும் கடல் கடந்து உலகம் முழுவதும் பரவின. அவருடைய ஆளுந் தன்மையும், அவர் நாட்டில் உள்ள பண்டைப் பொருள்களின் மிகுதியும், மணி, பொன் முதலிய வற்றின் குவியல்களும் பலர் மனத்தைக் கவர்ந்த வண்ணமாயிருந்தன. ஆகவே, சீனப் பேரரசர் குப்ளாய்கானை அண்டி அரிய செல்வத்தை அடைய அரும்பாடுபட்டுக் கடல் கடந்து சென்– றனர் தீரமுள்ள யாத்திரிக மணிகள். அவர்களில் முக்கியமானவர் இங்கே கூறப்புகும் **மார்க்கோ போலோ** ஆவர்.

---

[1] கி. பி. 1280—1300-ஆம் ஆண்டில் குப்ளாய்கான் அரசாட்சி செய்தார் எனச் சரித்திரம் கூறுகின்றது. ஆனால் மார்க்கோ போலோ, இவர் 1256—1294 கி. பி. வரையில் அரசு செலுத்தினர் எனவும், இவர் 1203 கி. பி. யில் பிறந் தார் எனவும், இவருக்கு 1288 கி. பி. யில் 85 வயது ஆயிற் றெனவும் வேறேர், இடத்தில் கூறுகிறார். ஆகையால், இவற்றில் எது சரியானது என நிர்ணயிப்பது ஆராய்ச்சியாள ருடைய பொறுப்பாகும்.

மார்க்கோ போலோ என்னும் வீரம் செறிந்த பெருந்தகையாளர் இத்தாலி நாட்டில் சிறந்து விளங்கிய வெனிசு நகரத்தில் 1254-ஆம் ஆண்டு தோன்றினர். உயர் குடியில் பிறந்து வளர்ந்த அவரது தந்தையின் பெயர் நிக்கொலோ போலோ என்பதாகும். நிக்கொலோ போலோ கான்ஸ்டாண்டி நோபிள் என்ற பெரும் பட்டணத்துடன் வாணிபத் தொடர்பு கொண்டு வாழ்க்கையைச் செப்பனிட்டுச் சீரும் சிறப்புமாய் வாழ்ந்துவந்தார். அவரும், அவருடன் வாணிப முதலீடு இட்ட மாப்பியோ என்பவரும் சேர்ந்து, கிரிமியா என்னும் நாட்டுக்கு வாணிப நிமித்தமாகச் சென்றனர். வாணிபம் செழித்தோங்கியதனால், அவர்கள் பெரும் பொருள் ஈட்டினர். ஆனால், அவர்கள் திரும்பித் தங்கள் நாடடைய நினைக்கும்பொழுது வழியில் டார்டார் என்பவர்களின் போர் நடை பெற்றது. அப்போர் அவர்களைத் தடுத்து, தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல முடியாமல் செய்துவிட்டது.

மார்க்கோ போலோவின் பிறப்பு

இதனால் அவர்கள் யோசனை செய்து இறுதியாகப் பொகாரா[1] என்னும் பாலைவனத்தைக் கடந்து அங்குள்ள நாடுகளில் வாணிபத்தின் பொருட்டு மூன்று வருடங்கள் இருந்தனர். இவ்வாறு அவர்கள் அந்நாட்டில் வாணிபம் செய்து வரும் சமயம், சீனப் பேரரசின் சக்கிரவர்த்தியாகிய குப்ளாய்கானின் பெயர் அவர்கள் காதுக்கு எட்டியது. அப்பேரரசை நோக்கி அவ்விரு வணிகர்களும் பயணப்பட்டனர்.

சீனப் பிரிவுகள்

[1] Bokhara

ஒரு வருடம் பிரயாணம் செய்து வழியிலுள்ள பல நாடுகளைக் கடந்து கடைசியாகச் சீன தேசம், சென்றடைந்தனர். ஒரு நன்னாளில் அவர்கள் குப்ளாய்கானின் அரண்மனையில் நுழைந்தனர். அச் சீனப் பேரரசர் அவர்கள் வருகையை யறிந்து அகமகிழ்ந்து, அவர்களுக்குத் தக்க மரியாதை களுடன் சிறந்த வரவேற்பு அளித்தார். அப் பொழுது சீன தேசம் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேல் பாகம் – அதாவது வடபாகம்-கெதே[2] என்றும், கீழ்ப்பகுதி-அதாவது தென்பாகம் – மஞ்சி[3] என்றும் வழங்கப்பட்டு வந்தன.

ரோம் நகருக்குத் திரும்புதல்

நிக்கொலோ போலோவும் அவரது நண்பரும் சீன தேசத்தில் அதன் பேரரசர் குப்ளாய்கானால் வெகுவாக ஆதரிக்கப்பட்டனர். பின்னர், அவர்களை ரோம் நகரில்[4] வதிந்து வந்த போப் பாண்டவரிடம்[5] தூதாக அனுப் பிச் சில பாதிரிமார்களைத் தம்மிடம் அனுப்பித் தருமாறு குப்ளாய்கான் வேண்டினர். மற்றும், போப்பாண்டவர் சந்நிதியினின்று விளக்கெரிக்க உதவும் எண்ணெயில் சிறிது பாகம் பெற்றுக் கொண்டு வரவும் அவர்களை அனுப்பியிருந்தார். அவர்கள் மூன்று வருடங்களாகப் பல நாடுகளை யும் கடந்து, இறுதியாக ரோம் நகரை அடைந் தனர். ஆனால், அவர்கள் அவ்விடத்தை யடைந்த பொழுது, யாரை எதிர்பார்த்து வந்தார்களோ அப் போப்பாண்டவர் ஆவி துறந்திருப்பதை யறிந்தனர். அடுத்த போப்பாண்டவர் யாவர்

---

[1]China [2]Cathay [3]Manji [4]Rome [5]Pope

என்பதை நிச்சயிக்க ஒரு தேர்தல் நடைபெறும் நாளையும் அறிந்தனர். ஆனல் அதுவரையிலும் தங்கள் காலத்தை ரோமில் கழிக்க மனமில்லாமல் தங்கள் சொந்தஊராகிய வெனிசு நகரத்தை அடைந்தனர். அவர்கள் அவ்வாறு அடைந்தது 1269-ஆம் ஆண்டு ஆகும்.

வீட்டில் கேட்ட பேரிடி

வீட்டை யடைந்ததும் பேரதிர்ச்சி ஒன்று அவர்கள் காதுக்கு எட்டியது. நிக்கொலோ வீட்டில் நுழைந்து, தம் மனைவியைத் தேடினர். ஆனல் அவள் இருந்தால்தானே எதிர் கொண்டழைக்க? அவள் இறந்து பல வருடங்கள் ஆயின என்பதைப் பின்னர் அறிந்தார். அவளுக்கு ஒரு மகன்மட்டும் இருந்தான். அம்மகன் பெயர் மார்க்கோ போலோ. அப்பொழுது அம்மகனுக்கு வயது பதினேழு நிரம்பியிருந்தது. அவரே இப்புத்தகம் வருணிக்கும் யாத்திரிகர் ஆவர். மார்க்கோ போலோ அதுகாறும் தமது மாமன் வீட்டில் வளர்ந்து வந்தார்.

மார்க்கோ போலோவின் புறப்பாடு

தந்தையும் நண்பரும் சில காலம் வெனிசு நகரத்தில் வதிந்து போப்பாண்டவரின் தேர்தலை எதிர் நோக்கியிருந்தனர். ஆனல் அத்தகைய தேர்தல் நாள் எக்காரணத்தாலோ தள்ளி வைக்கப் பட்டதால், அவர்கள் மீண்டும் 1271-ஆம் ஆண்டு சீனப் பேரரசர் குப்ளாய்கானிடம் செல்ல நினைந்தனர். அவ்வாறு நினைத்த அவர்கள் பிரயாணப்பட்டுப் பற்பல தடைகளுக்கு ஆளாகி, 1275-ஆம் ஆண்டு சீனப் பேரரசை அடைந்தனர். அவர்களுடன் இளைஞர்

மார்க்கோ போலோவும், தமது பதினேழாவது வயது முடியுந் தருவாயில் கிளம்பினர். ஆண்டவர் சன்னிதியில் பெற்ற சிறிது எண்ணெயையும் தங்களுடன் எடுத்துச் சென்றனர்.

சீனப் பேரரசை அடைதல்

அவர்கள் வரவைக் கண்டதும், சீனப் பேரரசரான குப்ளாய்கான் மிகுந்த மரியாதைகளுடன் வரவேற்றுத் தக்கவாறு உபசரித்தார். மார்க்கோ போலோ, அப்பொழுது வாலிபராக இருந்த காரணத்தால், அவருடைய பேச்சுக்களும், நடை, உடை, பாவனைகளும் அப்பேரரசரின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. சிறிது காலத்தில், மார்க்கோ போலோ டார்டார் மொழியையும், சீன மொழியையும் அறிந்தார். சீன மக்களுடைய நடை, உடைமுதலியவற்றையும், அவர்களின் பண்பாடுகளையும் நன்கு அறிந்துகொண்டார். அந்நியர்மொழியில் ஆர்வம் காட்டி, அவர்களிடம் அன்புகொண்டு பழகியதால், குப்ளாய்கான், மார்க்கோ போலோவை, வெளிநாட்டுத் தூதராக அடிக்கடி அனுப்பிவைத்தார். இவரும் தமக்கு இட்ட பணியைச் செவ்வனே செய்து பேரரசரின் மனத்தைக் களிப்படையச் செய்தார். இவ்வாறு அயல் நாட்டு அலுவலாளராகச் செல்லும் பொழுது நம் இந்தியாவிலும் இறங்கிப் பல நாடுகளைச் சுற்றித் தாம் கண்டவற்றைச் சிறந்த வரலாறாக எழுதிவைத்தார். அவ்வினைஞர் மார்க்கோ போலோ குப்ளாய்கானிடம் பதினேழு வருடங்கள் அயல் நாட்டு அலுவலாளராக வேலை பார்த்து வந்தார்.

குப்ளாய்கானுக்கு வயது அதிகமாகிக் கொண்டே வந்ததால், இன்னும் சில காலமேனும்

வசிப்பது நிச்சயிப்பதற்கில்லை என்ற நிலை ஏற் பட்டது. இதை மார்க்கோ போலோவும், மற்றைய இருவரும் அறிந்து, அதற்குத் தக்கவாறு நடந்துகொள்ள முயன் றனர். குப்ளாய்கானுக்குப் பிறகு பட்டத்துக்கு வரும் சீனப் பேரரசர் அதே சலுகைகளைத் தங்களுக்குக் காட்டுவாரா என்று மனத்தில் பெரும் ஐயப்பாடு தோன்ற, அந்நாட்டினின்று அகன்று தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் செல்ல விழைந்தனர். ஆனால் இவ்வெண் ணத்தை நேரடியாக அப்பேரசரிடம் எங்ஙனம் எடுத்துரைப்பது என்னும் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்திருக்க, ஊழ்வினையின் நற்பயனுய் அவர் களுக்கு அதற்கொரு நல்வாய்ப்புக் கிடைத்தது. பாரசீக தேசத்து மன்னனை 'ஆர்கான்[1]' என் பவன் குப்ளாய்கான் உறவினர் ஒருவரின் எழில் மிக்க பெண்ணை மணக்க உத்தேசித்து அவளைத் தக்க துணையுடன் தன் நாட்டுக்கு அனுப்பித் தருமாறு குப்ளாய்கானின் உதவியை வேண்டி நின்றான். ஆனால், அப்பெண்ணுடன் வழித்துணை யனுப்ப அந்நாட்டிற்குரிய வழியைத் தெரிந்தவர் யாரேனும் இருத்தல் வேண்டுமன்றே? அவ்வாறு வழி நன்கு தெரிந்திருந்தவர்கள் மார்க்கோ போலோவும், மற்ற இருவருமே. ஆதலால், அவர்– கள் அப்பெண்ணுக்கு வழித்துணையாகத் தாங்கள் செல்வதாக வாக்களித்தனர். ஆனால், குப்ளாய் கானுக்கு அவர்களைப் பிரிய மனமில்லை. என்றா லும், கடைசியில் பாரசீக மன்னனின் வேண்டுதலை உத்தேசித்து அவர்களை அப்பெண்ணுடன்

வேனிசு திரும்புதல்

[1] Argon

அனுப்பி வைத்தார். அனுப்பும்போது, குப்ளாய்கான், மார்க்கோ போலோவுக்கும், அவர் தந்தைக்கும், தந்தையின்நண்பருக்கும் பலவித மரியாதைகள் செய்து வழியனுப்பிவைத்தார். மார்க்கோ போலோவிடம் சிறப்பான நட்புக்கொண்டதால், அவருக்குத் தனியாகப் பொன்னும் மணியும் பல்வகைச் செல்வங்களும் பரிசு கொடுத்து, பொன்னால் செய்யப்பட்டதும் தம் பெயர் பொறிக்கப்பட்டதுமான கேடயம் ஒன்றையும் கொடுத்தார். வழியில் யாதொரு தொல்லையும் ஏற்படாவண்ணம் போய்ச் சேர அக்கேடயம் அவருக்கு உதவிற்று. குப்ளாய்கான் கொடுத்த அக்கேடயத்தை அவர் எங்குக் காட்டினாலும், அத் தேசத்தார் அவருக்கு உயர்ந்த மரியாதைகள் செய்து, வேண்டிய வற்றை வேண்டியவாறு அளித்து உதவுவர். இவ்வாறு அவர்கள் சீனு தேசத்தை விட்டுப் புறப்பட்டனர்.

மணமகளுடன் புறப்பட்ட அம்மூவரும் பாரசீக நாட்டையடைந்து, மூன்று வருடங்கள் அங்குத் தங்கிப் பின் 1295-ஆம ஆண்டு தங்கள் சொந்த நாடாகிய இத்தாலி நாட்டையடைந்தனர். இதற்கிடையில் அவர்கள் பட்ட துன்பங்கள் கொஞ்ச நஞ்சமன்று. எழுத்தால் எழுத முடியாத பல இன்னல்களை யெல்லாம் கடந்து இறுதியில் தங்கள் நாடு வந்து சேர்ந்தனர். தங்கள் நாடடைந்ததும், சீனப் பேரரசர் குப்ளாய்கான் இறந்துவிட்ட செய்தியை வருத்தத்துடன் அறிந்து மிகமிக வருந்தினர்.

தந்தையும் நண்பரும் ரோம் நகரிலே தங்கள் சொந்த அலுவலை முன்னிட்டுத் தங்கிவிட, மார்க்கோ போலோ மட்டும் தமது உற்றார் உறவினரைக்காண வெனிசு நகரம் வந்தடைந்தார்.

சொந்த நகரத்தில் மார்க்கோ போலோ இறங்கியதும் இவரை எவராலும் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. இவருடன் யாவரும் கலந்து உறவாட மறுத்தனர். இந்நிலையில் தாமே மார்க்கோ போலோ என நிலைநாட்டி, தங்கள் உறவினரிடம் உரிமையோடு வாழ்வது எங்ஙனம் என்று சிந்தித்த பொழுது, சட்டென இவருக்கு அரிய எண்ணம் ஒன்று உதித்தது. தம்மிடமிருந்து விலை உயர்ந்த- குப்ளாய்கான் அன்பளிப்பாக அளித்த- பொன், வைரம், நவரத்தினம், தந்தம், வாசனைப் பண்டங்கள் முதலிய பல பொருள்களைக் காட்டவே, அவ்வெனிசு நகரப் பெருமக்கள் சிறிது நம்பிக்கை கொண்டனர். பொன்னின்பால் பெருமையும் மோகமும் கொண்டு மார்க்கோ போலோ கொடுத்த பரிசுகளை ஏற்று, இவரைத் தம் உறவினருள் ஒருவராக நடத்த இசைந்தனர்.

அடையாளம் கண்டுகொள்ள திகைப்பு

ஆனால் மார்க்கோ போலோ வெனிசு நகரத்தில் நெடுநாட்கள் இருக்கவில்லை. போர் முரசு கொட்டியதால், இளைஞர்கள் யாவரும் நாட்டுப் போரில் கலந்து கொள்ள ஆணையிடப்பட்டனர். ஆகவே, நம் மார்க்கோ போலோவும் அரசினர் ஆணையின்படி அமர்க்களத்தில் அரும்பணி புரியச் சென்றனர். போர்க்கப்பல் தலைவனாக அமைந்து, மாற்றாரோடு பொருதார். ஆனால் துரதிட்டவசமாக, இவருடைய கப்பல் நாசமாக்கப்பட்டது. இவர் பக்கம் இருந்த போர் வீரர்கள் தோற்கடிக்கப்பட்டுச் சிறைபிடித்துச் செல்லப்பட்டனர். 1296-ஆம் ஆண்டு சிறைபட்ட

போரில் பெற்ற சிறைவாசம்

மார்க்கோ போலோ மூன்று வருடங்கள் ஜினுவா சிறையில்[1] தவங்கிடந்தார் என்றே கூறலாம். அச்சிறையி லிருந்த வருடங்களிலேதான், தாம் அதுகாறும் கண்டவற்றைப் பிரெஞ்சு மொழியில் தமது நண்பராக இருந்த, பைசா[2] நகரத்தைச் சேர்ந்தரொஸ்தி செல்லோ[3] என்பவரைக்கொண்டு எழுதி வைத்தார். அக் குறிப்புக்களே பிற்காலத் தில் பலர் பலவாறு மொழி பெயர்க்க மூலமாக உதவிற்று.

இறுதி நாட்கள்

1299-ஆம் ஆண்டு சிறைமீட்சி பெற்றதும், மார்க்கோ போலோ தமக்குப் பிடித்த மங்கை யொருத்தியை மணந்து இல்ல- றத்தை நல்லறமாக நடத்தி வந்- தார். நிறைந்த செல்வமும், புகழும் படைத்திருந்ததால், வெனிசு நாட்டு வர்த்தகர்களிடையே அவர் சிறந்த நன் மதிப்பைப் பெற்று, நடுநாயகமாய் விளங்கி வந்தார். உயர்ந்த பதவியிலிருக்கும் அலுவலாளர் பலர், மார்க்கோ போலோவின் உதவியைப் பெரிதும் நாடி வந்தனர் என்றும், உதவி யளிப்ப- தில் அவர் என்றுமே தயங்கியது கிடையாது என்றும் வரலாற்று உரைகள் நமக்குத் தெரிவிக் கின்றன. வீட்டுக்குக் குழாய் வைக்கவேண்டு மாயினுஞ் சரி, நாட்டுக்குச் சேனை தயாரிக்க வேண்டுமாயினுஞ் சரி, மார்க்கோ போலோவின் உருவமே யாவர் மனத்திலும் முன்னின்று, அவரையே யாவற்றிற்கும் தலைமை தாங்கிச் செய்யுமாறு அந்நாட்டு மக்கள் வேண்டலாயினர். இத்தகைய உயர்ந்த செல்வாக்கோடும், பண்- பட்ட உள்ளத்தோடும், ஆதரவு அளிக்கும் மனப்

[1]Genoa [2]Pisa [3]Rustigielo

பான்மையோடும் வாழ்ந்து வந்த மார்க்கோ போலோ, வாழ்வின் இறுதிக் கட்டத்தை அடைந் தார். இனித்தாம் வசிக்க முடியாதென உறுதி யாக எண்ணி, தம் மக்களுக்கு உயில் ஒன்றை எழுதி வைத்தார். மார்க்கோ போலோவின் மிகுந்த செல்வத்தைப் பங்காகப் பெற்றவர்கள் அவர் மனைவியான டோனுடாவும்,[1] அவர் பெண்-கள் மூவரும் ஆவர். நோய்வாய்ப்பட்டுக் கிடந்த யாத்திரிகர் மார்க்கோ போலோ, 1324-ஆம் ஆண்டு-உயில் எழுதிய அதே ஆண்டில்-இவ் வுலகத்தை விட்டு நீங்கி, வேறுலகத்துக்கு மீளா யாத்திரையாகச் சென்று விட்டார். இறக்கும் பொழுது மார்க்கோ போலோவுக்கு வயது எழுபது நிரம்பப் பெற்றிருந்தது. அவரது சடலம் சான் லாரன்சோ[2] என்ற வேதக்கோயிலில்[3] அடக்கஞ் செய்யப்பட்டது.

சிறப்பினுக்குக் காரணம்

ஆயினும், எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மார்க்கோ போலோ எழுதிவைத்த வரலாறுகள், இன்றைக்கும் நமக்குப் புத்தம் புதியனவாகத் தோன்றுகின்றன. அதற்குக் காரணம், அவர் உண்மை நோக்கத்தோடு உள்ளத் தைப் பண்பட்ட முறையில் செலுத்திப் பரந்த நாட்டைத் தமது விரிந்த மனப்பான்மையால் கண்டு களித்துத் தாம் கண்டவற்றைக் கண்ட-வாறே எழுதிவைத்ததுதான். பதின் மூன்றும் நூற்றாண்டில் நம் இந்தியாவின் நிலைமையை யும், முக்கியமாக நம் தமிழகத்தின் சீரும் சிறப்பை யும் பற்றி அவர் வரைந்திருப்பது நமது அறிவுக்கு

---

[1]Donata [2]San Lorenzo [3]Church

ஒரு நல் விருந்தாகும். அவைகள் யாவும் வர லாற்று ஏட்டில் பொன் எழுத்துக்களால் பொறிக் கப்பட வேண்டியவை என்றால் மிகையாகாது; மூக்காலும் அது உண்மையே யாகும். வாழ்க மார்க்கோ போலோவின் அரிய அழகிய சொல் ஓவியங்கள் !

---

2. மாபர் நாட்டில் மார்க்கோ போலோ

பதின்மூன்றும் நூற்றாண்டில், பல்வளமும் பாங்குறப் பெருகிய தமிழ் நாட்டினை, அராபியக் கப்பலோட்டிகள், "மாபர்"[1] என்று அழைத்து வந்தனர். அப்பொழுது மதுரையை ஆண்டு வந்த மன்னன் சுந்தர பாண்டியன் ஆவன். அவன் கீர்த்தியுடன் மதுரையை ஆண்ட காலத்திலேதான் மார்க்கோ போலோ, அயல் நாட்டுத் தூதராகத் தமிழ் நாட்டு எல்லைக்குள் வந்தார்.

---

1. MAABAR "மாபர்" என்ற நாடு சில பிரதிகளில் "மலபார்" எனறு பிழையாக எழுதப்பட்டுள்ளது. ஆனல், "மலபார்" என்ற நாட்டை மிகத் திருத்தமாகவே மற்றோரிடத்தில் எழுதி வைத்திருக்கிறார். ஆகையால் மாபர் நாடு வேறு; மலபார் நாடு வேறு.

மாபர் நாடென்பது, திருநெல்வேலி, இராமேச்சுரம், நாகை, மகாபலிபுரம், மயிலாப்பூர் இறுதியாக உள்ள கடற்கரை நாடும் அவற்றை அடுத்துள்ள நாடுகளும் ஆகும்.

ஆடம்ஸ் பாலம் (Adams Bridge) என்ற முக்கியமான முத்துக் குளிக்கப்படும் இடம் இராமேச்சுரம் அருகில் இருந்தால், அவ்விடத்தைக்கொண்டு அக்கடற்கரைப் பிரதேசத்துக்கு மாபர் என்ற பெயர் இடப்பட்டிருத்தல் வேண்டும் எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

ஆனல், ஒன்றை மட்டும் நாம் நினைவில் வைத்திருத்தல் வேண்டும். மார்க்கோ போலோ தமிழ் நாட்டைச் சுற்றி வந்தது பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லவா? அப்பொழுது சேர, சோழர்களின் முடியாட்சி மறைந்து, பாண்டிய வமிசத்தினர் மட்டும் மதுரையை ஆண்டு வந்தனர். அவ்வாறு மதுரையை ஆண்ட மன்னனின் பெயர் சௌந்தர பாண்டியன் என்பதாகும்.

இங்கிருந்து, இலங்கை முதலிய இடங்களுக்குச் சென்றார். அவர் கண்டவற்றை அழியாச் சொற்களால் எழுதிவைக்க ஏற்பாடுகள் செய்தார் என்பதை முன்னரே அறிந்தோம் அல்லவா? அவ்வாறு, மார்க்கோ போலோ, நம் தமிழ் நாட்டினைப் பற்றிக் கூறிய வரலாற்றினை ஈண்டு நோக்குவோம்:

அக்காலத்துக்கு நெடுங்காலம் முன்னரிருந்தே காஞ்சிபுரமும் அதை யடுத்திருந்த மகாபலிபுரமும் முறையே பிரசித்தி பெற்ற நகரமாகவும் துறைமுகமாகவும் விளங்கிவந்தன என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் பலரும், ஆராய்ச்சி வல்லுனர் பலரும் வரைந்திருக்கின்றனர். ஆகவே மகாபலிபுரம் என்ற சொல்லே மாபர் என்று திரிந்து வழங்கப்பெற்றது எனக் கொள்வதற்கு இடமுண்டு எனத்தோன்றுகிறது. ஏனெனில் மார்க்கோ போலோ ஒரு கப்பலோட்டி. அதுவும் சிறந்த, பிரசித்திபெற்ற மாலுமியும்கூட. ஆகவே அவர் இங்கு வந்தது கடல் வழியாகத்தான் என்பதை அவர் வாக்காலேயே அறியலாம். சிலோன் என்ற இலங்கையை இதற்கு முன்னர்க் கூறிவிட்டுப் பிறகு மாபர் நாடு என்பதை விவரிப்பதால், மாபர் நாட்டிற்கும் அவர் கப்பலிலேயேதான் வந்தார் என்பதை யூகித்தறியலாம். கிழக்குக்கரையில் விளங்கி வந்த துறைமுகம் மகாபலிபுரம் அதாவது மாமல்லபுரம் அல்லவா?

சிலப்பதிகாரத்தில்,

"இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்"

—கடலாடு காதை 141

என்றலால், காவிரிப்பூம்பட்டினம் என்று கூறப்படும் செழும்பதி அருகில் கலங்கரை விளக்கம் ஒன்று இருந்தாகவும் தெரிகிறது. ஆனல், பதின்மூன்றும் நூற்றாண்டில் அக்கலங்கரை விளக்கம் அழியப் பெற்று, மகாபலிபுரம் சிறந்து விளங்கி, கப்பல்களுக்கு உதவியளித்து வந்தது எனச் சரித்திர வரலாறு கூறுகின்றது. இம் மகாபலிபுரத்தில் உள்ள கலங்கரை விளக்கத்தை இன்றும் நாம் கண் கூடாகக் காணலாம். ஆகையால் மகாபலிபுரத்தையே சுருக்கமாகக் கூறவேண்டி, அதையே மாபர் எனச் சிதைத்துக் கூறினர் என்று கொள்வதே பொருத்தமுடைத்து.

(மாமல்லபுரம் - மகாபலிபுரம் - மகாபல்பூர் - மால்பூர் - மால்பர் - மாபர் என்று திரிந்து வழங்கியிருத்தல் வேண்டும்.)

"செய்லான்[1] தீவினை விட்டகன்று மேற்கு முகமாக அறுபது மைல், கப்பற் பிரயாணம் செய்தால், மாபர்[2] என்ற பெருநாட்டை நீவிர் அடைவீர். இத்திரு நாடு ஒரு தீவு அன்று. பரந்த இந்தியாவின் ஒரு பாகமே ஆகும்.

நாட்டின் நிலைமை

இது பண்பாட்டிலும், மாட்சிமையிலும் சிறந்த நாடாகக் கருதப்பட்டு வந்தது. இந்நாட்டினை நான்கு வேந்தர்கள் அரசு நடாத்தி வந்தனராயினும், அவர்களில் செந்தர் பாண்டி[3] என்றவனே

சதுரங்கப்பட்டினம் ஆங்கிலத்தில் சாட்ராஸ் (Sadras) என்று வழங்குவதும், சென்னைப் பட்டினம் மெட்ராஸ் (Madras) என்று வழங்குவதும் இதற்குத் தக்க சான்றுகளாகும். மகாபலிபுரம் என்ற நீண்ட சொற்றொடரைச் சரியாக உச்சரிக்க முடியாமல், அதையே மாபர் என்று சுருக்கம் செய்து கூறினர் எனக்கொள்வது பொருத்தமான கொள்கையே.

மற்றும். மூவர் - அதாவது சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்கள் ஆண்ட நம் தமிழ் நாட்டினைக் குறிப்பதால், இதை மூவர் நாடு என்றும், அதுவே மாபர் நாடு என மருவி வழங்கலாயிற்று என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

மற்றுஞ் சில அறிஞர், மறம்—அதாவது திண்மை வாய்ந்த மறவர் வாழ்ந்த நாடு—மறவ நாடு என்று கொண்டு, அதனையே அவர் மொழியில் மாபர் நாடு என எழுதி வைத்தார் என்றும் கொள்கின்றனர்.

எது எப்படியிருந்தாலும், மாபர் நாடு என்பது தமிழ் நாடே என்பதை மார்க்கோ போலோவின் வாக்கினாலேயே அறிகிறோம்.

[1] Zeilan (Ceylon)-இலங்கை [2] தமிழ் நாடு [3] Sender Pandi - சௌந்தர பாண்டியன்.

முக்கியமானவனும், தலைசிறந்த அரசனுமாவான். அவன் ஆளும் நாட்டின் எல்லைக்குள், மாபருக்கும் செய்லானுக்கும் இடையே, முத்துக் குளிக்கும் இடம் ஒன்று உண்டு. அது ஒரு வளை குடா போல் தோற்றமளிக்கும். அவ் வளைகுடாவிலே கடலின் ஆழம் பத்திலிருந்து பன்னிரண்டு பேதம்ஸ்[1] வரையில் இருக்கும். சிற்சில இடங்களில் இரண்டு ஆள் ஆழம் கூட இருப்பதில்லை.

முத்துக் குளிக்கும் தொழில்

மீன் பிடிக்கும் பரதவர் தொழிலும், முத்துக் குளிப்பும் பின்வருமாறு நடைபெறுகின்றன:

சிறுசிறு கூட்டங்களாக வணிகர் பலர் குழுமி, பற்பல அளவுள்ள கப்பல்களையும் படகுகளையும் தங்கள் வாணிபத்துக்கு வாடகையாக அமர்த்திக் கொள்வர். இக்கப்பல்கள் யாவும் அடிப்பாரம் தரைசாம்பி[2] நங்கூரம் பாய்ச்ச வசதி பெற்றனவாக இருக்கும். மற்றும் முத்துக் குளிப்பதில் அனுபவம் உடையராயும், அக்கலையில் வல்லுனராயும் உள்ளவர்களை அமர்த்தி, இக்கப்பல்கள் வேலை மேல் செல்லும். சிப்பிகளை வலையால் ஆக்கப்பட்ட பைகளில் இட்டு, அவ்வலைகளைத் தங்கள் உடலிற் கட்டிக் கொண்டு, அடிக்கடி கீழும் மேலும் போய் வருவார்கள். மூச்சுவிட முடியாத நிலைமையில், அவர்கள் கடல் மட்டத்துக்கு மேல் வந்து, மூச்சு இழுத்து, மீண்டும் உள்ளே சென்று மூழ்கி முத்துக் குளிப்பர். இம்முத்துக் குளிப்பு நாள்

---

[1] Fathom - ஆறடி கொண்ட ஓர் அளவு.

[2] Ground tackle - பொருள்களை மேலே இழுக்கும் ஒரு விதக் கயிறு. A kind of Crane or Pulley.

முழுவதும் நடந்தேறும். அவர்கள் இதில் விடாப் பிடியாக முனைவர். இவ்வாறு அவர்கள் அப் பருவத்தில் சேகரிக்கும் சிப்பிகள் எல்லா நாடு களுக்கும் தேவையான முத்துக்களைக் கொடுக்கும் அளவுள்ளனவாக இருக்கும். இத்துறையில் - வளைகுடாவில் - கிடைக்கப் பெறும் முத்துக்கள் பெரும்பாலும் நல்ல ஒளியும், திடமும், கனமும் உள்ளவைகளாக இருக்கும். சிப்பிகள் மிகப் பெரு வாரியாக எடுக்கப்படும் இடத்துக்குப் பேதலா [1] என்று பெயர் வழங்கப்படும். அது தாய் நாட்டின் கடற்கரையில் உள்ளது. அவ்விடம் முதற் கொண்டு அச்சிப்பி எடுத்தலும், மீன் பிடித்தலும், தெற்கு முகமாக அறுபது மைல் [2] வரையிலும் நடைபெறுகிறது.

இக்குடாவில் அளவிற் பெரிய மீன்கள் பெரு வாரியாக நிறைந்திருப்பதால், அவைகள் முத்துக் குளிப்பவர்களை அடியோடு கொன்றுவிடுகின்றன.

முத்துக் குளிக்க ஏற்பாடு

இக்கேட்டினைத் தவிர்க்கும் பொருட்டு அவ்வணிகர்கள் தங் களுடன் மந்திரத்தால் வசியம் செய்யும் பலரை அழைத்துச் செல்வர். பார்ப்பனக் குடியைச் சேர்ந்த இம்மந்திர வாதிகள் அம் மீன்களின்மீது தாங்கள் கற்ற வித்தையை ஏவி, அதனால் மீன்களைத் தம் வயப் படுத்தி, முத்துக் குளிப்போருக்கு யாதொரு தீங்கும் நேரிடாதவாறு தடுத்துப் பாதுகாக்கின்-றனர். முத்துக்குளிப்பது பகலில் மட்டுமே

---

[1] Betala-தூத்துக்குடித் துறைமுகத்துக்கும் இராமேச் சுரத்துக்கும் இடையில் உள்ள ஆழமான பாதலம் என்ற கடற்பகுதி. இப்பொழுது அப்பெயர் வழக்கில் இல்லை.

[2] இலங்கையின் கிழக்குப் பாகத்தையும் சேர்த்துக் குறிப் பிடுகிறார் போலும்.

நடைபெறும். அதன் காரணமாக இவர்கள் மாலை வேளைகளில் அம்மந்திரத்துக்குச் சக்தி யாதும் இல்லாமல் போகும்படி செய்துவிடுகின்றனர். பகலில் நடப்பதுபோல் இரவிலும் நடக்கும் என நம்பி இராக்காலத்தில் முத்துச் சிப்பிகளைக் கவர வரும் வாணிபர்களும் திருடர்களும் அம்மீன்களுக்கு இரையாவார்கள் என்றும், அதைக்கண்டு மற்றவர் அஞ்சிக் களவு செய்யார் என்றும் நம்பிக்கைகொண்டு விளங்குகின்றனர். இம் மந்திரவாதிகள் ஏனைய பறவைகளையும், மிருகங்களையும், நஞ்சு மிக்க நாகங்களையும் நயமாகவசியம் செய்யும் சக்தி வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

முத்துக் குளித்தல்

இத்தகைய முத்துக் குளித்தல் மே மாதம் இடையில் துவங்கும். இதில் ஈடுபட விரும்புவோர் அரசரிடம் தகுந்த அத்தாட்சிப் பத்திரம் வாங்கியே அதில் ஈடுபடவேண்டும். அதற்காக அரசன் அவ்வாறு கிடைக்கும் வருவாயில் பத்தில் ஒரு பங்கினையே, தனக்கெனப் பெற்றுக் கொள்வான். முத்துக் குளிப்பவர்கள் தாங்களே அப்பணத்தைத் தனியாக ஒதுக்கி வைத்துக் கொடுத்துவிடுவார்கள். மேற்கூறிய பருவம் முடிவதற்கும், இக்குடாவில் முத்துக் குளித்தல் முடிவடைவதற்கும் சரியாக விருக்கும். இக் காலத்துக்குள் அக்குடாவில் உள்ள முத்துச் சிப்பிகள் யாவும் எடுக்கப்பட்டுவிடும். ஆகவே, அவர்கள் இங்கு முத்துச் சிப்பி தீர்ந்துவிட்ட காரணத்தால், தங்கள் கப்பலை வேறு இடங்களுக்கு ஓட்டிச் செல்வார்கள். முன்பு முத்துக் குளித்த இடத்திலிருந்து அவ்விடம் ஏறக்குறைய முந்நூறு மைல் தொலைவு உள்ளதாக இருக்கும்.

அப்புதிய இடத்தில் அவர்கள் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் முத்துக் குளிப்பார்கள். அரசன் மேற்கூறியபடி பத்திலொரு பங்குப் பெறுவதோடு அம்முத்துக்களில் நல்ல பெரிய வடிவான சிலவற்றைப் பெறவும் உரிமை படைத்துள்ளான். அவ்வாறு பொறுக்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்படும் முத்துக்களுக்கு அரசன் தனியான சலுகை காட்டி, அவற்றிற்கேற்ற விலையாக நிறையப் பொருள் தருவதால், அத்தகைய முத்துக்களை அரசனிடம் கொண்டு காட்டுவதில் வணிகர்கள் எவ்வித மனக்கசப்பும் கொள்வதில்லை.

மாபர் நாட்டின் இப்பகுதியில் உள்ள ஆதிக் குடிகள், மானத்திற்காகக் காக்க வேண்டிய உறுப்புக்களை மட்டும் சின்னஞ்சிறு துணியொன்றினால் மறைத்துக்கொள்வர். மேலும், அவர்கள் எப்பொழுதும் அரை நிர்வாண நிலையிலேயே செல்கின்றனர். அரசன் அவர்களை விட விலை மிக்க துணியினை அணிந்துகொண்டிருக்கிறான் என்பதைத் தவிர, அவன் அதிகமான துணிகளை எம்முறையிலும் அணிந்துகொள்வதில்லை. ஆனால் அவன் பல்வகை அணிகளாலும் முத்துக்கள், வைரம், வைடூரியம் முதலிய நவமணிகளால் அலங்கரிக்கப்பட்ட ஆபரண வகைகளாலும் மேன்மைப் படுத்தப்பட்டு, பெருமிதத்துடன் காட்சியளிக்கின்றான். மற்றும் அவ்வரசனது கழுத்திலிருந்து மார்புவரை எட்டும்படியான பட்டு நூலில் கோக்கப்பட்ட 104 மணிகள்[1] கொண்ட மாலை பலவகையான வைரங்-

இப்பதியின் மக்களும் அரசனும்

---

[2] நம் நாட்டில் 108 என்ற எண்ணிக்கைக்கே முக்கியத்துவம் நெடுநாட்களுக்கு முன்பிருந்தே கொடுக்கப்பட்டு வந்திருப்பது யாவரும் அறிந்ததே. (1) திருப்பதிகள் 108 (2)

களாலும், கோமேதகங்களாலும் ஆனது. இந்த எண்ணுடைய மணிகளை அரசன் அணிவதற்குக் காரணம் ஒன்று உண்டு. அதாவது அவன் தினமும் தன் தேவதையை மகிழ்விக்க, தான் போட்டுக் கொண்டிருக்கும் ஆரத்தில் உள்ள மணிகளைக் கைகளில் உருட்டிக்கொண்டே அத்தனை தரம் செபிக்கவேண்டும் என்பதே. இன்னும் அவ்வரசனுடைய முன்னோர் இச் செபம் செய்வதினின்று என்றும் தவறியதே கிடையாது என்று பரம்பரை நம்பிக்கை ஒன்று உண்டு. இவ்வாறு தினந்தோறும் செபிக்கப்படும் மந்திரத்தில் காணப்படும் சொற்கள் பகவுதா[1] என்பதாகும். இம்மந்திரச் சொற்களை அவர்கள் தினமும் 104 முறை[2] செபிக்கின்றனர். ஒவ்வொரு தோளிலும் முத்தாலும் வைரத்தாலும் அழகு செய்யப்பட்ட மூன்று பொன் வளையங்களையும் அணிந்திருக்கிறான். காலிலும் மூன்று வேறு வேறான இடங்களிலும், அவ்வாறே பொன் வளையங்களையும் அணிந்திருக்கிறான். அவனது கால்களிலும், கை விரல்களிலும், விலை மதிக்கமுடியாத மிக உயர்ந்த கழல்களையும்

காயத்திரி மந்திரங்கள் செபிப்பது 108. (3) கோவிலில் அர்ச்சனை 108 (4) ஹோமம் செய்வதில் 108 அவிசுகள் (5) பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தலில் 108; ஆக இங்ஙனம் பல. ஆனல் மார்க்கோ போலோ 108 என்பதை மறதியாக 104 என்று கூறுகிறார் போலும்.

[1] பகவுதா-பகவான் என்ற சொல்லின் சிதைவாக இருத்தல் வேண்டும், தெலுங்கில் பகவந்துடு [கடவுள்] என்றிருப்பதை நோக்குக. ஆதலால் கடவுளைக் குறிக்கும் ஒரு சொல்லாக இதைக் கொள்ளவேண்டும். மற்றும் ஒவ்வொரு மந்திரங்களின் பின்பு சொல்லப்படும் "ஓம்" என்னும் பிரணவ மந்திரத்தைக் குறிப்பிடுவதாகவும் கொள்ளலாம்.

[2] 108 என்று இருத்தல் வேண்டும்; மீண்டும் மறதியாக 104 என்று கூறுகிறார்.

மோதிரங்களையும் அணிந்து கொள்கின்றன. அவன் அணியும் முத்துக்களும் இரத்தினங்களும் தன் சொந்த நாட்டின் பொருள் ஆனதால், அவ் வளவு பெருமையாக - அரச சின்னங்களைப் பகட்டாக வெளிக்காட்டிக் கொள்வது அரசனுக்கு மிகமிக எளிதாகவே தோன்றுகிறது.

அரசன் தன்னைச் சுற்றிலும் பற்பல வீரர்களைப் பாதுகாப்புக்காக வைத்திருக்கின்றன. அவர்களுக்கு "வேந்தர்க்கு வேண்டியவற்றை வேண்டியவாறு இம்மையிலும், மறுமையிலும் செய்யும் பக்திகொண்ட பணியாளர்," என்ற விருது அளிக்கப்பட்டிருக்கிறது.

வேந்தன் பணியாளரின் வரலாறு

அவர்கள் அரசனை எப்பொழுதும் —அரண்மனையிலும், நீதித் தலத்திலும், மற்றும் இராப் பொழுதிலும் கூட—காக்கக் கடமைப்பட்டவராவர். அவர்கள் குதிரைமீது இவர்ந்து வருவர். அன்னர் அரசாங்க காரியங்கள் யாவற்றிலும் எல்லாத் துறைகளிலும் அதிகாரம் வகித்து ஆட்சி செலுத்துகின்றனர். அரசன் இறந்ததும் அவன் சடலத்தைக் கொளுத்தும் சடங்கு நடைபெறும். அப்பொழுது, மேற்கூறிய உண்மை மெய்க்காப்பாளர்கள், அரசன் உடல் வேகும் தீயில் திடமனத்துடன் குதித்து, அவ்வரச உடலுடனே தாமும் சாம்பலாகிவிடுவார்கள். இதனால் அவர்கள் அவ்வரசனுடனே வேறு உலகத்துக்குச் சென்று, மீண்டும் அவ்வேந்தன் இவ்வுலகில் பிறந்திடும்போது, அப்பெரும் பணியாளர்களும் அரசனுக்காகவே ஊழியம் செய்யப் பிறந்திடுவார்கள் என்ற திடமான நம்பிக்கை அவர்களுக்கு உண்டு.

பின் வரும் பழக்கமும் அவர்களிடம் காணப்படுகிறது. அரசன் மரணமடைந்தவிடத்து, அவனுக்குப் பிறகு அரச பதவி வகிக்கும் அவன் மைந்தன் தன் தந்தை சேமித்து வைத்த செல்வத்தைத் தீண்டும் வழக்கமே கிடையாது. அவ்வாறு பிறர் சேமித்துவைத்த செல்வத்தால் தான் வாழ்வதாக நாடு நினைப்பது தன் உரிமைக்கும் பெருமைக்கும் இழுக்காகும் என்பதே. மற்றும், தந்தையின் செல்வத்தைத் தனயன் பெருக்கவேண்டியதே தவிர, அதை வைத்துக் கொண்டு வாழ முயல்வது தவறு என்றும் நினைப்பர். இன்னும் தந்தைபோலத் தானும் நிதிச்சாலையை நிரப்பச் சிறந்த முயற்சிகள் யாதும் எடுக்கவில்லை என்ற தவறான எண்ணம் மக்களிடையே ஓங்கி நிற்கும் என்று அதைத் தவிர்க்கவே, தந்தை விட்டுவைத்த செல்வத்தைத் தனயன் தொடுவதில்லை. இத்தகைய சிறந்த மனப்போக்கின் மாட்சிமையால், தலைமுறை தலைமுறையாய், வழி வழியாய்ப் பெருஞ்செல்வம் சந்ததிகளால் சேமிக்கப்படுகிறது என்ற கொள்கை பலராலும் போற்றப்பட்டு வருகிறது.

தன் முயற்சியே சிறந்தது

இங்நாட்டில், குதிரைகள் பிறந்து வளர்க்கப்படுவதில்லை. அனேகமாக இங்நாட்டில் குதிரைகள் பிறக்கவும் விடுவதில்லை. அரசனும், அவனுடைய மூன்று அரசியல் சகோதரர்களும் ஆர்மஸ்,[1] தியூபார்,[2] பெசர்,[3] ஆதென்,[4] என்ற துறைமுகங்களிலுள்ள வணிகர்களிடமிருந்து குதிரைகளை வாங்கப் பெருவாரியான தொகை-

குதிரை வாணிபம்

[1] Ormus [2] Diufar [3] Pecher [4] Aden

யைச் செலவிட்டுநல்ல குதிரைகளை நாட்டின் நலத்துக்காகத் திரட்டிவைக்கிறார்கள். இவர்கள் இவ்வாறுக ஐயாயிரம் குதிரைகள் வரை இறக்குமதி செய்து, ஒவ்வொரு குதிரைக்கும் ஐந்நூறு சாகி[1] என்ற அளவுள்ள பொன்னைப் பெற்று வியாபாரத்தில் பெருத்த ஊதியத்தை நியாய முறைகளால் அடைகிறார்கள். இவ்வாறு வாங்கப்படும் ஐயாயிரம் உயர்ந்த குதிரை களுள், அவற்றைச் சரியாகப் பாதுகாக்கும் காவலாளர் அருகிப்போவதாலும், அவைகளுக்-குக் கொடுக்கப்படும் மருந்து வகைகள் கிடைக் காமல் போவதாலும், ஏறக்குறைய மூந்நூறு குதிரைகளே எஞ்சி நின்றன. அதன் காரணமாக, புதியனவாகப் பல குதிரைகள் வாங்கும் அவசியம் உண்டாகிறது. ஆனால் அராபுநாட்டுக் குதிரை-கள் இந்த நாட்டுச் சீதோஷ்ண நிலை ஒத்துக்-கொள்ளாமல் இறந்துவிடுகின்றன என்றே நான் எண்ணுகிறேன். அதன் காரணமாக இங்நாட்டிலேயே, குதிரை வளர்ப்பு வகைகள் கடை முறையில் ஏற்றுக்கொள்ளாமல் கைவிடப் பட்டன. குதிரைகளை வளர்ப்பதும், வாழவைப்-பதும் முடியாத காரியமாகவே விளங்குகிறது. அவைகளின் தீனிக்கு இறைச்சி கலந்த அரிசிச் சோற்றையும், வேறு சில தீனிகளையும் கொடுக்-கின்றனர். ஏனெனில், அரிசியைத் தவிர வேறு தானியங்கள் இங்குப் பயிரிடப்படுவதில்லை. இந்-நாட்டில் பிறக்கும் குதிரைக் குட்டிகளின் கால்கள் நீண்டும், வயிறு பெருத்தும், அழகற்றனவாய், சவாரி செய்யப் பயனற்றனவாய்ப் பிறக்கின்றன. இம் மாபர் நாட்டின் மண்வாசியே இதற்கு முக்கிய காரணமாகும்.

---

[1] Sagi-ஒன்றரை ரூபாய் பெறுமானமுள்ள ஒருநாணயம்.

இவ்விடங்களில் பின்வரும் வியப்பிற்குரிய வழக்கம் நடைமுறையிலிருந்து வருகிறது. குற்றஞ் சாட்டப்பட்டவன் நீதித் தலத்தில் மரண தண்டனை அளிக்கப்பட்டவுடன், கொலைக் களத்துக்கு அழைத்துச் செல்லப்படுவான். அப்பொழுது, தனக்குகந்த தெய்வத்துக்காகத் தன்னைப் பலிகொடுக்க விரும்பினால், அச் செய்தியை அவன் முன்னதாகவே தெரிவித்து விடவேண்டும். இதையறிந்த அவனுடைய உற்றாரும், பெற்றாரும், உறவினரும், நண்பரும் ஒருங்கு சேர்ந்து அவனைத் தனிப்பட்ட ஒருவகை நாற்காலியில்உட்காரவைத்து, கூராக்கப்பட்ட-உறுதியும், கொடுமையும் வாய்ந்த-பன்னிரண்டு கத்திகளை அவன் கையில் கொடுப்பார்கள். இவ்வேற்பாடுகளுடன் அக்குற்றவாளியை அவர்கள் நகரத்தைச் சுற்றி ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். எடுத்துச் செல்லுகையில், அவர்கள் உரத்த குரலில் "இந்த வீரப் பெருமகன் தன் தெய்வத்தின் மீதுள்ள தீவிர பக்தியால் தன்னைத்தானே பலியாகக் கொடுக்க முன் வந்திருக்கிறான்," என்று கூச்சலிட்டுக் கும்பல் கூடிச் செல்வார்கள்.

தண்டனை நிறைவேற்றும் முறை

கொலைக்களத்தை யடைந்ததும், அக் குற்றவாளி தன் கைகளில் கொடுக்கப்பட்ட பன்னிரண்டு கத்திகளில் இரண்டினை எடுத்துக் கையில் பிடித்துக் கொண்டு "என் தெய்வத்துக்காக என்னை அரிய பலியாக அர்ப்பணிக்கிறேன்," என்று உரத்த குரல் எழுப்பி, ஒவ்வொரு கத்தியையும் தனது ஒவ்வொரு தொடையிலும் வேகமாகவும், சுருக்கெனவும் குத்திக்கொள்வான். பிறகு இரண்டு கத்திகளை எடுத்து, அவற்றைத் தனது ஒவ்வொரு

கைகளிலும் ஏற்றிக்கொள்வான். இதேவிதமாக, வயிற்றிலும், மார்பிலும் குத்திக்கொள்வான். ஒவ்வொரு செயலிலும், தான் முன்பு அறைகூவின அதே சொற்களை உரக்கக் கத்துவான். எஞ்சி நிற்கும் கத்திகளை எடுத்து உடலின் பல்வேறு பாகங்களிலும் இவ்வாறு பாய்ச்சிக்கொண்டு, கடைசியாக எஞ்சி நிற்கும் கத்தியினை எடுத்துத் தன் இருதயத்தில் மிக வேகமாகச் செலுத்தி, உடனே மாண்டு போவான்.

இக்காட்சி நடந்தேறியதும், இறந்தவனுடைய சுற்றத்தினர் ஆணும் பெண்ணும் ஒருங்கே இறத்தல்

அவனுடலைக் கொளுத்துவதற்கு எக்காளத்தோடும் ஆரவாரத்தோடும் எடுத்துச் சென்று, மயானத்தில் கொண்டு சேர்ப்பர். இறந்தவனுடைய ஆருயிர் மனைவி, தன் கணவன் மீது கொண்ட அன்பின் மேலீட்டால், எரியும் தீயில் துண்ணென விழுந்து தானும் தன் கணவன் சடலத்துடன் சாம்பலாகி விடுவாள். இத்தகைய திண்மையான கற்பினுக்கு எடுத்துக்காட்டாய் நிற்கும் பெண் திலகங்களைச் சமுகமும் சீரிய முறையில் பாராட்டுகின்றது. ஆனல் அதற்கு மாருக, அத்தகைய உடன்கட்டை ஏற மனமில்லாது வாழும் பெண்களைச் சமூகம் அவமானத்துக் குள்ளாக்கி, அழியாப்பழிக்கு ஆளாக்கிவிடுகிறது."

---

3. மாபர் நாட்டில் மக்கள் வாழ்க்கை

பலவகைப் பண்பாடு

"இம்மாபர் நாட்டில், விக்கிரகங்களையும் சிலைகளையும் வணங்கும் ஆதி வாசிகளில் பெரும்பாலோர் மாட்டினிடம் பயபக்தி காட்டி, அதற்கு மரியாதை செய்வர். எந்தக் காரணம் கொண்டும், அவர்கள் மாட்டிறைச்சியை உண்ணும்படி செய்வது அரிதினும் அரிதே. ஆனால், அக்குடிகளில் "கவுஇ"[1] என்று தனிமையான ஓர் சாதியார் காணப்படுகின்றனர். அச்சாதி மக்கள் மாட்டின் இறைச்சியைத் தின்றாலும், அவ்விலங்கை எவ்வாற்றானும் கொல்ல மனம் ஒருப்படுவதில்லை. ஆயினும் இயற்கையாகவோ அல்லது வேறு விதத்தாலோ இறந்து கிடக்கும் அம்மாட்டின் சடலத்தை அக் 'கவுஇ'க்கள் சமைத்து உண்பார்கள். எச்சாதி மக்களும் பசுமாட்டுச் சாணத்தைக்கொண்டே வீட்டை மெழுகுவார்கள். தரைமீது உட்காரும்போது பாயோ, அல்லது சமுக்காளமோ விரித்து உட்காருவார்கள். அவ்வாறு உட்காருவதின் காரணத்தை

---

1. GAUI—"கவுஇ"-மாடு தின்னும் புலையரைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். கோஹத்தி, கோமாரா என்பன பசுவின் தொடர்பைக் கொண்ட சொற்கள். தமிழில் கோன், கோபாலன் என்ற வடமொழிப் பிறந்த சொற்களும் 'கோ' என்ற சொல்லின் அடிப்படையாகப் பிறந்த சொற்களே. ஆக, 'கோ உரி' என்ற சொல் (பசுத் தோல் உரிப்பவர் என்று பொருள்) சிதைந்து கவுஇ என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். மற்றும், 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்' என்று திருநாவுக்கரசர் தனித்திருத் தாண்டகத்தில் கூறியிருப்பதும் நோக்கத் தக்கது.

வினவின், அதற்கு அவர்கள், "பூமியினின்றும் நாம் தோன்றி, அப் பூமிக்குள்ளேயே கடைசியில் மண்ணோடு மண்ணாக மறைந்து போவதால், பூமிக்குத் தகுந்த மரியாதை கொடுத்தல் நமது கடமையாகும். மற்றும், அது நம் தாய் போல் ஆவதால், அதன்மீது ஆசனமில்லாது உட்காருவது பெருங்குற்றமாகக் கருதப்படும். ஆகையால், தரைமீது ஆசனமிட்டு அதன்மீது உட்காருவது மிகப் பெருமைதரும் செயலும், நம் நாட்டுப் பண்பாடும் ஆகும்," என்று காரணங் கற்பிப்பர்.

அக் 'கவுஇ'க்களும் அவர்களுடைய இனத்தவர்களும் இறைவன் இயல்பை எடுத்துரைத்த தாமஸ் முனிவரைக் கொன்றவர்திட நம்பிக்கை களின் வர்க்கத்தில் வழிவந்தவர்களே. இக் காரணம் பற்றி அவ்வினத்தாரில் எவரும் அருளடைந்த திருமேனி அடக்கம் செய்யப்பட்டிருக்கும புனித கட்டிடத்திற்குள் நுழைய முடியாது. திண்மை வாய்ந்த பத்துப் பெயர்கள் தங்கள் பலமெல்லாம் கொண்டு அவர்களில் ஒருவனை உள்ளே பிடித்துத் தள்ளினாலும், தெய்வாம்சம் அடைந்த அத்தாமஸ் முனிவரது புனித சடலத்தின் ஆற்றல் அவனை வெளியே சுருக்கெனக் கொணர்ந்து தள்ளிவிடும்.

இங்நாடு அரிசியும், எள்ளும்[2] தவிர வேறெதை

---

1 Saint Thomas 2 Sesame என்று அவர் எழுதியிருக்கிறார். திலம் என்பது எள்ளைக் குறிக்கும் சமஸ்கிருத மொழி. அது ஹிந்துஸ்தானி மொழியிலும் இடம் பெற்றுள்ளது; எண்ணெயை உண்டாக்க உதவும் 'எள்' என்ற தமிழ்ப்பதமும் 'தில்' என்ற பிறமொழிப் பதமும் Sesame என்றதையே குறிக்கிறது.

யும் விளைவிப்பதில்லை. ஆடை எதுவும் அதிகம் அணிந்துகொள்ளாமல் ஈட்டியும், கேடயமும் தாங்கி, அம்மக்கள் மெதுவாகப் போருக்குப் புறப்படுவர். அதனால் அவர்கள் போர் என்றாலே பின் வாங்கும் கோழைச் சாதியினர் ஆவர். எந்த விதமான பிராணியையும் உணவுக்காகக் கொல்வது அவர்களுக்கு வழக்கமில்லை. ஆனால் அவர்கள் ஆடு, பட்சி முதலியவைகளின் இறைச்சியை உண்ண விரும்பின், அத்தகைய வழக்கிற்குப் புறம்பான சாரசன்[1] என்ற துருக்கியர்களை அவ்வகைத் தொழிலிற்குப் பயன்படுமாறு அமர்த்திக் கொள்வார்கள்.

கோல்வதில்லை; தின்பதுண்டு

உடற் சுத்தம்

ஆண்கள் பெண்கள் என்னும் இருபாலரும் தங்கள் உடலின நாள்தோறும் இருமுறை காலையிலும் மாலையிலும் தேய்த்துக் குளிப்பர். இத்தகைய குளித்தல் முடிவு பெறுத வரையில், அவர்கள் அருந்துவதோ அல்லது உண்பதோ கிடையாது. இத்தகைய வழக்கத்தையும் விதியையும் நடைமுறையில் கையாளாதவர்கள் மதத்தை அவமதித்த சண்டாளர்களாகக் கருதப்படுகின்றனர்.

உணவருந்தும் வகை

ஒன்றை மட்டும் சற்று நோக்குங்கள். அவர்கள் உணவருந்தும்போது, தங்கள் வலக்கை ஒன்றினை மட்டுமே பயன்படுத்துவார்களே யன்றி, தமது இடது கையால் உணவை எக்காரணத்தாலும் எப்பொழுதும் தொடவே மாட்டார்கள். தூய்மை பொருந்திய மேன்மையான காரியங்களுக்கெல்லாம் வலது கையையும்,

---

1 Saracen - சிரியா நாட்டுத் துருக்கிய சாதியினர்.

மற்றைய இழிவான காரியங்களுக்கு இடது கையையும் உபயோகப்படுத்துவர்.

நீர் பருகும் முறை

ஒவ்வொருவரும் தமக்கென வைக்கப்பட்டிருக்கும் தனியான செம்பிலிருந்தே தண்ணீர் பருகுவர். ஒருவன் தண்ணீர் அருந்தின பாத்திரத்தை மற்றவன் உபயோகிக்க மாட்டான். நீர் பருகும் போது, அவர்கள் பாத்திரத்தை நேரடியாக வாயில் வைத்துக் குடிப்பதில்லை. ஆனால், அதைத் தங்கள் தலைக்கு மேலாகப் பிடித்துக்கொண்டு, பாத்திரத்தில் இருக்கும் பானத்தை நேரடியாக வாயின் வழியாகத் தொண்டைக்குச் செல்லுமாறு தூக்கிக் குடிக்கின்றனர். இதனால் அப்பாத்திரம் எச்சில் படுவதில்லை. அயலான் எவனுக்காகிலும் அருந்த நீர் கொடுக்கவேண்டுமாயின், அப்பாத்திரத்தை அவன் கையில் கொடுத்து விடுவதில்லை. அவனுக்குச் சொந்தமாகப் பாத்திரம் யாதொன்றும் இல்லாத விடத்து, பானத்தை அவனது குவித்த கைகளில் ஊற்ற, அதை அவன் கிண்ணத்திலிருந்து குடிப்பது போல் குடிப்பான்.

கடன்பட்டார் கடமை

குற்றங்களுக்கு விதிக்கப்படும் தண்டனைகள் மிகக் கடுமையாகவே இருக்கும். சிறந்த நீதி செலுத்தப்பட்டு அத் தண்டனை பிறர்க்கும் ஓர் எடுத்துக் காட்டாயும், அச்சத்தை விளைவிப்பதாயும் இருக்கும். "கடன்காரர்" என்ற முறையில் அவர்களிடம் பின்வரும் வழக்கம் காணப்படும்:

தான் கொடுத்த கடனை உடனே திருப்பித் தந்துவிடல் வேண்டுமென்று கடன்கொடுத்தோன் கடன் பட்டவனைத் தொந்தரவு செய்வான். கடன் பட்டவனே, தான் பெற்ற கடனை அதிவிரைவிலே கொடுத்து விடுவதாகவும் சொல்வான். ஆனால் வாங்கிய கடனை மட்டும் திருப்பிக் கொடுக்கமாட்டான். இத்தகைய இக்கட்டான நிலைமையில், கடன் கொடுத்தவன், கடன் பட்டவனைப் பின்தொடர்ந்து சென்று, தேடிக் கண்டு பிடித்து, அவன் நிற்கும் இடத்தைச் சுற்றி ஒரு வளையம் கீறி, அப்பொய்யனைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்டது போல், அவனைத் தானிட்ட கோட்டைத் தாண்டிச் செல்லாதவாறு செய்துவிடலாம். கடன்காரன் அவ்வமயம் கடன் கொடுத்தவனுக்குத் தகுந்த நபர் சாமீனே அல்லது கடனையோ திருப்பிக்கொடுத்த பிறகுதான் அவன் கீறிய கோட்டினைத் தாண்டி வெளிவரவேண்டும். அவ்வாறின்றி, கடன்பட்டான் கீறிய கோட்டைத்தாண்டிச்செல்ல முயன்றாலும், அதிலிருந்து தப்பியோட முயன்றாலும், அவன் சட்டத்தின் நியாயவரம்பினைத் தகர்த்து எறிந்தவனாகக் கருதப்பட்டு, கொலைத் தண்டனைக்கு அரசனால் உட்படுத்தப்படுவான்.

அயல் நாட்டில் வியாபாரம் செய்து வந்த வணிகன் ஒருவனுக்கு அரசன் சிறிது தொகை கொடுக்க வேண்டியிருந்தது. கடனாளியைப் அதை அவ்வணிகன் அரசனிடம் பற்றிய உண்மை பலமுறை கேட்டும் அதற்கு அரசன் கொடுவா ளை வேண்டுமென்றே தள்ளிவைத்துக் கொண்டு வந்தான். ஒரு நாள் அவ்வரசன் குதிரை

நிகழ்ச்சி

மேல் சவாரி செல்லும்போது, அச்சமயத்தை நன்கு பயன்படுத்திக் கொண்ட கடன் கொடுத்த வணிகன், அரசனையும், அவன் ஏறிவந்த குதிரையையும் சுற்றி ஒரு வட்டம் வரைந்தான். வணிகன் தனக்கு என்ன செய்தான் என்பதையறிந்ததும், அரசன் அவ்விடத்தை விட்டுப் பெயராமல் அங்கேயே நின்று விட்டான். மற்றும் அவ்வணிகனது கோரிக்கைகள் யாவும் நிறைவேறு மட்டும், அக்கோட்டினின்றும் சிறிதும் பெயர்ந்தானில்லை. அங்குக் கூடி நின்ற மக்கள் அப்பொழுது நடந்த விவரத்தை யறிந்து, ஆச்சரியமடைந்தனர். அவ்வரசன் தானே அறச் சட்டத்துக்கு உட்பட்டு நடந்துகொண்டதால், "நிலையாய அறவோன் என்ற பட்டத்துக்கு அவ்வரசனே உரியவனுவான்," என்று மக்கள் வியந்து புகழ்ந்து போற்றினர்.[1]

குடித்தல் தவிர்த்தல்

இந்நாட்டு மக்கள் திராட்சைப் பழத்திலிருந்து வடித்தெடுக்கப்பட்ட சாராயத்தையோ, பானத்தையோ அருந்துவதில்லை. இவ்வாறு எவனுகிலும் குடிப்பது கண்டுபிடிக்கப்பட்டு விட்டால், அவன் செயலை மிகவும் இழிவானதாகக் கருதி, அவன் கொடுக்கும் சாட்சியத்தை நீதி

---

1 மார்க்கோ போலோ தம்முடைய சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்லும்பொழுது, இந்நாட்டில் தங்க நேர்ந்தது. அவ்வமயம் இத்தகைய நிகழ்ச்சி ஒன்றினை அவர் தம் கண்களால் காண நேரிட்டது.

மன்றத்தில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அடிக்கடி கடல்மீது அயல்நாட்டுக்குச் செல்பவர்களும் இவ்வாறுகவே இழிவாகக் கருதப்படுகின்றனர். எவ்வித நிலையும், கதியும் அற்றவர்களே இத்தகைய கடல் யாத்திரை செய்வார்கள். ஆதலால், அவர்களுடைய சாட்சியம் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல என்று மக்கள் மனத்தில் உறுதியாய் நம்பியிருந்தனர்.

மற்றும், அவர்கள் பரத்தையருடன் வாழும் ஒழுக்கத்தைக் குற்றமெனக் கருதுவதில்லை. இந்நாட்டின் சீதோஷ்ண நிலை மிகவெப்ப முள்ளதாக இருப்பதால், இங்கே மக்கள் அநேகமாக அரை நிர்வாணமாகவே போவார்கள். ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்கள் தவிர, ஏனைய காலங்களில் மழை என்பதே கிடையாது. இம் மூன்று மாதங்களிலேனும் மழையால் காற்று குளிர்ந்து வீசவில்லை யென்றால், இங்கு உயிர் வர்க்கமே பிழைத்திருக்க முடியாது.[1]

மனித வர்க்கத்தின் குணாதிசயங்களையும், அவர்களின் நற்போக்கு, தீயபோக்கு ஆகியவற்றையும் பாகுபடுத்தி அறிவிக்கும் உடலியல் கலை "சாமுத்திரிகா கலை" அல்லது உடலியற்கலை என்னும் சாத்திரத்தில் வல்லுனர் பலர் இருக்கின்றனர். ஆணாகிலும், பெண்ணாகிலும் எதிரே வர நேர்ந்தால், இக்கலை நுட்பத்தால், அவர்களுடைய குண குணங்களை அக்கலை வல்லுனர் உடனே கூறுவர். மற்றும்,

---

1 மலையாள நாட்டு நிலவரத்தைக் கவனக் குறைவினால் இந் நாட்டிற்கு ஏற்றிக் கூறுகிறோம்போலும்.

சிற்சில பறவைகளும், விலங்குகளும் எதிர்ப்படுவதனால் சம்பவிக்கும் நிகழ்ச்சிகளை நன்கு அறிந்து எடுத்துரைப்பர். பறவைகளின் பறக்கும் செயலை, உலகத்தில் உள்ள மக்கள் யாவரையும்விட, அவர்கள் உன்னிப்பாக ஆராய்ந்து, அதன் விளக்கத்தைக் கூறும் சக்தி பெற்றவர்களாவார்கள். அதன் காரணமாக, இனி நிகழப்போகும் நன்மையையோ, கேட்டினையோ அக்கலை வல்லுனர் முன்னதாகவே நன்கு எடுத்துரைப்பர்.

சோதிடக்கலைக் குறிப்புக்கள்

வாரத்தின் ஒவ்வொரு தினத்திலும் ஒரு குறிப்பிட்ட மணியைக் கெடுதல் விளைவிக்கும் "கேடுள்ள காலம்" என்று அழைப்பர். அக்கேட்டினை விளைவிக்கும் மணியை-நேரத்தைச்-சோயியாச்[1] என்ற பெயரால் அழைக்கின்றனர். உதாரணமாக திங்கட்கிழமை யன்று மி-டியர்ஸ்[2] என்ற கால அளவு ஆரம்பமாகும் வேளை காலை ஒன்பது மணி

---

1. Choiach (or) Koiah - இது வட மொழியில் உள்ள தியாச்சியம் என்ற சொற்பொருளின் சிதைவு. இப்பொழுது இது இராகுகாலம் என வழங்கப்படுகிறது. இராகுவும், கேதுவும் சாயாக் கிரகங்களாகக் கருதப்படுகின்றன. அதுவும் இராகுவுக்குச் சோதிடத்தில் முக்கியமான இடம் உண்டு. ஆகவே சாயா – தியாச்சியம் என்பதையே (அதாவது சாயா கிரகமான இராகுவினது தியாச்சியம் என்று பொருள்) சோயியாச் என்று அவர் உச்சரிப்புத் தெரியாமல் எழுதியிருக்கவேண்டும்.

2. Mi - Tierce - அதாவது Merza - Terza என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் சிதைவு. அதுவே Medium - Tertia என்று பின்னர் வழங்கப்பட்டது. Media - Tertia என்றால் 9 மணிக்கு மேல் பகல் 12 மணி வரையிலும் உள்ள காலத்தின் அரைப்பாகம். ஆக, அத்தீய காலம் காலை 9 முதல் 10-30 வரையிலும் என்று கொள்ளப்பட்டது பொருத்தமானதே.

ஆகும். செவ்வாய்க் கிழமையில், டியர்ஸ்[1] என்ற கால அளவு அன்று நடுப்பகல் மூன்று மணிக்கு மேல் ஆரம்பமாகும். ஆக இத் தியாச்சிய காலங்களில் மறந்தேனும் நல்ல காரியங்களை ஆரம்பம் செய்யமாட்டார்கள். அச்சமயம் பண்டங்கள் வாங்கப்படுவதும் கிடையாது; விற்கப்படுவதும் இல்லை. வாணிபத் தொடர்பு ஏதும் வைத்துக் கொள்ளப்படுவதில்லை. ஏனெனில், அக் காலத்தில் செய்யப்படும் காரியங்கள் நன்றாக முடிவதில்லை என்ற நம்பிக்கை பெருவாரியான மக்களுக்கு உண்டு. அதே விதமாக, ஒவ்வொரு நாளின் நன்மை தீமைகளும் பற்றி அவ்வாண்டு முழுவதற்கும் தங்கள் புத்தகத்தில் எழுதி வைத்திருப்பார்கள்.[2]

இப்பொழுது இன்ன மணி என்பதை, செங்குத்தாய் நிற்கும் ஆளின் நிழலைக் கொண்டு அளந்து அறிகிறார்கள். பிறக்கும் குழந்தை ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, அது பிறந்ததும், தாயோ, தந்தையோ, அக் குழந்தை பிறந்த கிழமை, சந்திரன் வயது அல்லது திதி, மாதம், மணி முதலியவற்றைப் பற்றிய குறிப்புக்கள்[3]

---

1. Tierce - இச்சொல் Tertia என்பதின் சிதைவு. இது ஒரு நாளின் பிற்பகுதியின் பாகுபாட்டைக் குறிக்கும் சொல்லாகும். அதாவது மாலை மூன்றிலிருந்து ஆறு வரையில் உள்ள காலத்தின் பாதிப் பாகம். சரியாக 3 முதல் $4\frac{1}{2}$ வரை எனக்கொள்ளலாம்.

2. நாம் இப் புத்தகத்தை இப்பொழுது "பஞ்சாங்கம்" என அழைக்கின்றோம்.

3. நாம் இதை "ஜாதகம்" என்னும் பெயரால் அழைக்கின்றோம்.

எழுதிவைப்பார்கள். சோதிடக் கலையால், தங்கள் வருங்கால வாழ்க்கையை நன்கு தெரிந்து கொள்ளலாம் என்று அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளதால், இவ்வாறு அவர்கள் சனனக் குறிப்புக்களைக் குறித்து வைத்துக்கொள்கின்றனர். சோதிடக் கலையில் அவர்களுக்குப் பூரண நம்பிக்கை உண்டு. அதில் வல்லுனர் பலர் இருக்கின்றனர். அவர்களுக்கு என்றுமே அழைப்புக்கள் ஆங்காங்கிருந்து வந்து கொண்டிருக்கும். ஈவக்கிரகங்கள் யாவும் தெய்வாம்சம் பொருந்தினவை என்ற திட நம்பிக்கை அவர்களுக்கு உண்டு.

சிறுவரின் போறுப்பு

பெற்றோர், தம் மகனுக்குப் பதின்மூன்று வயது ஆனவுடன் அவனைத் தன் விருப்பப்படியே வெளியே செல்லவும், சொந்த வாழ்க்கைக்கு அடிகோலி அமைக்கவும் விட்டுவிடுகின்றனர். தன் பெற்றோருக்குப் பாரமாக அமைந்து அவன் வாழவேண்டுமென்றே நியதி இல்லை. அக்குமாரனுக்கு இருபது முதல் இருபத்து நான்கு குரோட்ஸ்[2] பெறுமான நாணயங்களைக் கொடுத்து அதனை முதலீடாக வைத்து, வியாபாரத்தில் ஈடுபட்டுப் பொருள் ஈட்டுமாறு ஏற்பாடு செய்கிறார்கள். அவ்வாறு அனுப்பப்பட்ட குமாரர்கள் அல்லது இளைஞர்கள் ஓரிடத்தில் சில பொருள்களை வாங்கியும், அதை

---

1 இவ்வயது 18 ஆக இருத்தல் வேண்டும்; 13 என்று தவறுக எழுதுகிறார் போலும்.

2 Groats - அணா நான்கு மதிப்புள்ள பழைய நாணயம். இப்பொழுது அது உபயோகத்தில் கிடையாது. இத்தாலிய-ஆங்கிலச் செலாவணியில் அதன் பெறுமானம் நான்கு பென்னியாகும். அதுவும் இப்பொழுது உபயோகத்தில் இல்லை.

வேறோரிடத்தில் சிறிது இலாபம் வைத்து விற்றும் வாணிபம் செய்து கொண்டிருப்பதை எக்காரணத்தாலும் நிறுத்துவதே கிடையாது.

இளைஞர் செய்யும் வாணிபம்

கடலில் முத்துக் குளித்தல் நடைபெறும் சமயத்து இவர்கள் கடற்கரைக்குச் சென்று பரதவரிடமிருந்தோ, அல்லது அங்குள்ள பிறரிடமிருந்தோ, ஐந்து ஆறு அல்லது தங்களுடைய தகுதிக் கேற்றவாறும் அதற்கு மேலாகவும் சிறு முத்துக்களை விலைக்கு வாங்குவார்கள். அவ்வாறு விலைக்குப் பெற்ற முத்துக்களை, சூரியனுடைய வெப்பத்துக்குப் பயந்து வெளியே வராது தங்கள் வீட்டினுள்ளே பதுங்கிக் கிடக்கும் பணம் பெருத்த வியாபாரிகளிடம் கொடுத்து, "இவ்வருமை முத்துக்களை அதிக விலை கொடுத்து நாங்கள் வாங்கி வந்திருக்கிறோம். அதற்குச் சிறிது இலாபம் வைத்துக் கொடுத்தால் அதுவே எங்களுக்குப் போதுமானது. இவற்றைத் தயவு செய்து தாங்களே எடுத்துக் கொள்ள வேண்டும்," என்று சொல்லி, தாங்கள் கொடுத்த பணத்துக்கு மேல் சிறிது தொகையை இலாபமாகப் பெற்றுத் திரும்புவர். இதே மாதிரியாக அச்சிறுவர் மற்றைய பண்டங்களிலும் பொருள்களிலும் வாணிபம் செய்து பொருள் திரட்டுவார்கள். மற்றும், அந்த இளைஞர்கள் வாணிபத்தில் நல்ல அனுபவம் பெற்று விரைவில் திறம் பெற்ற வணிகர்களாக விளங்குவார்கள். அன்றுட வாணிபம் முடிந்தவுடன், தாங்கள் பெற்ற இலாபத்தில் உணவுக்கு வேண்டிய பலவகைப் பண்டங்களை வாங்கி, அவைகளைத் தங்கள் தாய்மார்களிடம் எடுத்துச்

சென்று, உண்டி சமைத்துப் போடச் செய்து உண்பர். ஆனல் அவர்கள் தங்கள் தகப்பனூரின் செலவில் ஒருபோதும் உண்பது கிடையாது.

பல்வகைப் பட்சிகள்

இங்நாட்டில் மட்டுமல்ல –பொதுவாகப் பரந்த இந்தியா முழுவதிலுமே - நம் நாட்டில் இருக்கும் பட்சிகள், மிருகங்கள் போல் – இருப்பதில்லை. ஆனல் குயில் மட்– டும்தான் அதற்கு விதிவிலக்கு. அதுமட்டும் நம் நாட்டில் உள்ளது போன்றே தோற்றம் அளிக்கிறது. கழுகினையொத்த அளவு உள்ள வௌவால்கள் நிறைய காணப் படுகின்றன. கழுகுகளும் காக்கையைப் போல் கருநிறமுடையனவாகத் தோற்றமளிக்கின்றன. அவைகள் மிகப் பெரியனவாகவும், மிக வேகமாகப் பறக்கக் கூடியனவாகவும், தங்கள் உணவுக்காகப் பாய்ந்து விழும் சிறு பட்சி வகைகளைப் பிடிப்பதில் சற்றும் தவருமலும் இருக்கின்றன.

ஆண்டவர்க்கு அருளப்படும் பெண்கள்

இங்நாட்டுக் கோவில்களில், ஆண் வடிவமும், பெண் வடிவமும் கொண்ட விக்கிரகங்கள் பல இருக்கின்றன. மக்களில் சிலர், தாங்கள் பெற்றெடுத்த பெண்– களை இவ்விக்கிரகங்களுக்கு என விட்டு விடுவதும் உண்டு.[1] அவ்– வாறு கடவுள் பணிக்கென அர்ப்– பணித்த பின், அக்கோயிலின் பூசாரி, கடவுளின் கட்டளைகளை முற்றுவிக்கக் கூப்பிடும்போதெல்–

---

1. இவர் நாட்டின் ஒருசிறுபான்மைக் கூட்டத்தினரின் வழக்கத்தைத் தெரிவிக்கிறூர். இவ்வழக்கமே, பிற்காலத்தில் "கோயிற்குப் பொட்டுக் கட்டுதல்" என்ற சடங்காக மாறி விட்டது.

லாம், அப்பெண்கள் முறையாக நடந்து பணி-யாற்ற வேண்டும். அத்தகைய கடவுள் பணி நிறைவேற்றுஞ் சமயங்களில் இசைக் கருவிகளை முழக்கிக் கொண்டும், துதிகளைப் பாடிக் கொண்-டும் அவர்கள் அங்கு நடக்கும் திருவிழாவில் கலந்து கொண்டு, அதைச் சிறப்பிக்கச் செய்வர். அத்தகைய இள நங்கையர்கள் பற்பலர் சிறு சிறு குழுக்களாக அமைகின்றனர்.

அவர்கள் வாரத்தில் பலமுறைகள் விக்கிரகத்துக்கென வழங்கப்படும் வளமான உணவுப் பலிகளைத் தாங்கள் வழிபடும் கோயில் பூஜை விக்கிரகத்தினிடம் எடுத்துச் செல்கின்றனர். அவர்கள் இவ்-வாறு அளிக்கும் உணவை அவ்விக்கிரகங்கள் உண்மையில் உண்பதாக ஐதிகம் உண்டு. அவ்வுணவைப் பரப்பி வைக்க மேசை யொன்றும் விக்கிரகத்துக்கு எதிராக வைக்கப்பட்டிருக்கும். இப்பூசை வேளையில் அப்பெண்கள் இடை-விடாது ஆடிக் கொண்டும், பாடிக்கொண்டும், வேண்டிய பல முத்திரைகளால் அபிநயங்காட்டி அணி செய்து நிற்பர்.[1] நல்ல வயதும், வசதியும் உள்ள ஒருகனவான் தன் முன்னிலையில் வைக்கப்-பட்டிருக்கும் பல்வகை உணவை உண்ண எவ்-வளவு நேரமாகுமோ, அவ்வளவு நேரம்வரை மேற் கூறிய நடன விருந்து நடந்து கொண்டே யிருக்-கும். நடத்தப்பட்ட உபசாரத்தில் விக்கிரகங்களின் ஆவி ஆறுதல் அடைந்ததாக அவர்கள் முடிவில்

---

1. மார்க்கோ போலோ தாம் நேரில் கண்ட பரத நாட்டி-யத்தின் வரலாறு போலும்.

பறை சாற்றுவார்கள். பிறகு அதைச் சுற்றி வலையமாக நின்று ஒவ்வொருவரும் அவரவருடைய முறை வந்ததும் உண்பார்கள். உண்ட பிறகு, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டுக்குக் கொண்டாட்டமாகவும், குதூகலமாகவும் செல்வார்கள்.

இவ்வாறு இளைஞங்கையர்கள் குழுக்களாகச் சேர்ந்து நடத்தப்படும் வழிபாட்டிற்கு அவர்கள் கூறும் காரணம் இதுவே: அர்ச்சகரோ அல்லது பூசாரியோ கூறுகிறார்: "ஆண் தெய்வம் பெண் தெய்வத்தோடு மன வேறுபாடடைந்து, அதனோடு பேச மறுக்கிற படியால், அத்தெய்வங்களிடையே மன ஒற்றுமையையும், அமைதியையும் நிலைநாட்ட ஏற்பாடுகள் எவையேனும் செய்யாமற்போனால், அத்தேவதைகளின் ஆசியும் அருளும் கிடைக்காமலேயே போய்விடும். தேவ அருள் நின்றவிடத்து, மடங்களின் மகத்துவம் குறையும்; கடைசியாக அவைகள் பாழடைந்துவிடும். எனவே, தெய்வ அருளைப் பெறுவதற்கு இத்தகைய வழிபாடு இன்றியமையாதது," என்பதே.

வழிபாட்டின் காரணம்

இந்நாட்டு மக்கள் இலேசான பிரம்புவேலைப்பாடுகளால் ஆன பாய்களை அல்லது கட்டிலைத் தங்கள் படுக்கையாகப் பயன் படுத்துகின்றனர். அப் படுக்கையைச் சுற்றிலும் ஒரு விசித்திரமான சூத்திரமொன்றை இயையுந் தன்மையுடையது. கட்டிலில் படுத்துத் தூக்கம் வரும் சமயத்தில் அச்சூத்திரத்தில் கட்டப்பட்டிருக்கும் கயிற்றைப் பிடித்து இழுத்

உறங்கும் முறை

தால், கட்டப்பட்டிருக்கும் திரையானது அக்கட்டிலைச் சுற்றி மூடிக்கொள்ளும். கொசு, ஈ முதலிய சீவன்களின் தொந்தரவுகளினின்றும் பாதுகாத்துக் கொள்ளவும், நீர்மண்டலி முதலிய கொடிய சந்துக்கள் படுக்கையுள் நுழைந்து தீங்கு விளைவியாதவாறு தடுக்கவும் இவ்வாறு திரையமைக்கின்றனர் போலும். அத்திரை அதே சமயத்தில் உடல் வெப்பத்தைத் தணிப்பதற்கு அவசியமான காற்றையும் தடைப்படுத்துவதில்லை.[2] இவ்வாறான உயர்ந்த சுகபோகங்களில் திளைப்பது மேல் நிலையிலுள்ள செல்வந்தரேயன்றிக் கீழ் நிலையிலுள்ள மக்கள் வீதிகளில், திறந்த வெளிகளிலே, நடைபாதைகளின் ஓரங்களிலேயே பெரும்பாலும் படுத்துறங்குகின்றனர்.

இம் மாபர் நாட்டின் குடிமக்கள், பார்ப்பதற்குக் கறுப்பாக யிருந்தாலும், அவர்கள் பிறக்கும்போது அத்தகைய "காக்காய் கறுப்பாய்" பிறப்பதில்லை. "கறுப்பின் கருமையின் கண் உள்ளது அழகு," என்று அழகு பாராட்டிச் செயற்கை முறையில் இன்னும் உடலைக் கறுப்பாக்கிக் கொள்வர். இதற்காக அவர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தினம் மூன்று வேளை எண்ணெய்

---

1. கொசு வலையைக் குறிப்பிடுகிறார்.

2. பிரம்பினால் செய்யப்பட்ட கட்டிலையும், கயிற்றுக் கட்டிலையும் குறிப்பிடுகிறார். ஊஞ்சலையும் சில செல்வந்தர் வீட்டில் படுக்கையாக உபயோகிப்பதைக் காணலாம். 'அம்ச தூளிகா மஞ்சம்' போன்ற வேலைப்பாடு மிக்க மெத்தைக் கட்டில்களும் இதன் பால் அடங்கும். இருப்பதற்கே இடம் இல்லாது தவிக்கும் ஏழை மக்கள் இவற்றை யெல்லாம் எங்கே வைத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள் ?

தடவி விடுகிறார்கள். அவர்கள் தங்கள் விக்கிரகங்களின் உருவத்தைக் கருநிறமாகக் காண்பிக்கிறார்கள். ஆனல், பிசாசு போன்ற மற்றத் தேவதைகளின் உருவங்களை வெண்மை நிறத்தாலேயே பூசுகின்றனர். மற்றும் பிசாசுகள் யாவும் வெண்மை நிறத்தனவே என்றும் சாதிக்கின்றனர்.[1]

எருதினை வழிபடும் அன்பர்கள் தாங்கள் போருக்குப் புறப்படும்போது, காட்டு எருமையின் மயிராலாகிய சவரியைத் தங்களுடன் எடுத்துச் செல்வர். அச்சவரியைத் தங்கள் குதிரையின் பிடரி மயிரோடு கட்டித் தொங்கவிடுவார்கள். அவ்வாறு அதைத் தன்னுடன் எடுத்துச் செல்பவன் யாவனையினுஞ் சரி, அவன் எத்தகைய அபாயங்களினின்றும், பெருந்தடைகளினின்றும் காப்பாற்றப்படுவான் என்ற திட நம்பிக்கை இந்நாட்டில் அதிகம் உண்டு. இதன் காரணமாக, இந்நாட்டில், காட்டு எருமைகளின் சவரிகள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.''

எருது வழிபாடு

---

1 வாகனங்களுக்கு வெள்ளை வர்ணம் கொடுப்பதை இங்குக் குறிக்கிறார். பிசாசுகள் என்பது ஆண்டவர் அல்லாத மற்றைய கீழ்த்தரத் தேவதைகள். தேவதைகள் என்று கோயில்களில் உபயோகப்படும் அசுர வாகனங்களைக் குறிக்கிறார் போலும்.

4. மயிலையில் மறைந்த முனிவர்

தாமஸ் முனிவர் வரலாறு

"மாபர் என்று வழங்கப்படும் இந்த நாட்டிலே[1] தான் தமது இன்னுயிரைத் தியாகம் செய்த அரும் பெரும் தியாகியான அப்போஸ்தலர் தாமஸ் முனிவருடைய[2] திருமேனி அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.[3] இவ்விடத்திலே தான் அவர் கொல்லப்பட்டு உயிர் நீத்தார். இவ்வாறு அடக்கம் செய்யப்பட்ட இடம் ஒரு சிறு நகரத்தின்[4] ஒரு பாகத்தில் இருக்கிறது. இவ்விடம் வியாபாரிகளுக்கு வாணிபம் செய்வதற்கு உதவாத இடமாதலால், இங்கு அவர்கள் அதிகமாகப் புழங்குவதில்லை. ஆயினும், பக்தி மேலீட்டால் கிறிஸ்தவர்களும், சாரசன் சாதியினரும் கூட்டமாக அவ்விடத்தில் குழுமுகின்றனர். பின்னவராகிய சாரசன் மக்கள் அம்முனிவரைப் பெரும் தீர்க்கதரிசியாகக்[5] கருதி, அவரை "அஞனியர்"[6] என்ற பெயரால் அழைக்கின்றனர். அஞனியர்

---

1 தமிழ் கூறும் நல்லுலகம் 2 Saint Thomas, the Apostle.

3 தமிழ் நாட்டில் மயிலாப்பூரின் ஒரு பகுதியாகிய சான்-தோம் (Santhome) என்பதைக் குறிப்பிடுகிறார். செயின்ட்–தாமஸ் என்பதன் குறுக்கமே சான்-தோம் ஆகும்.

4 மயிலாப்பூரைக் குறிப்பிடுகிறார். அக்காலத்தில் மயிலாப்பூர் பன்னூறாண்டுகளுக்கு முன் திருவள்ளுவப் பெருந்தகையார் வாழ்ந்து வந்த இடமாயிருந்ததனால், அவ்விடம் சிறந்த புகழ் பெற்றிருந்தது. அதைத்தான் சிறுநகர் எனக் குறிப்பிடுகிறார்.

5 Prophet

6 Ananiar - அ - மானிடர் என்ற சொல்லின் அடிப்படையாகப் பிறந்திருக்க வேண்டும். அ-மானுஷம் அதாவது அ-மானிடம் என்றால் மனிதரல்லாத தேவகணம் என்று பொருள் படுகிறதல்லவா ?

என்பதன் பொருள் ஆண்டவர் அருள் பெற்ற தூதர் - அதாவது தேவ மனிதர் - என்பதாகும். யாத்திரை நிமித்தமாக இங்கு வரும் கிறிஸ்தவர்கள் முனிவர் கொல்லப்பட்ட இடத்திலிருந்து சிவப்பு நிறம் கொண்ட மண்ணைப் பயபக்தியோடு தங்களுடன் எடுத்துச் செல்கின்றனர். அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட திருமண்ணைப் பற்பல அற்புதங்கள் செய்துகாட்ட அவர்கள் உபயோகப்படுத்துகின்றனர். அதைத் தண்ணீரில் கரைத்து நோயாளிகளுக்குக் கொடுக்க, அவர்கள் நோய்கள் அனைத்தும் அடியோடு நீங்கப்பெற்று, உற்சாகமும் உடற் சுகமும் பெறுகின்றனர்.[1]

நடைபெற்ற அதிசயம்

கி. பி. 1288-ஆம் ஆண்டில், ஆண்மை பெற்ற அரசிளங்குமரன் ஒருவன் இருந்தான். அறுவடைக்காலத்தில் போர் போராகக் கிடைத்த நெற் குவியல்களைச் சேமித்து வைக்கத்தகுந்த களஞ்சியம் அவனிடத்தில் இல்லாமல் போயிற்று. அதன் காரணமாக அவ்வரசகுமாரன், தாமஸ் முனிவருக்கு எழுப்பப்பட்ட கோயிலின் இல்லத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்தான். ஆனால் இச் செய்தி அத்தலத்தின் ஆதீன கர்த்தருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, தாமஸ் முனிவரைத் தரிசித்து அவரது அருள் பெற வரும் யாத்திரிகர்களுக்கு என விடப்பட்டிருக்கும் அக் கட்டிடத்தை உபயோகப்படுத்த வேண்டாமென அவர் அவ்வரசகுமாரனை மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். ஆனால், அவ்வரச

---

1 உலகின் பல பாகங்களிலும் இவ்வித நம்பிக்கை பரந்து காணப்படும்.

குமாரனே, தான் எண்ணியதை நிறைவேற்ற உறுதிகொண்டு, மிகவும் நெஞ்சழுத்தத்தோடு இருந்தான். அடுத்த நாள் இரவில் அப்புண்ணிய புருஷரான அப்போஸ்தலர், அவ்வரச குமாரனுடைய கனவில், வேல் ஒன்றினை அவனுடைய நெஞ்சுக்கு நேராகப் பிடித்த வண்ணம் காட்சியளித்துப் பயமுறுத்தி நின்றார். அவனை நோக்கி அம்முனிவர், "இப்பொழுதே நீ ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் என் இடத்தைக் காலி செய்யாமற் போனால், உன் உயிரைக் குடித்து, உனது உடலைத் துண்டு துண்டாக ஆக்குவேன்," என்று வீராவேசத்தோடு கூறினர். இத்தகைய பயங்கரக் கனவினின்றும் திடுக்கிட்டுப் பதை பதைத்துக் கண்விழித்துப் பார்த்துத் தான் கண்ட கனவினை யாவருக்கும் எடுத்துரைத்தான். தான் அப்போஸ்தலரைக் கனவில் கண்கூடாகக் கண்டதாகவும் தெரிவித்துத் தனக்கு முனிவர் பெருமான் கட்டளை யிட்டதை உடனே நிறைவேற்றி வைக்குமாறு தன் பணியாட்களுக்குக் கட்டளையிட்டான். தாமஸ் முனிவரது இல்லத்தில் இருந்த தானிய மூட்டைகள் அரசன் பணியாட்களால் உடனே வெளியேற்றப்பட்டன.

தாமஸ் முனிவரது பேரருளின் திறத்தால் பற்பல அற்புத நிகழ்ச்சிகள் இவ்விடத்தில் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன. இந்தத் தேவாலயத்தைக் கண்காணித்து வருகின்ற கிறிஸ்தவ மக்களுக்கு அங்கு விளையும் பாக்கு மரத்தோப்புக்கள் பல உண்டு. அவர்கள் அப் பாக்கு மரம் ஒவ்வொன்றிற்கும் ஒரு குரோட்ஸ் இத்தாலியச் செலாவணியை அவ்வரசச் சகோதரர்கள் ஒருவரிடம் வரியாகக் கொடுத்துத் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய ஏனைய வசதிகளும் அடைகிறார்கள்.

புனித அம்போஸ்தலரான தாமஸ் முனிவரது மரணம் பின் வருமாறு நடந்ததெனக் கூறப்படுகிறது:

ஓர் ஆசிரமத்தில் ஓய்வுபெற முனிவர் பெருமான் செல்லுங்கால், அங்கு அவர் பிரார்த்தனை செய்ய உட்கார நேர்ந்தது. அப்பொழுது அந்நாட்டில்[1] அமோகமாகத் திரிந்துழலும் மயில்கள், பிரார்த்தனையில் ஈடுபட்ட முனிவரைச் சூழ்ந்து நின்றன. 'காவுதி'[2] என்ற வகுப்பினைச் சேர்ந்த ஒரு விக்கிரக ஆராதனைக்காரன் அவ்வழியே சென்றுகொண்டிருந்தான். அவன் அச்சமயம் குழுமிய மயில் கூட்டத்தைக் கண்டானே தவிர, அவைகளின் மத்தியிலே பிரார்த்தனையில் ஈடுபட்டு அமர்ந்திருந்த முனிவர் பெருமானைக் கண்டானில்லை. மயில் ஒன்றினை மாய்க்கும் எண்ணத்தோடு தன் வில்லில் அம்பு தொடுத்து, அவ்வம்பை அம்மயில் கூட்டத்தின் மீது விடுத்தான். அந்தோ! மயில்மீது எய்த அம்பு மறைந்துகிடந்த முனிவரின் விலாப்புறத்தில் சுருக்கெனப் பாய்ந்தது.[3] பிராணபத்தான காயம் பட்டிருந்ததை நன்கு அறிந்துகொண்ட முனிவருக்கு, ஆண்டவர் தமக்கு அதுகாறும் காட்டிய கருணைப் பிரவாகத்துக்கு நன்றி செலுத்த மட்டுமே போதிய காலம் இருந்தது. உடனே ஆண்டவர் கையில் தம் இன்னுயிரை ஒப்படைத்தார்."

முனிவர் மறைந்த வரலாறு

---

1 மயிலாப்பூர்.

2 மாடு தின்னும் புலையர் வகுப்பினர்.

3 மயிலாப்பூர் என்ற பெயர் வந்ததற்குக் கற்பித்த காரணம் போலும். மயில் + ஆப்பு + ஊர் : மயில் அம்பினால் ஆப்புண்ட ஊர் என்று பொருள் படுகிறதல்லவா ? மயில் பெருகி வாழ்ந்ததால், அந்நாடு வளம் கொழித்திருந்தது என்பது இதனால் அறியப்படும்.

5. காயலும் குமரியும்

காயல் பட்டினம்

"காயல்,[1] அதை மாபர் என்பது மிகப் பெரிய ஒரு நகரம். நாட்டு மன்னர்களாக விளங்கிய நால்வர்களின் சகோதரருகிய ஒருவன் ஆண்டு வருகிறான். அவன் பெயர் அஸ்தியர்[2] என்பதாம். அவனிடத்தில் பொன்னும் மணியும் மல்கியிருக்கின்றன. தன்னுடைய நாட்டைப் பூரண அமைதியுடன் பாதுகாத்து வருகிறான்.

---

1 KAEL - காயல் என்பதைக் குறிக்கிறது. காயல் என்பது பாண்டி நாட்டைச் சேர்ந்த திருச்செந்தூர்க் கருகில் உள்ள குலசேகர பட்டினத்தைக் குறிப்பதாகும் என அறிஞர் சிலர் கருதுகின்றனர். அதற்கருகில் காயல் பட்டினம் என்ற உப்பளங்கொண்ட சிற்றூர் ஒன்று உண்டு. முதன் முதல் சிற்றூராயிருந்த பொழுது அதற்குக் காயல் என்ற பெயர் மட்டும் வழங்கியதால் வேண்டும். உப்பளங்களில் கடல் நீரைப் பாய்ச்சி, அதைச் சூரிய வெப்பத்தால் காயும்படி விட்டுவிடுவதால், அவ்வூர் காயல் என்ற பெயர் பெற்றது போலும். காயல் என்பதற்கு உப்பளம் என்ற பொருளும் உண்டு. அச்சிற்றூரே நகரமானபோது, பட்டினம் என்ற அடைமொழி பெற்றுக் காயல் பட்டினமாக ஆயிற்று. கடற் கரையில் உள்ளது பட்டினமல்லவா ?

2 Astiar - மாறவர்மன் குலசேகரபாண்டியன் என்று பேராசிரியர் சிலர் கருதுகின்றனர். திரையர் என்ற சொல் கடல் வழி வந்த மக்களைக் குறிக்கும் சொல்லாகும். பிறகு அதுவே பட்டப் பெயராகி, கடல் துறைமுகப் பட்டினங்களின் அரசனைக் குறிக்கவும் பயன்பட்டன. உதாரணமாக, இளந்திரையன் என்ற அரசன் பெயரைக் குறிப்பிடலாம். ஆகவே திரையன் என்னும் பெயர் பூண்ட அத்திரையன் என்ற பெயரே மார்க்கோ போலோவால் இவ்வாறு திரித்து கூறப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இதன் காரணமாக, அயல்நாட்டு வணிகர்களுக்கு இங்ஙகர் தங்குவதற்குரிய இடமாக அவர்கள் விருப்பம் போல் அமைந்து விடுகிறது. அவ்வணிகர்களுக்கு அரசனுல் நல்ல வரவேற்பு அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு வேண்டிய தேவைகளும் உடனுக்குடனேயே செய்து கொடுக்கப்படுகின்றன. ஆகையால் மேலைத் திசையிலிருந்து ஆர்மஸ்[1] கிஸ்தி, [2] ஆதென்[3] மற்றும் அரேபியாவின் பல பாகங்களிலிருந்து வரும் கப்பல்கள் இதையே துறைமுகமாகக் கொள்கின்றன. மற்றும், தங்கள் கப்பலில் குதிரை முதலிய வாணிபப் பொருள்களைக் கொணர்ந்து இறக்குமதி செய்கின்றனர். நாட்டு வியாபாரத்துக்கு இத்துறை முகம் உகந்ததாகக் காணப்படுகிறது. இங்நாட்டின் அரசன் செல்வாக்குள்ள நிலையில் மூன்நூறுக்கு மேற்பட்ட மங்கையர்களை மாண்புடன் பாதுகாத்து வருகிறுன்.

தாம்பூலத்தின் வரலாறு

இங்ஙகர மக்கள் யாவரும்-ஏன், பொதுவாக இந்திய நாட்டுக் குடிமக்கள் யாவருமே-தங்கள் வாயில் தாம்பூலம்[4] என்னும் பெயர் கொண்ட இலைச்சுருளை எப்பொழுதும் சுவைக்கும்பழக்கத்தையுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். அதை அவர்கள் பழக்கத்தின் காரணமாகவும், அதன் சுவையில் ஏற்படும் மகிழ்ச்சி காரணமாகவும், இம்மக்கள் அவ்வாறு உபயோகப்படுத்து

---

1 Ormus 2 Chist 3 Aden

4 Tambul - பாரசீக மொழியினின்று தமிழ் நாட்டுக்கு வந்த திரி சொல். தாம்பூலம் என மருவி வழங்குகிறது. வெற்றிலை என்று பொருள்படும்.

கின்றனர். அதை நன்ருக மென்றதும் அதனுல் உற்பத்தி செய்யப்படும் உமிழ் நீரை வெளியே துப்புவார்கள். உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் தாம்பூலத்தோடு பச்சைக் கற்பூரம், சாதிக்காய் முதலிய வாசனை தரும் பண்டங்களைச் சேர்த்துச் சுவைப்பர். அத்துடன் தாளிக்காத சுண்ணும்-பையும்[1] உபயோகப்படுத்துவர். இத்தகைய இன்பந்தரும் இனிய தாம்பூலம் உடலுக்கு மிக்க நன்மை பயக்கிற தென்று எனக்குப் பலர் சொல்லியிருக்கின்றனர்.

இகழ்தற்குப் பயன்படல்

ஒருவனை மற்றொருவன் வெளிப்படையாக அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனும் இகழ வேண்டும் என்ற எண்ணத்துடனும் இருந்தால், அவன் முகத்தில் மற்றவன் இத் தாம்பூலம் மெல்லுவதால் ஏற்படும் உமிழ் நீரைத் துப்பி விடுவான்.[2] இவ்வாறு இகழப்பட்ட அவன் நேராக அரசன் முன்பு விரைந்து சென்று தனக்கு இகழ்ச்சி செய்த வரலாற்றினை ஏற்ற வண்ணம் எடுத்துக் கூறி, அந்த வன்மத்தைப் போர் முனையில் தீர்த்துக்கொள்வதாகக் கூறுவான். அதைக் கேட்ட அரசன் அவனுக்குக் கேடயமும், வாளும் கொண்ட படைக் கலத்தைக் கொடுத்து அவர்களைப் போர் புரியுமாறு ஏவுவான். இந்த அதிசயப் போர், அவர்களில் ஒருவன் களத்தில் இறந்து போகுமளவும் நடைபெறும். இப்போரைக் காணப் பெருங் கூட்டங் கூடும்.

---

1 Quick-lime.

2 இவ்வாறு துப்புதல் அருவருப்பை உண்டு பண்ணும் செயலாக இன்றும் கருதப்படுகிறது. கோபத்தில் சொல்லும் 'முகத்தில் காறித்துப்புவேன்' என்னும் சொற்களை ஒப்பிடுக.

ஆனால், வாளின் கூர் நுனியால் மட்டும் ஒருவரை ஒருவர் காயப்படுத்தக்கூடாது என்ற கடுமையான விதிமட்டும் உண்டு.

குமரி முனை

'குமரி'[1] என்பது ஒரு நாடாகும். ஜாவாத் தீவினின்றும் பார்க்க முடியாத வடக்கிலுள்ள நட்சத்திரத் தொகுதியின் ஒரு பகுதியை இவ்விடத்திலிருந்து ஏறக்குறைய முப்பது மைலுக்குள்ளாக நாம் பார்க்க முடியும். அது தொடுவானத்திலிருந்து ஒரு முழ அளவு உள்ளதுபோல் தோற்றமளிக்கும். இங்நாட்டில் விவசாயம் பெரும்பான்மையாக நடைபெறுவதில்லை. இங்குக் காடுகளும் அடர்ந்து பெருகின மரத்தொகுதிகளும் அதிகமாக இருக்கின்றன. இதன் காரணமாக,

---

1. Komari-இந்தியாவின் தெற்குக் கோடியின் தொடக்கப் பாகமான குமரிமுனையைக் குறிக்கிறது. இதைத் தாலமி என்பவர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே Promontarium Kumarie என்றழைத்தார். குமரிமுனை என்பதே Cape Kumarin என்றழைக்கப்பட்டு, கடைசியாக Cape Camorin என்றாயிற்று. பண்டைய சங்க இலக்கியங்களிலும் "குமரி" பல இடங்களில் வந்துள்ளது.

இக்குமரியை இவர் நாடாகக் கருதுவது சிந்திக்கற்பாலது. இதனால் குமரியும் அதைச் சார்ந்த நாடும் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தன என்பது தெரியவருகிறது. இதையே,

"வேங்கடம் குமரித் தீம்புனல் பௌவமென்று,
இந்நான் கெல்லை தமிழது வழக்கே"

என்ற பழம் பாட்டால், குமரி முனையின் இருப்பிடத்தை யறியலாம்.

விலங்குகளுக்கும் - சிறப்பாக வானரங்களுக்கும்[1]– இது குடியிருப்பாக உபயோகப்படுகின்றன. அவ் வானரங்கள் வடிவத்தில் பெரும்பாலும் மனிதனை யொத்தே இருக்கின்றன. உயரமும், முகச் சாயலும் அவ்வாறே அமைந்திருக்கின்றன. அவ்வானரங்களில் நீண்ட வாலுள்ள வானரச் சாதிகளும்[2] உண்டு. இவை முற்கூறிய வானர வர்க்கத்தினின்றும் உடற் கூறுபாட்டில் வேறுபட்டனவே. இங்கே புலி, சிறுத்தை, வேங்கை முதலிய கொடிய காட்டு விலங்குகள் கணக்கின்றி வாழ்கின்றன."

குமரிக்கோடு என்ற மலையொன்று இருந்ததாகவும், அதன் காரணமாகக் குமரியாறு (குமரித் தீம்புனல்) உண்டானதாகவும், பிறகு மலையையும் ஆற்றையும் சுற்றி நாடு உண்டாயிற்று எனவும், மலையும் ஆறும் சேர்ந்துள்ளதால் அந்நாடு வளமிக்க நாடாக விளங்கிற்று எனவும் வரலாறுகள் கூறுகின்றன. ஆனால் அவைகள் யாவும் அழிந்து விட்டன என்பது,

"ப.ஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"

என்ற சிலப்பதிகாரச் செய்யுளடிகளால் நன்கு அறியலாம்.

ஆகையால், குமரி நாட்டைச் சார்ந்த பெரும்பாலான பகுதிகள் மறைந்தொழிய, அம்முனை மட்டும் இன்றும் குமரி முனை என்ற பெயரால் விளங்குகிறது என்பது போதரும்.

1 Apes

2 Long tailed monkey species - இராமாயணத்தில் கூறப்படும் வானர சேனையின் தோற்றத்தையும், அவை தோன்றும் இடங்களையும் இச்செய்திகளுடன் ஒப்பிடுக.

6. இலங்கை நாடும் ஆதாம் சிகரமும்

தீவின் அமைப்பு

" அங்கமான்[1] தீவிலிருந்து புறப்பட்டுத் தென் மேற்குத் திசையில் ஆயிரம் மைல்கள் கடற் பயணம் செய்தால், செய்லான்[2] என்ற தீவு கண்களில் தென்படும். இத்தீவு, உலகில் காணப்படும் மற்றெல்லாத் தீவுகளைக் காட்டிலும் அளவிலும் இடப் பொருத்தத்திலும் சிறந்து விளங்குகிறதென்றே கூறவேண்டும். ஆனால் இதற்குப் பன்னிருண்டுகளுக்கு முன் இதன் சுற்றளவு மிகப் பெரியதாக இருந்திருக்க வேண்டும். அப்பொழுது இதன் சுற்றளவு 3600 மைல் என்று மப்பா-மண்டி[3] கூறுகிறது. இப்பொழுது இத்தீவின் சுற்றளவு 2400 மைலாகக் குறுகியுள்ளது.

---

1 Angaman - (Andaman) : அந்தமான் என்ற தீவின் தொதியாகும். சில பிரதிகளில் இத் தீவு, நங்கமான் என்றும், அங்கானியா என்றும் பலவிதமாக உச்சரிக்கப்பட்டு எழுதப் பட்டிருக்கிறது. இப்பெயர் யாவும் அந்தமானையே உணர்த்து கிறது என்பதில் சிறிதேனும் ஐயப்பாடு கிடையாது.

2 Ceylon

3 Mappa - Mandi - (Mappa Monde or The Map of the World) : அக் காலத்தில் நிலவி வந்த உலகப் படத்துக்கு மப்பா - மண்டி என்ற பெயர் இடப்பட்டிருந்தது. இலங்கை நாட்டிலும் பல கடல் கோள்கள் நிகழ்ந்திருக்கின்றன என்று இலங்கை வரலாறு கூறுகிறது. அதனால் மார்க்கோ போலோவின் காலத்தில் அவர் கண்ட இலங்கைத் தீவு முன்னர் பலரால் குறிக்கப்பட்டிருந்த அளவைவிடச் சிறிய தாகக் காணப்பட்டது அக்கடல் கோள்கள் ஒன்றினால்தான் என்பது தெரிகிறது.

கடலினின்று அடிக்கும் பெருஞ் சூருவளிகள் இத்தீவில் உள்ள உயர்ந்த மலைகளை ஊடுருவிப் பாய்ந்து, அவைகளை உருத்தெரியாமலாக்கி, அம்மலைப் பாறைகளை ஒவ்வொன்றாகக் கடலில் தள்ளியிருக்கின்றன; அதன் காரணமாக மலைகளின் உயரம் குறைந்து, இயற்கை வளப்பமும் குறைவுபட்டுக் காணப்படுகிறது. முன்னர் இருந்த பெரிய உருவம் மாறி அம்மலைகள் இப்பொழுது சிறியனவாகக் காட்சியளிக்கின்றன. சுந்தர நாசு[1] என்ற அரசனுல் இத்தீவு இப்பொழுது ஆளப்பட்டு வருகிறது.[2]

இத்தீவின் மக்கள் விக்கிரகங்களைத் தொழுகின்றனர். மற்றைய நாட்டினர்க்கும் தமக்கும் யாதொரு தொடர்பும் வைத்துக்கொள்ளாமல் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றனர். ஆண்களும் சரி, பெண்களும் சரி, இடுப்பில் ஒரு முழத்

---

1 Sander - Naz : சந்திர நாசு அல்லது சுந்தர நாசு. சந்திர வமிசத்தைச் சேர்ந்த அரசன் ஒருவன் அப்போது இலங்கையை ஆண்டுவந்தான் எனச் சொல்லப்படுகிறது. சுந்தர நாகன் என்பதை அவர் சந்திர நாசு என்று கூறுகிறார் போலும். சௌந்திர பாண்டியன் வமிசத்தில் பிறந்தவனும், நாகர் குலத்தில் பெண் கொண்டவனுமாக இருந்ததால், சுந்தர பாண்டியநாகன் என்ற பெயரைப் பெற்றான் போலும். மார்க்கோ போலோ வேறு ஓர் இடத்தில் சுந்தர பாண்டியனைச் ''செந்தர் பண்டி'' என்று அழைப்பது இங்கே குறிப்பிடத் தக்கது. இலங்கையை ஆண்ட மன்னர்களும் பாண்டிய வமிசத்தைச் சேர்ந்தவர்களே என்பது இதனுல் அறியப்படும். அதுவும் அவர்கள் தமிழ் வேந்தர்களே என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்

2 இப்பொழுது - மார்க்கோ போலோவின் இலங்கைப் பிரயாணத்தின் போது.

துண்டுடன் மட்டும் அரை நிர்வாண நிலையில் திரிந்துழல்கின்றனர். அவர்களுக்கு அரிசியும், எள்ளுமே முக்கிய விவசாயப் பண்டங்களாகும். எள்ளிலிருந்து எண்ணெயைப் பிழிந்தெடுத்து, அதை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். அவர்களுக்குப் பால், அரிசி, மாமிசம் ஆகிய இவைகளே முக்கிய உணவுகளாகும். தென்னையிலிருந்தும் பனையிலிருந்தும் இறக்கப்பட்ட பதனியென்னும் நீரை உணவாகவும், பானமாகவும் உட்கொள்கின்றனர். இங்குக் கருங்காலி மரங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. இத்தீவு உலகில் மற்ற எல்லா இடங்களைவிட, அழகானதும். விலை உயர்ந்ததுமான வைரம், வைடூரியம் போன்ற நவரத்தினங்களை உற்பத்தி செய்கிறது. பச்சை, வைரம், கெம்பு, கோமேதகம், புஷ்பராகம், வைரம், வைடூரியம் போனற பற்பல உயர்ந்த கற்கள் இயற்கையாகவும் கிடைக்கின்றன.

தீவின் மக்கள்

இத்தீவின் அரசனிடம், அதுவரையில் யாவரும் பார்த்திராத மிகச் சிறந்த வைடூரியக் கல் ஒன்று இருக்கிறதாகக் கூறப்படுகிறது. அது ஒரு சாண் நீளமும், மனிதனின் கை அளவு கனமும் உள்ளதுமாக விளங்குகிறதாம். அதன் ஒளி கண்களால் பார்க்கமுடியாத அவ்வளவு பிரகாசமாக இருப்பதாயும், அவ்வொளியின் அளவினை விவரித்துக் கூறமுடியாதென்றும், அக்கல் அணுவளவுக் குற்றமும் இல்லாதவாறு விளங்குகிறதென்றும் கூறப்படுகிறது. அவ்வதிசயக் கல் ஒளி விடும்போது, நெருப்பு "தகதக" வென எரிவது

அரசனிடம் உள்ள அதிசய வைடூரியம்

போன்று தோற்றமளிக்கிற தென்றும், அதன் மதிப்பு இவ்வளவுதான் என்று எவராலும் இறுதியாகக் கணக்கிட்டுக் கூறமுடியாது என்றும் சொல்லப்படுகிறது. சீனப் பேரரசர் குப்ளாய்கான் இத்தீவின் மன்னனுக்கு, அவனிடத்தில் உள்ள அவ் வதிசய வைடூரியத்தை விலைக்குத் தர வேண்டுமென்று தூது ஒன்று அனுப்பினர். அதன் விலை ஒரு பெரிய நகர மதிப்பின் அளவாக இருந்தாலும், அதைத் தாம் விலை கொடுத்துப் பெற்றுக் கொள்வதாக அத்தூதுவர்களிடம் சொல்லி, அவ்வைடூரியத்தை எவ்வாறுயினும் பெற்று வருமாறு அவர்களைத் தூண்டினர். அத்தூதுவர்கள் அவ்வரசனை அடைந்து, சீனப் பேரரசர் கேட்டதைச் சொன்னபோது, அவ்வரசன் கூறியதாவது: "இப்பூமி முழுவதும் உள்ள நிதியங்களைத் திரட்டிக் கொடுத்தாலும் இவ்வைடூரியத்துக்கு ஈடாகாது; அவ்வளவு பொருள் கிடைப்பதாயிருந்தாலும், தான் ஒருக்காலும் இவ்வைடூரியத்தை விற்கப் போவதில்லை; மற்றும் எந்த நிபந்தனையின் பேரிலும் இவ்வரிய மணியைத் தன் நாட்டினின்று வெளியே போக விடுவதில்லை; இது தன் முன்னோர்கள் மூலமாக அரசாங்கத்தினரால் பாதுகாக்கப்பட்ட பொருளாதலால், இதை எக்காரணத்தாலும் தான் இழக்கச் சம்மதிக்க முடியாது," என்னும் பொருள்படப் பதிலுரைத்தான். இதனால், பேரரசர் குப்ளாய்கானுக்கு, அவ்வரிய வைடூரியத்தைத் தமதாக்கிக் கொள்ள முடியாமலும், விலைக்குப் பெற முடியாமலும் போயிற்று.

இத்தீவில் உள்ளவர்கள் போர்செய்யும் திறமை கொண்டவர்களாகக் காணப்படவில்லை. மந்த புத்தியுள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். அதனால் அவர்கள் எப்பொழுதும்

சாந்த முகத்துடனே காட்சி யளிக்கின்றனர்; போர் செய்வதற்கு ஆட்கள் தேவையாயின், பக்கத்து நாடுகளிலிருந்து பணத்தைக் கொடுத்துத் தேவைக்குத் தகுந்தவாறு மகமதியர்கள் வரவழைக்கப்படுகின்றனர்; சிறப்பான வேறு இயல்பை இங்குக் காணக்கூடாமையால், நாம் மாபர் நாட்டைப் பற்றிக் கவனிப்போம்.

(மாபர் நாட்டைப்பற்றி ஜீவரமாகக் கூறிவிட்டு, மறுபடியும் இலங்கைத் தீவைப்பற்றி முன்பு தாம் சொல்ல மறந்து விட்ட கருத்துக்கள் சிலவற்றை மார்க்கோ போலோ எடுத்துரைக்கிறார்.)

தீவின் சிறந்த சிகரம்

முன்னர் நான் இலங்கையைப்பற்றி விவரித்த விடத்துச் சில செய்திகளைக் கூற மறந்து விட்டேன். அவைகளைக் கூறுமல் மேலே செல்ல என் மனம் இடந்தரவில்லையாதலால், அவைகளை இங்குக் கூறுகின்றேன். மற்றும், இச்செய்திகள் யாவும், என்னுடைய சொந்த நாடாகிய வெனிசு நகரத்துக்குத் திரும்பிச் செல்கையில் இங்குப் பார்த்துத் தெரிந்துகொண்ட அரிய செய்திகளாகும்.

இத்தீவில் செங்குத்தாயும், பெரும் பாறைகளால் உண்டானதுமான மிகப் பெரிய மலை[1] ஒன்று இருக்கிறது. இதன் உச்சியை அடையவே முடியாது.[2] அப்படி அடைய முயல்வதாக இருந்தால், இரும்புச் சங்கிலிகொண்டு, பிணைத்து, அதன் உதவியால்தான் உச்சியை யடைய வேண்டும். இச்சங்கிலியின் உதவியைக் கொண்-

---

1 Adam's Peak - அதாவது ஆதாம் சிகரத்தைக் குறிப்பிடுகிறார். இப்பொழுது அதன் உயரம் 7352 அடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

2 உயர்வு நவிற்சியாக அதன் உயரத்தை அறிய இவ்வாறு கூறுகிறார்.

டும் சிலர் இம்மலையின் உச்சியை யடைகின்றனர். அவ்வுச்சியில், நம் வமிசத்தின் ஆதித்தந்தை எனப்படும் ஆதாம்[1] புதையுண்ட இடம் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவ்விடத்தில் சமாதி ஒன்றும் காணப்படுகிறது. இது சாரசன்[2] மக்கள் கூறும் வரலாறுகும்.

ஆனல் விக்கிரகத்தை ஆராதிக்கும் மக்கள் இம்மலை உச்சியில் சாகாமான் - பர்ச்சான்[3] என்ற மத குருவின் உடல் புதைக்கப்பட்டிருப்பதாகச் சாதிக்கின்றனர். இப் பெரியார் மிக்க புனிதத் தன்மை வாய்ந்தவராக இருந்தார் என்றும், இவர்

---

1 Adam - ''பைபிள்'' என்ற விவிலிய நூலில் விளிக்கப் படும் ஆதித் தந்தையான ஆதாம் என்பவரை மார்க்கோ போலோ இங்குக் குறிப்பிடுகிறார்.

2 Saracens-சிரியா (Syria) நாட்டு மகமதிய மக்கள் இம் மலைக்கு அடிக்கடி யாத்திரையாக வந்து செல்வர். அவர்களுடைய வேதமாகிய குரானில் பின் வருமாறு குறிக்கப்பட்டுள்ளது :

சுவர்க்கத்திலிருந்து மக்கள் கீழே தள்ளப்பட்டபோது, ஆதாம் என்ற ஆதித் தந்தை இலங்கை நாடாகிய செரன் தீபத்தில் (Seren Deep) விழுந்ததாகவும், ஏவாள் (Eve) என்ற ஆதாமின் மனையாள் அரேபியா நாட்டில் உள்ள ஜோடா (Joda) என்னும் இடத்தில் விழுந்ததாகவும் இதனல் தெரிவிக்கப்படுகிறது.

ஆகையால், Adam's Peak என்ற இம்மலைச் சிகரத்தின் பெயர் மகமதியர்களாலும், போர்த்து கேசியர்களாலும் இடப்பட்டிருக்க வேண்டும் என ஆராய்ச்சி வல்லுனர் கூறுகின்றனர். வரலாறு எவ்வாறுயினும், ஆதாம் சிகரம் இன்றும் ஒரு முக்கிய யாத்திரைத் தலமாக அமைந்துள்ளது சிந்தனைக் குரியது. இவ் விடத்தில் மகமதியர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் மூவரும் ஒருங்கு சேர்ந்து வழிபாடு செய்வது போற்றற்குரியதாகும்.

3 Sogomon - Berchan—சாக்கிய முனி என்று கொண்டாடப்படும் புத்தமதத்தை உண்டாக்கிய புத்த பெருமானைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். பர்ச்சான் என்றல் டார்டாரியரின் மங்கோலிய மொழியில் ''தேவன்'' என்று பொருள்

ஏற்படுத்திய மதத்துக்கே இவர் ஆதி குருவாக விளங்கினர் என்றும் கூறப்படுகிறது. இவர் அத்தீவின் அரசனின் மகனாகப் பிறந்து, இளம் வயதிலேயே சுகபோகங்களை மலைமீது சென்ற புத்தர் பெருமான் யெல்லாம் துறந்து துறவறத்தை மேற்கொண்டார். இதையறிந்த இவருடைய தந்தை விலையுயர்ந்த பொருளையும், பொன்னையும் ஈந்து, நல்ல அழகுவாய்ந்த பல மங்கையரை மணந்து இன்ப வாழ்வு நடத்துமாறு போதனை செய்தும், இவர் அவையாவும் நித்தியமில்லாத - நிலையற்ற - நீர்க் குமிழி யொத்த வாழ்வு என உதறித்தள்ளி, தமது உயர்ந்த கொள்கையி - னின்று சிறிதும் விலகவே யில்லை.[1] தூய துற வறப்பாதையிலேயே ஒழுகிவந்தார்.

அத் துறவறப் பாதையினின்றும் அவரை விலக்க எத்தனையோ முயற்சிகள் செய்தும், எதுவும் சிறிதும் பலனளித்த- புத்த பெருமானின் தாகத் தெரியவில்லை. சிறுவரா- சின்னங்கள் யிருந்த அவ்வரசிளங்குமரன், ஒருவருக்கும் சொல்லிக் கொள்- ளாமலே, தன்னந் தனியாக இம்மலைமீது ஏறி,

---

படும். ஆகவே சாகாமான் பர்ச்சான் என்றால் சாக்கிய முனி தேவன் என்ற சொற்றொடரின் சிதைந்த வடிவேயாகும். சாக்கியமுனி என்ற சொல்லையே சாகாமான் என்றழைக் கிறார் மார்க்கோ போலோ.

ஆதாம் சிகரத்தில் கல்லால் செதுக்கப்பட்ட பாதம் உள்ளது. இதைப் புத்த தேவனுடைய திருப்பாதம் எனப் பௌத்தர்கள் கூறுகின்றனர். இதை அவர் ஸ்ரீபாதம் (Sree Pud) என்ற பெயரால் அழைக்கின்றனர். மகமதியர்கள் இதை ஆதாமின் பாதம் (Adam's Foot) என்ற பெயரால் அழைக்கின்றனர்.

1 இவ்வரலாறு புத்த பெருமானின் வரலாறோடு எவ்வளவு ஒத்திருக்கிறது என்பதைக் கண்டுகொள்க. புத்த பெருமான் இலங்கைக்கு வந்தது இதனால் தெளியப்படும்.

அங்குக் கடுந்தவம் இயற்றி, விரதம் காத்து, எவர் கண்ணிலும் படாமல், தன்னுடைய ஊன் உடலை விட்டுவிட்டு உயர்வுமிக்க புகழுடம்பு எய்தினர். விக்கிரக ஆராதனைக்காரர்களால் இவர் ஒரு ஞானியராகவும்[1] தவசியாகவும் கருதப்படுகின்றார். இவ்வாறு தன் அருமை மைந்தன் துறவறம் பூண்ட செய்தியினை யறிந்த தந்தையான அரசன், மிகவும் மனம் நொந்து, பொன்னாலும், நவரத்தினங்களாலும் ஆனதுமான தன் மகன் உருவம் போன்ற பெரிய சிலை யொன்றினைச் செய்து, அதை மக்கள் தக்கபடி ஆராதிக்குமாறு கட்டளையிட்டான். விக்கிரக வழிபாட்டின் காரணம் இம் மாதிரியாகத்தான் தொடங்கிற்று. ஆனால் சாகாமான் பர்ச்சான் என்ற தெய்வம் மற்ற எல்லாத் தெய்வங்களையும்விடச் சிறந்ததாகக் கருதப்பட்டு வருகிறது. இந்நம்பிக்கை காரணமாக, பற்பல பாகங்களிலிருந்தும் மக்கள் பெருவாரியாகத் திரண்டு, புனித யாத்திரையாக, இம்மலையுச்சியில், இவர் புதையுண்ட புனித இடத்துக்குப் பயபக்தியோடு காணிக்கைச் செலுத்தக் குழுமுகின்றனர். அவ்விடத்தில், இத்துறவியார் உபயோகப்படுத்திய பாத்திரங்களும், இவரது கேசமும்[2], பற்கள் சிலவும் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டு, சிறந்த பூசா விதிகளுடன், அவைகள் இங்கு வரும் யாத்திரிகர்களுக்குக் காட்டப்பட்டு வருகின்றன. இதற்கு மாறுக, சாரசன் மக்கள், அச்சின்னங்கள்

---

1 போதி விருட்சத்தின் கீழ் கடுந்தவம் இயற்றிப் புத்தர் எனப் பெயர் பெற்ற வரலாறு ஈண்டு நோக்கற்பாலது. புத்தர் என்றாலே ஞானி என்றல்லவா பொருள்படும். பௌத்த மதம் இலங்கையில் அதிவேகமாகப் பரவினதற்குரிய சிறந்த ஒரு காரணத்தை இதனால் அறியலாமன்றே ?

2 மயிர் முடி

தங்கள் மத குருவான தீர்க்கதரிசி ஆதாமுக்குச் சேர்ந்தனவென்றும், அதனால்தான் தாங்கள் பெருவாரியாக அம்மலையுச்சிமீது குழுமுவதாகவும் கூறுகின்றனர். எது எவ்வாறாயினும், அம்மலைச் சிகரம் சிறந்த புனிதத் தன்மை பெற்ற இடம் என்பது யாவரும் ஒப்ப முடிந்ததொன்றும்.

சீனப் பேரரசர் ஆதித் தந்தையின் புராதனச் சின்னங்களைப் பெற்ற பௌத்த சின்னங்கள்

சீனப் பேரரசராகிய குப்ளாய்கான், அம்மலைக்கு யாத்திரைக்குச் சென்று திரும்பிய சில சாரசன் மக்களிடமிருந்து, நமது ஆதித் தந்தையின் புராதனச் சின்னங்களைப் பற்றிய மகிமையைப் பல்வாறுகக் கேள்விப்பட்டு, அவைகளிற் சிலவற்றைத் தாம் பெறவேண்டும் என்ற பேராவல் கொண்டு, செய்லான் நாட்டு அரசனிடம் இச் சின்னங்களைப் பெறும் உயர்ந்த நோக்கத்துடன், தூதுகோஷ்டி ஒன்றினை அனுப்பிவித்தார். அவர்களும் அரசர் ஆணையைச்சிரமேற்றுங்கி, சங்கடமான இன்னல்கள் பலவற்றைக் கடந்து, கடுமையாக யாத்திரை செய்து, கடைசியாகத் தாங்கள் காடிவந்த இடத்தை யடைந்தனர். அந்நாட்டு அரசனை அணுகி, தாங்கள் வந்த வரலாற்றினை யுரைத்து, குப்ளாய்கான் விரும்பின பௌத்த சின்னங்கள் சிலவற்றைத் தருமாறு வேண்டினர். வேண்டியதை வேண்டியவாறு அளிக்கும் பண்பாடு வேந்தர்க்கு உண்டல்லவா? இலங்கை வேந்தனிடமிருந்து புத்தரின் இரண்டு பெரிய கடை வாய்ப் பற்களும், சில கேசங்களும், மற்றும் நிவேதனங்கள் அடங்கிய, அழகும் வேலைப்பாடும் அமைந்த, பாத்திரம் ஒன்றும் பெற்றுத் தூதுவர் தம் நாடு திரும்பிச் சென்றனர்.

இவ்வாறு தம்முடைய தூதுவர்கள், கிடைக்க முடியாத அரிய புனிதப் பொருள்களுடன் யாத்திரையிலிருந்து திரும்பி வந்ததை யறிந்த அச் சீனப் பேரரசர் குப்ளாய்கான், தம் நாட்டு மக்கள் யாவரையும் ஒருங்கு திரண்டு எல்லைக்குச் சென்று, அங்கிருந்தே அவர்களுக்குப் பெருவாரியான வரவேற்பளித்து, அப்பெரும் பௌத்த சின்னங்களைத் தமது அரண்மனைக்கு ஆரவாரத்தோடும் தக்க மரியாதைகளுடனும் எடுத்து வரக் கட்டளையிட்டார். அவ்வாறே அந்நாட்டு மக்கள் யாவரும் ஒருங்கு கூடி, நாட்டின் எல்லைக்குச் சென்று, புனித யாத்திரையினின்று அரிய பொருள்களோடு வெற்றிகரமாகத் திரும்பிவரும் யாத்திரிக மக்களை உற்சாகமாக வரவேற்று, அவர்களுக்குத் தக்க மரியாதைகள் செய்து, அவர்கள் கொணர்ந்த அரும்பெரும் சின்னங்களைத் தலைமேற்றாங்கி, ஆரவாரத்துடனும், கோலாகலத்துடனும், வாத்திய முழக்கத்துடனும், அரசர் வாழும் அரண்மனைக்கு எடுத்துவந்தனர். பேரரசர் முன்னிலையில் அவைகளைப் புனிதத் தன்மையோடு இறக்கி வைத்தனர்.

பௌத்த சின்னங்களுக்கு அளித்த மகத்தான வரவேற்பு

செய்லானில் உள்ள மலையைப் பற்றிய வரலாற்றை இதுகாறும் கூறினேன். இனி மாபர் நாட்டுக்குத் திரும்பிச் சென்று, அங்கு உள்ள காயல் என்ற நகரத்தைப் பற்றிப் பேசுவோம்.''

(இதன் தொடர்ச்சி முந்தின அத்தியாயமாகிய ''காயலும், குமரியும்'' என்ற தலைப்பில் விவரித்துரைக்கப்பட்டுள்ளது.)

7. மசூலி நகரமும் லார் நாடும்

"மாபர் நாட்டைக் கடந்து, ஐந்நூறு மைல் நேர் வடக்காகச் செல்லுமிடத்து, மர்பிலி[1] அரசாங்கத்தை அடைவோம்.

வைரம் கொடுக்கும் நாடு

அந்நாட்டு மக்கள் விக்கிரக ஆராதனை செய்பவர்கள். சுதந்திரமாக வாழ்க்கை நடத்தி வாழ்கின்றனர். அவர்களுடைய முக்கிய உணவுகள் : அரிசி, மாமிசம், மீன், பழங்கள் முதலியன. இப்பிரதேசத்து மலைக்குகைகளில்தான் வைரங்கள் பெருவாரியாக உற்பத்தியாகின்றன. மழைக்காலங்களில் மலைச் சாரல்களில் மழை பெய்த விடத்து, அம்மழைநீர் மலைக்குகைகளிலும் பள்ளத்தாக்குக்களிலும் பெரும் விசையுடன் இறங்குகிறது. பிறகு அந்நீர்ப்பெருக்கு ஆருகப்பெருகிச் சமுத்திரத்தில் கலக்கிறது. மலையிலிருந்து விழுந்த நீர் ஆற்றில் கலக்கும் இடத்தில் மக்கள் கூட்டமாகக் காத்திருந்து மலை மீதிருந்து மழையால் அடித்து வரப்பட்ட வைரக்கற்களைப் பொறுக்குவார்கள். வண்டல் மண்ணோடு வைரங்களும் சேர்ந்து அடித்து வரப்படுவதால், மண் வளத்தைக் காணவும், வைரக்கல் தனத்தைப் பெறவும் பெருவாரியாக மக்கள் அச்சந்திப்பில் கூடி நிற்கின்றனர்.

---

1 Murphili or Monsul - மசூலிப்பட்டினம் என்றதன் பலபடியாகத் திரிந்த பெயர். மச்சூலி (Machuli) மன்பது மசூலி என்றுயிற்று. இதை Mansul அதாவது மன்சூல் என்ற பெயராலும் அழைத்தனர். எவ்வாறுயினும் இது மசூலிப்பட்டினத்தையே குறிக்கிறது. அக்காலத்தில் இந்நகரம் தெலிங்காணு (Telingana) நாட்டைச் சேர்ந்ததாயும், கோல் கொண்டா (Colconda) என்ற பிரதேசத்தையுடையதாயும் இருந்தது. கோல் கொண்டா என்ற இடம் வைர உற்பத்திக்குப் பெயர் பெற்ற இடமாக விளங்கியது.

வைரம் எடுப்பதற்குப் பின் வரும் முறை கையாளப்படுகிறது:

வைரம் எடுக்கும் முறை

கோடை காலத்தில் வெயிலின் கொடுமை அதிகமாக இருக்கும்பொழுதும், மழை இல்லாத காலத்தும் வைரத்தைப் பொறுக்கும் தொழிலில் ஈடுபட்ட வணிகர்கள் அம்மலைமீது மிக்க ஆயாசத்துடன் பிரயாசப்பட்டு ஏறுவார்கள். அம்மலையில் ஊர்ந்து வாழும் ஆயிரக்கணக்கான பாம்புகளினின்றும் தங்கள் உயிரைப் பாதுகாத்துச் செல்லவேண்டும். அம்மலையுச்சிக் கருகில் ஆழமான பள்ளத்தாக்குகளும், அவைகளில் பற்பல குகைகளும், அக்குகைகளுக்கு மேலாகச் செங்குத்தான கற்பாறைகளும் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அக்குகைகள் போன்ற பெரும்பாழிகளில்தான் வைரங்கள் பெருவாரியாகக் குவியல் குவியல்களாகக் குவிக்கப்பட்டிருக்கின்றன என்று அவ் வணிக மக்கள் கூறுகின்றனர். வாழையும், வைரமும் உள்ள இடங்களில் பாம்பின் நடமாட்டம் அதிகம் இருப்பது இயல்பன்றே! ஆகவே, இவ்விடத்தில் பாம்புகளின் நடமாட்டம் அதிகமாக இருத்தலால், அவைகளைத் தங்களுக்கு இரையாக்கும் நோக்கத்துடன் கருடப் பறவைகளும், சிலவகைப் பருந்துகளும் அப்பாழிகளில் தங்கள் கூடுகளைக் கட்டி, அவைகளில் வாழ்கின்றன. வைரக் கற்களைச் சேகரிக்க மலை ஏறிச் செல்லும் வணிகர், கொடுமை மிக்க அக்குகை வாயில்களில் நின்று, இதற்காகக் கொண்டு வந்திருக்கும் மாமிசத் துண்டுகளைச் சிறுசிறு துணுக்குக்களாக நறுக்கி அவைகளை அக்குகைகளில் வீசி எறிவார்கள். அம்மாமிசத் துணுக்கு-

களைப் பொறுக்கப் பறவைகளும், கழுகுகளும் அங்குப் பறந்து அத்துணுக்குகளைத் தங்கள் மூக்கினல் கொத்திக்கொண்டு, சரேலென அக்குகைக்கு மேலாகப் பறந்து சென்று, மலைமீது காணப்படும் மரங்களிலோ, கற்பாறை மீதோ உண்ண உட்காருகின்றன. அங்கு வந்து காத்துக் கொண்டிருக்கும் வணிகப் பெருமக்கள் அப்பறவைகளைப் பலவித ஓசைகள் எழுப்பித் துரத்திவிட, அவைகள் இவ்வோசையைக் கேட்டவுடன், தங்கள் அலகில் சிக்க வைத்திருக்கிற மாமிசத் துண்டைக் கீழே போட்டு விட்டுப் பறந்து சென்று விடுகின்றன. எண்ணெயும் கொழுப்பும் தடவிய அம்மாமிசத் துண்டுகளில், மலைக்குகையினுள் இருக்கும் வைரக் கற்கள் மிகுதியாக ஒட்டிக் கொண்டிருக்குமாதலால், அவைகளை அவ்வணிகர்கள் உடனே பிரித்தெடுத்துப் பொறுக்கிவைத்துக்கொள்வார்கள்.[1]

ஆனல், அவர்கள் அப்பறவைகளை ஓட்டுவதற்குள் அவைகள் அம் மாமிசத் துணுக்குகளைத் தின்று விழுங்கி விட்டிருந்தால், அப்பறவைகளைக் குறிப்பாக அடையாளங் கண்டுகொண்டு, அவைகள் இரவில் எங்குச் செல்கின்றன என்று கண் கொட்டாமல் பார்த்து

1 இம்மாதிரியாக வைரம் பொறுக்கப்படும் வரலாறு ஒன்று "சிந்து பாத்" என்ற நூலில் காணப்படுவது ஈண்டு நோக்கற் பாலது. "சிந்து பாத்" அராபிய நாட்டுக் கதைகளில் ஒரு பகுதியாகும். அப்பகுதி ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் அரபு மக்கள் வழக்கில் காணப்பட்ட கதைகளைக் கோவைப்படுத்தப்பட்ட ஒரு தொகுதியாகும். பாரசீக மன்னன் ஒருவனுக்கு ஆயிரம் இரவுகளாக மங்கையொருத்தியால் அக் கதைத் தொகுதி கூறப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதனல் தான் அவைகளுக்கு Arabian Night's Stories என்று பெயரிடப் பட்டன. இதன் விரிவை எனது "சிந்து பாத்" என்ற நூலில் காண்க.

நின்று, அவைகளைப் பின் தொடர்ந்துசென்று, எம்மரத்தில் அன்று இரவு தங்குகிறதோ அம்மரத்தின் அடியில் அடுத்த நாள் காலை வரையில் காத்திருந்து, அவைகள் போடும் எச்சங்களைக் களைந்து, அவைகளிலிருந்து வெளிப்படும் வைரக் கற்களைப் பொறுக்கி எடுத்துக்கொள்வர்.

இவ்வாறு இன்னல்கள் பலவற்றைக் கடந்து சென்று, மதிப்பிற்குரிய வைரக் கற்களைப் பொறுக்கி எடுத்து, அவைகளில் மிகச் சிறந்தவைகளைச் சீனப் பேரரசர் குப்ளாய்கானுக்கு விற்பதற்காக எடுத்துச் செல்கின்றனர். மற்றும் சில கற்கள், அந்நாட்டுப் பிற அரசர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் மிகுந்த விலைக்கு விற்கப்படுகின்றன. இதன் காரணமாக, கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கும் வைரக் கற்கள் முதல் தரமான வைரங்களாக இருப்பதில்லை. நல்ல வைரங்களை அதிக விலை கொடுத்து வாங்கும் சக்தி அரசர்க்கே உண்டல்லவா?

மசூலி நாட்டின் நல்வளம்

இந்நாட்டில், மற்ற இந்திய நகரங்களில் தயாரிக்கப்படும் துணிகளைவிடச் சிறந்த முறையில் துணிகள் தயாரிக்கப் படுகின்றன[1] இவர்களிடம் ஆடு மாடுகளின் மந்தைகள் ஏராளமாக இருக்கின்றன. உலகத்-

1 இந்தியாவின் மேற்கு கடற்கரையோரமாக மலையாளக் கடற்கரையில் உள்ள கோழிக்கோடு என்னுமிடத்தில் Calico என்று உற்பத்தி செய்யப்படும் துணி மார்க்கோ போலோ காலத்திலிருந்தே மிக்க பெயர் பெற்றிருந்தது. மசூலிப்பட்டினத்தில் தயாரிக்கப்பட்ட துணி வகைகளுக்குச் சின்செஸ் (Chintzes) என்ற பெயர் வழங்கி வந்தன. இவ்விடமும் துணிகள் உற்பத்தி செய்வதற்குப் பெயர் பெற்ற இடமாகும். இங்கு மிக மெல்லிய மஸ்லின் ஆடைகள்-போன்ற வகைகளையும் தயாரித்தனர். Calico துணிகள் அவைகளை விடச் சிறிது முரட்டு வகையினைச் சேர்ந்தன வென்று கருதப்பட்டுவந்தது.

திலேயே பெரியதாக மதிக்கத் தகுந்த இச் செம்மறியாட்டு மந்தைகளின் கூட்டங்களும், எல்லாவித உணவுப் பண்டங்களும், விவசாயப் பொருள்களும் அளவின்றிக் குவிந்து கிடக்கின்றன.

லார் நாட்டு மக்களின் பண்பாடு

கீர்த்திபெற்ற அப்போஸ்தலர் தாமஸ் முனிவரின்.[1] பூத உடல் புதைக்கப்பட்ட இடத்தை[2] விட்டு, மேற்கு முகமாகச் சில மைல் சென்றவிடத்து, நீங்கள் லார்[3] என்றழைக்கப்படும் நாட்டின் எல்லைக்குள் நுழைவீர்கள். இவ்விடம்தான், இந்தியாவின் பல பாகங்களில் வாழும் அந்தணர்களின் ஆதிநாடாக விளங்கி வந்தது. இவ் வந்தணர்களின் பெரும்-

---

1 Saint Thomas, the Apostle.

2 San Thome.

3 Lar - லார் எனப்படும் நாடு என்னவென்பது இன்றும் மயக்கமறத் தெளிவாக விளங்கவில்லை. இச்சொல் காஞ்சீபுரம் என்னும் புண்ணியத் தலத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். இதைத் தொண்டை மண்டலம் என்ற பெயரால் அழைத்தனர், கலிங்கத்துப்பரணி ஆசிரியரும், பிறரும்.

"தொண்டை யர்க்கரசு முன்வ ருஞ் சுரவி
துங்க வேள்விடை உயர்த்த கோன்
வண்டை யர்க்கரசு பல்ல வர்க்கரசு
மால்க விற்றின் மிசை கொள்ளவே"

(கலிங்கத்துப்பரணி - 364.)

என்ற அடிகளில் தொண்டை நாடு குறிக்கப்படுகிறது. இப் பரணி பதினேராம் நூற்றாண்டில் சயங்கொண்டாரால் முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி. பி. 1078—1118) இயற்றப்பட்டதென்று வரலாற்றுப் பேராசிரியர்கள் கூறுவர்.

பாலோர் வாணிபஞ் செய்யும் தொழிலை மேற்-கொண்டிருக்கின்றனர்.[1]

இவ்வணிகப் பெருமக்கள் நாணயமும் நேர்-மையும் வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் தம் இன்னுயிர் போவதாக இருப்பினும், பொய் என்ற சொல்லே இவர்கள் நாவினின்று வெளிவராது. எவ்வித இலாபத்தை அடைய நேர்ந்தாலும், அதற்காக ஒரு பொய்யேனும் கூறச்

இந்த லார் நாட்டில் தான் அந்தணர் குழுக்கள் அதிக மாகக் காணப்பட்டன. அக்காலத்தில் காஞ்சீபுரம் மிக்க புகழ் படைத்த நகரமாக விளங்கிற்று. அவ்விடத்தில் சிறந்த கோயில்களும், சைன மடாலயங்களும் பெருகி இருந்தன. சர்வ கலாசாலை ஒன்று மிகச் சிறந்த முறையில் நடத்திவரப் பட்டதென வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன.

மயூர சன்மன் என்ற பேரறிஞர் முதலில் காஞ்சிச் சர்வ கலா சாலையில் படித்துக் கலைகளில் பாண்டித்தியம் அடைந்து பிறகு நாலந்தா சர்வகலாசாலைக்குப் போதகராகப் போன தாகச் சரித்திர வரலாறு சான்று பகர்கின்றது. இதனால் காஞ்சியிலிருந்த சர்வ கலாசாலையின் மகிமை ஒருவாறு உய்த்துணரப்படும்.

லார் (Lar) எனப்படும் நாடு பாலாறு (Palar) வழிந்தோடும் நாட்டைக் குறித்து நின்றது. மொழிபெயர்ப்புத் தவறுதலாலும், காலமிகுதியினாலும், பாலாற்றில் உள்ள பா என்னும் சொல் கெட்டு, லார் என்ற சொல் மட்டும் எஞ்சி நின்றது. ஆகையால் பாலாறு வழிந்தோடி வளம் கொழிக்கும் நாட்டையே இங்கு லார் எனக்குறிப்பிடுகிறார் எனக் கொள்வது இயைபுடையதே.

1 இது வாணிபஞ் செய்யும் வைசியர்களையும், தன வணிகப் பெருமக்களையும் குறிக்கும். Brahmins (அந்தணர்) என்ற சொல்லையும், Banians (பனியாக்கள் - அதாவது வியாபாரிகள்) என்ற சொல்லையும் வித்தியாசம் தெரியாது உபயோகித்திருப்பதால், அந்தணரைப் பற்றிய ஒருவித மயக்கம் இவ்வதிகாரத்தில் ஏற்பட்டுள்ளது. Brahmins என்ற ஆங்கிலச் சொல்லை Banians என்ற வியாபாரியின் சொல்லாக மாற்றிவிட்டது மொழி பெயர்ப்பாளரின் கைத்திறனாகும்.

சம்மதிக்கமாட்டார்கள். மற்றவர்களின் பொருள்-களைத் தீய வழிகளில் தமதாக்கிக்கொள்ளும் முறைகளால் ஏற்படும் தீமைகளைக் கண்டு அஞ்சும் நெஞ்சம் படைத்தவர். மற்றும், இவர்கள் ஒரே மனைவியுடன் வாழ்ந்து, இல்லறத்தை நல்லறமாக நடத்தி மன நிறைவுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்நாட்டுக்குப் புதியனவாக வந்த வணிகன் ஒருவன் இவர்களிடத்தில் தன்னுடைய வியாபாரப் பொருள்களை விட்டுச் சென்றவிடத்தும், இம்-மக்கள் அப்பொருள்களை ஏற்றுக்கொண்டு, பத்திரமாகப் பாதுகாத்து, அவைகளை அவ-னுடைய சம்மதத்தின் பேரில் நன்முறையில் விற்று, அதனால் வரும் பொருள் முழுவதையும் அவனிடம் ஒப்படைப்பர். இவர்கள் செய்யும் இவ்வுதவிக்கு யாதும் கைம்மாறு கருதி நிற்பார் எவரும் இல்லை. அவர்களே கொடுத்தால் வாங்கிக் கொள்வார்களேயன்றித் தாங்களே கை நீட்டிக் கேட்கும் பழக்கம் இவர்களிடத்தில் கிடையாது. இவர்களில் பெரும்பாலோர் ஊன் தின்பர். நாட்டுச் சாராயமும் குடிப்பதுண்டு. ஆனால் எவ்வுயிரையும் தங்கள் கைகளினால் கொல்வதில்லை. உண்ணும் ஊனை மகமதியர்களிடமிருந்து பெறுகின்றனர். அல்லது கசாப்புத் தொழிலுக்கு அவர்களைப் பணி யாளர்களாக அமர்த்திக்கொள்கின்றனர்.

அந்தணர் என்பவர்கள் மற்றவர்களினின்றும் அவர்கள் அணிந்துகொள்ளும் பூணூலால் அறியப்படுகின்றனர். அப்பூணூல் கனமான கயிற்று வடத்தால் திரிக்கப்பட்டு, தோளில் மாட்டிக் கை வழியாகக் கொண்டுவரப்பட்டு,

மார்பிலும், முதுகிலும் தெரியும்படியாக அணியப் படுகின்றது.[1]

இங்நாட்டு அரசன் மிக்க அதிகாரம் படைத்தவனாக விளங்குகிறான். உயர்ந்த நவரத்தினங்களையும் முத்துக்களையும் தான் அணிவதில் மிக்க பெருமை கொள்கின்றான். மாபர் நாட்டு வணிகப் பெருமக்கள் இவ்விடத்தில் உயர்ந்த நவரத்தினங்களைக் கொடுத்து, அதற்கொரு குறைந்த விலையைக் கூறிநிற்பது வழக்கம். உயர்ந்த நவரத்தினங்களுக்கு அவர்கள் கூறும் விலை மிக்க நியாயமான விலையாக அங்நாட்டு அரசனுக்குத் தோன்றும். ஆகையால், அவன் அவர்களுடைய நேர்மையை வியந்து, அவர்கள் கூறும் விலைக்கு அநேகமாக இரட்டிப்பான விலையைக் கொடுத்து அங்நவரத்தினக் கற்களைப் பெற்றுக்கொள்வான். அவ்வுயர்ந்த விலையை அவ்வரசனே மகிழ்ந்து கொடுப்பான். அவர்களுடைய சொற்களின் உண்மையில் அவ்வளவு நம்பிக்கை அவ்வரசர் பெருமானுக்கு உண்டு. இவ்வாறுகக் கூடுதலான விலை கொடுத்து நவரத்தினங்களைப் பெறுவதால், பலப்பல வணிகப் பெருமக்கள், அவ்வரசனிடம் போட்டி போட்டு நவரத்தினங்களை விற்க முன் வருவார்கள். இதன் காரணமாக, இங்நாட்டு அரசனிடம் மிக்க விலையுயர்ந்த மணிகள் பலவற்றைக் காணலாம். அவற்றை அணிந்து கொள்வதிலும் இங்நாட்டு அரசன் பெருமிதம் அடைகின்றான்.

லார் நாட்டு அரசன்

---

1 வெளி வேடத்தால் அறியப்படும் அந்தணர்களைக் குறிப்பிடுகிறார் போலும். ஒழுக்கத்தில் சிறந்த அந்தணர்களைப் பற்றி யாதும் கூறாது விட்டிருப்பது, அத்தகையவர்களுடன் பழகும் வாய்ப்பு கிடைக்காமையாலேயே என்பது தெளியப்படும்.

லார் நாட்டு மக்கள் விக்கிரக ஆராதனை செய்பவர்கள். மற்றும் இவர்களுக்குப் பில்லி, சூனியம், முதலியவைகளிலும் தேவதைகளின் கோப, தாபங்களிலும் பலத்த நம்பிக்கை உண்டு. இவர்கள் யாதாவது ஒரு பண்டத்தை விலைக்கு வாங்க வேண்டுமென்-றால், உடனே வெயிலில் நின்று, சூரிய ஒளியினால் பூமியில் விழும் தங்களுடைய நிழலின் நீளத்தைக் கவனிப்பார்கள். அந்நிழலின் நீளம் வேண்டிய அளவினதாக இருந்துவிட்டால், அன்று அப் பண்டத்தை உடனே வாங்கிவிடுவார்கள். இன்-னும், இவர்கள் பண்டங்களை விலைக்கு வாங்கும் பொழுது, அவ் வங்காடியின் சுவர்களின்மீது ஓடும் பல்லியை நோக்குவார்கள். அப்பல்லி போகிற திசையைக் கூர்ந்து கவனித்து, எத்-திசையினின்று சத்தமிடுகிறது என்று காது கொடுத்துக் கேட்பார்கள். பல்லி சொல்லும் பலனை ஆராய்ந்து, அவ்வணிகர்கள் தங்கள் அன்றைய விபாபாரத்தை அதற்கேற்றவாறு முடித்துக் கொள்வார்கள்.[1]

மக்களின் நம்பிக்கை

---

1 இந்நாட்டில் இன்றும் "பல்லி விழும் பலன்", "பல்லி சொல்லுக்குப் பலன்", "கௌளி வாக்கு" என்று பற்பல விதமாகப் பல்லிக்கு ஒரு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருக்கிறதல்லவா? மார்க்கோ போலோ காலத்திலும் இத்தகைய நம்பிக்கை வலுத்திருந்தது. அவர் பல்லி போன்ற பிராணி ஒன்றைக் குறிப்பிட்டு, அதை டாரன்டுலா (Tarantula) என்றழைக்கிறார். (Tarantula) என்ற சொல் சிலந்தி போன்ற ஒரு பூச்சி என்று இலத்தீன் மொழியில் பொருள்படும். ஆனால் இந்தியாவில், அதுவும் தமிழ் நாட்டில், சிலந்தி போன்று சுவரில் ஓடக்கூடியது பல்லி ஒன்றே யல்லவா? ஆதலால் Tarantula என்பதற்குப் பல்லி என்றே பொருள் கொள்வது பொருத்தமானது.

இன்னும் வீட்டிலிருந்து இவர்கள் வெளிக்-கிளம்பும்பொழுது, யாராவது தும்மும் சப்தத்தைக் கேட்டால், உடனே இவர்கள் திரும்பத் தம் வீட்டுக்குள் சென்று உட்கார்ந்துவிடுவர்.[1] இவர்-கள் உண்ணும் விஷயத்தில் மிகக் கணக்காகவே இருப்பர். அதன் காரணமாக இவர்களில் பெரும்-பாலோர் மிக்க முதிர்ந்த வயது அடையுமளவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடைய பற்கள் உறுதியாகவும், வெண்மையாகவும் காணப்படு-கின்றன. இன்னும், இவர்களுக்கு இத்தகைய உறுதிவாய்ந்த பற்கள் இருப்பதற்குக் காரணம் இவர்கள் பச்சிலை போன்ற சுருள்களை மென்று தின்கிறார்கள்.[2] அப்பச்சிலை, சீரணத்தை விருத்தி செய்து, உடல் ஆரோக்கியத்தை நல்ல முறையில் வைத்திருக்கவும் உதவுகிறது.

திகம்பரர்

இந்நாட்டு ஆதிவாசிகளிடையே, ஆசாரமும் அனுட்டானமும் மிக்க திங்குவி[3] என்ற ஒரு சாரார் தங்கள் தெய்வத்தின் மீது அதி தீவிர பக்தி கொண்டு சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட

---

1 இச்சகுனம் இன்றும் நடைமுறையில் பலரால் மேற் கொள்ளப்பட்டு வருவது கண்கூடு. நல்ல காரியம் நடக்கும் போது, தும்முதலை அபசகுனமாகக் கருதுவது நம் நாட்டு மரபு. திருமண விழாவில் "தாலி மேளம்!" என்று மேளத் தில் பேரோசை எழுப்புவது, தாலி கட்டும்போது தும்முதல் முதலிய அபசகுனங்கள் காதில் விழாமல் இருப்பதற்காகத் தான் அல்லவா?

2 தாம்பூலம் என்ற வெற்றிலைச் சுருளை இங்குக் குறிப்பிடு கிறார். முன்பு மற்றோர் இடத்திலும் அவர் இதையே குறிப் பிட்டது நோக்கத்தக்கது.

3 Tingul-திகம்பரர் என்ற சொல்லின் சிதைவு. உடம்பில் ஆடையில்லாது நிர்வாண நிலையில் இருப்பவரைத் திகம்பரர் என்ற சொல்லால் அழைக்கின்றோம்.

வாழ்க்கையை நடத்துகின்றனர். இவர்கள் தங்கள் உடலில் உள்ள யாதோர் உறுப்புக்களையும் மூடாமல் நிர்வாண நிலையிலேயே ஊரெங்கும் திரிவார்கள். அதற்கு இவர்கள் கூறும் காரணம், "நாம் பிறக்கும்போது நிர்வாண நிலையிலே தானே பிறந்தோம். அதற்கு ஏன் அவமானப்பட வேண்டும்?" என்பதே.

நீறு அணிதல்

இந்நாட்டு மக்கள் எருதினுக்கு மரியாதையும், வணக்கமும் செலுத்துவர். தங்கள் நெற்றியில் அத்தகைய எருதின் வடிவமான பித்தளையால் செய்த உருவம் ஒன்றைத் திலகமாக அணிந்து செல்லும் வழக்கம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். எருதுகளின் எலும்புகளைப் பொசுக்கிப் பொடியாக்கி, அதனுல் கிடைக்கும் சாம்பலினுல் தங்கள் உடலில் பல்வேறு பாகங்களில் பூசிப் பிரகாசமடையச் செய்கின்றனர். தங்கள் நண்பர்களைச் சந்திக்க நேர்ந்தால், அவர்களுடைய நெற்றியிலும் இவ்வாறு தயாரித்த நீற்றை இட்டு மகிழ்வர்.

சீவ காருண்யம்

இந்நாட்டு மக்கள் எவ்விதப் பிராணிகளையும் கொல்லுவதில்லை; அவற்றின் உயிரை வாங்கப் பிரியப்படமாட்டார்கள். ஈ, கொசு, எறும்பு, பேன் முதலிய புல்லிய பிராணிகளிடமும் கருணை நிறைந்த மனத்தோடு நடந்துகொள்வர். அச்சிறு பிராணிகளிடத்தும் ஆன்மா ஒன்று இருக்கிறது என்ற கொள்கை இவர்களிடம் வலுத்துக் காணப்படுகிறது. காய்கறி, கிழங்குகளையும், பச்சையாகச் சாப்பிடாமல், நன்றாக உலர்ந்த பிறகே அவைகளைப் பயன்

படுத்துவார்கள்[1]. ஏனெனில் மரம், செடி, கொடி முதலிய தாவரங்களுக்கு உயிர் உண்டு என்ற கொள்கையால் அவ்வாறு செய்வர். இவர்கள் கரண்டியையோ[2] தட்டுக்களையோ[3] உபயோகப்படுத்தாமல், வாழைச் சருகுகளின் மேல் உணவைப் பரப்பிவைத்து உண்டு வாழ்வர்.[4]

இங்நாட்டு மக்கள் தங்கள் இயற்கை வசதிகளை நிவர்த்திக்க - மலங்கழிக்கக் - கடற்கரைக்குச் சென்று, அங்குள்ள மணலில் தாங்கள் வெளியிட்ட கழிவுப் பொருளை, நாலாபக்கங்களிலும் பரப்பி விடுவார்கள். அம்மலத்தில் உற்பத்தியாகும் கிருமிகளைத் தடுப்பதாகவும் அதற்குத் தகுந்த காரணங் கற்பிப்பர்.[5]

முறையோடு வாழ்தல்

இவர்கள் நீண்ட நாட்கள் வாழ்ந்து வருகின்றனர். வெறும் கட்டாந்தரையில் படுத்துறங்கினாலும், இவர்களில் சிலர் நூற்றைம்பது வருடங்கள் வரை உடல் நலத்தோடும், உற்சாகத்தோடும் வாழ்ந்து வந்ததாகவும் அறிகின்றேன். இதற்குக் காரணம் இவர்களுடைய நியமமும், கட்டுப்பாட்டுக்குட்பட்ட

---

1 இப்பாகத்தில் வாழ்ந்துவந்த சமணர்களாகிய சைனர்களைக் குறிப்பிடுகிறார் போலும்.

2 Spoons 3 Platters

4 இத்தகைய பழக்கம் இன்னும் நம் நாட்டில் பலரிடம் காணப்படுகிறது. Leaves of Adam's Apple-இதைச் சிலர் மந்தார இலை என்றும், வாதுமை இலை என்றும் பலவாறு கூறுவர். நீர் வளமும் நிலவளமும் மிக்குள்ள தென்னாட்டில் வாழைச் சருகை உபயோகப்படுத்தாத வீடே இருக்க முடியாது,

5 இச்செய்திகள் எவ்வளவு தூரம் உண்மை என்று நிச்சயமாகக் கூறமுடியாது. இவைகள் யாவும் அவர் கேட்ட செய்திகளாக இருத்தல் வேண்டும். கேட்கப்படும் செய்திகளில் மயக்கம் காணப்படுவது இயற்கையே.

பழக்க வழக்கங்களும், மிதமான ஆகாரத்தைப் புசித்தலும், முறை தவறாது நடத்தலுமாம். இவர்கள் இறந்தால், இவர்களுடைய உடல் புழுக்களுக்கு உறைவிடமாக ஆக்கப்படாமல், உடனே கொளுத்தப்பட்டு விடுகின்றன.

ஒவ்வொரு நாட்டு மக்களின் வாழ்க்கையும் எவ்வளவு விசித்திரமாக உள்ளது? இவ் வாழ்க்கை வரலாறுகளே கற்பாரது உள்ளத்தைப் பண்படுத்தி நிற்கும் ஒப்பற்ற மந்திரக் குளிகைகளல்லவா?

8. கௌளமும் மலையாளமும்

கௌள நாட்டின் வளம்

"மாபர் என்னும் நாட்டை விட்டகன்று, ஐந்நூறு மைல் தென் மேற்காகப் பிரயாணம் செய்தால், நீங்கள் கௌளம்[1] என்னும் பிரதேசத்தை யடைவீர்கள். அநேக கிறிஸ்தவர்களும், யூதர்களும் இதைத் தங்களது உறைவிடமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வூர் அரசன் மற்ற எந்த அரசனுக்கும் அடங்கி நடந்து கப்பம் கட்டுபவன் அல்லன். இங்கே சந்தன மரங்கள்[2] நிறைய வளர்கின்றன. இங்கே காட்டுப்பிரதேசத்திலும், நாட்டினுள்ளும் மிளகு பெருவாரியாகப் பயிரிடப்படு-

---

1 Koulam or Coulam - போர்த்துகேயர் இந்தியாவின் மேற்குக் கரையில் வந்திறங்கியபொழுது இவ்வூர் மிக்க பிரசித்தி யடைந்திருந்தது. இப்பொழுது இது, தன்னுடைய பிறப்பிடை அருகில் கிளம்பிய அஞ்செங்கோ (Anjengo) என்ற ஊருக்கு அளித்துத் தனித்து நிற்கின்றது. இந்நாடு தற்காலக் கோழிக் கோட்டிற் கருகில் உள்ளது. இவ்விடத்தில் பெருங்குளம் ஒன்று இருந்ததால், இதற்குக் குளம் என்ற பெயர் ஏற்பட்டு, இறுதியில் அப்பெயரே அவ்வூருக்கும் நிலைத்து விட்டது. (பெருங்குளம், ஸ்ரீகாகுளம், கருங்குளம், குளத்தூர் முதலிய ஊர்களின் பெயர்களை இத்துடன் ஒப்பிட்டுப்பார்க்க.)

2 Sappan-wood-சந்தன மரத்தை இவ்வாறு கூறுகிறார். நம் நாட்டிலிருந்து அச்சொல் ஜெர்மனிக்குச்சென்றபொழுது அது Sap – an - wood என்று மாறிற்று. பிறகு இலத்தீன் மொழியிலும் அதுவே நிலைத்துவிட்டது. அதாவது Sap என்றால் சாரம் என்று பொருள்படும். சாரத்தை அப்படியே நீராக வெளிவிடும் தன்மை வாய்ந்தது என விரித்துப் பொருள் உரைக்கலாம். அரைக்க அரைக்கச் சந்தனம் நறுமணம் கமழ்கிறதல்லவா?

கிறது. அம்மிளகை மே, ஜூன், ஜூலை ஆகிய இம்மாதங்களில் சேகரிப்பர். திராட்சைப் பழமும் அதிகமாகப் பயிராக்கப்படுகிறது. மிகவும் உயர்ந்த வகையைச் சேர்ந்த அவுரி என்னும் நீலச் செடியும்[1] பெருவாரியான அளவில் பயிராக்கப்படுகிறது. இச்செடிகளைப் பாத்திகளில் மூலிகைகள் போலப் பயிரிட்டு, அவைகளை வேர்களோடு பிடுங்கி, தண்ணீர் நிரம்பிய தொட்டிகளில் இட்டு, அது நன்றாக ஊறித் தானே அழுகிப் போகுமளவும் விட்டுவிடுகின்றனர். அதன் பிறகு அச்செடிகளைக் கசக்கிப் பிழிந்து அவைகளினின்று வரும் சாற்றைக் கிண்ணங்களில் கொட்டிக் காயவைக்க, அச்சாறு சில தினங்களில் இறுகிப் பசை போன்று மாறிவிடும். அக்கட்டிகளைச் சிறு சிறு துண்டுகளாகச் செய்து இப்பொழுது[2] நமக்குக் கொடுக்கப்படும் அளவில் விற்பனைக்கு அனுப்புகிறார்கள்.

விலங்கினங்களும் பறவைகளும்

இந்நாட்டில் பொறுக்க முடியாத சூரிய வெப்பம் சில மாதங்களில் காணப்படும். இருப்பினும், உலகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் - முக்கியமாக மஞ்சி, அரேபியா முதலிய நாடுகளிலிருந்தும் - வணிகப் பெருமக்கள் வாணிபம் நடக்கும் சீரிய முறையினால்-பெருவாரியாகக் குழுமுகின்றனர். இங்குக்

---

1 Indigo– sort of dye stuff – நீலச் செடி அல்லது அவுரியைக் குறிக்கும் ஒரு சொல்லாகும்.

2 மார்க்கோ போலா தம்முடைய காலத்தைக் குறிப்பிடுகிறார். இப்பொழுதும் நீலச் சோப்புக் கட்டிகள் அவ்வாறே சிறு துண்டுகளாக விற்கப்படுகின்றன.

காணப்படும் விலங்கினங்கள் மற்றப் பாகங்களில் காணப்படுபவற்றினும் சிறிது வேறுபாடு உடையனவாகக் காணப்படுகின்றன. புலியில் மிகவும் கறுத்த நிறமுடைய இனம் ஒன்று உண்டு. கிளிகளிலும் பல நிறங்கள் கொண்ட வகைகள் காணப்படுகின்றன.[1] அவைகளில் சிலபனிக்கட்டியைப் போன்ற வெண்மை நிறத்தோடும் மூக்கு மட்டும் கொவ்வைக் கனிபோன்ற சிவந்த நிறத்தோடும் காணப்படுகின்றன. வீட்டில் வளர்க்கப்படும் கோழிகள்கூடமாறுபாடான பல வண்ணங்களோடு தோற்றமளிக்கின்றன. மயில்கள் நம் காட்டில் இருப்பனவற்றைவிட மிகப் பெரியனவாகவளர்ந்து, நீண்டமயிற்பீலிகளைக் கொண்டு, அழகாக ஆடுகின்றன.[2]

விளையும் பயிர்கள்

இதே மாறுபாடுகள் பழங்களிடத்தும் நாம் காண்கிறோம். இதற்குக் காரணம் இங்கு நிலவும் வெப்ப மிகுதியே எனக் கூறப்படுகிறது. இங்கு விளையும் ஈச்சம் பழங்களிலிருந்து ஒருவகைப் பானத்தைத் தயாரிக்கின்றனர். இது திராட்சையினுல் செய்யப்படும் பானத்தைவிட அதி சீக்கிரத்தில் போதையைத் தருகிறது.

---

1 பஞ்சவர்ணக் கிளிகளைக் குறிப்பிடுகிறார்.

2 மயில்கள் நிறைந்து வாழ்ந்த ஊர்கள் மயிலாடுதுறை, மாயூரம், மயிலாப்பூர் முதலியன. இவ்வூர்கள் தங்கள் பெயரிலே மயில் என்ற சொல்லைக் கொண்டிருப்பதைக் கண்டு, அங்கு அதிகமாக வாழ்ந்த மயில்களின் தொகுதியை அறியலாம். மயில் விளங்கிய நாடென்பதால், மற்ற வளங்களெல்லாம் அமோகமாகப் பெருகியிருந்தன என்பது போதரும். பல்வளமும் பெருகி நின்ற இடங்களிலேதான் மயில் கூட்டங்கள் பெருவாரியாகக் காணப்படும்.

தவதானியங்களை நிறைய வைத்துக்கொள்வ-
தில்லை. அதற்குப் பதிலாக வேறு உணவுகளைப்
பத்திரப்படுத்திச் சேகரித்து வைத்துக் கொள்-
கின்றனர். ஆயினும், தானிய வகைகளில்
அரிசி மட்டுமே மிகுதியாகச் சேகரித்து வைக்கப்
படுகிறது. அதுவே இந்நாட்டு மக்களின் பெரும்
பாலான உணவு ஆகும்.

இந்நாட்டு மக்களில் பலர் சோதிடத்திலும்
மருத்துவத்திலும் வல்லுனராகக் காணப்படு
கின்றனர். ஆண்களும், பெண்-
மக்களின் மரபு களும் கருமை நிறமுடையராய்க்
காணப்படுவதோடு, ஒரு முழ
அளவு கொண்ட சிறு துண்டு ஒன்றை மட்டும்
உடுத்திஉலாவிவருகின்றனர். அத்தகையநிலையை
அரை நிர்வாண நிலை என்றே கூறலாம். அவர்-
களிடம் காணப்படும் சிற்சில பழக்க வழக்கங்களை
ஊன்றி நோக்குமிடத்து'' அவர்கள் சிற்றின்பப்
பிரியர்கள் [1] என்ற எண்ணமே முதற்கண் ஏற்-
படுவது இயல்பு. தங்கள் உறவினர்களிடமிருந்து-
தான் தாங்கள் மணக்க விருக்கும் பெண்களைப்
பெறுவர். வேற்றுக் குலத்தினரிடமோ, பிரிவினரி-
னிடமோ திருமணக் கலப்பு செய்துகொள்ளச்
சிறிதும் சம்மதியார். சிற்சில குழுவினர், தங்கள்
சகோதரன் இறந்தவிடத்து, அவனுடைய மனவி-
யைத் திருமணம் செய்துகொண்டு, இல்வாழ்க்கை
நடத்துகின்றனர். இப்படி வாழ்வது நாட்டின்
மரபு என்று எனக்குச் சிலரால் தெரிய வந்தது.[2]

---

1 Sensuous People.

2 சிற்சில மகமதியர்களிடம் காணப்படும் இம்மரபினைக்
குறிப்பிடுகிறார் போலும். இன்றைக்கும் இவ்வழக்கம் சிலரிடம்
காணப்படுகிறது.

விரிந்து பரந்துள்ள நமது இந்தியாவில் மலபார் நாடு[1] என்ற பெரிய அரசாங்கம் ஒன்று திகழ்ந்து வருகின்றது. இதைப் பற்றிச் சில வரலாறுகளைச் சொல்லாது விடுதல் கூடாது.

மலையாள நாட்டின் மகிமை

இந்நாட்டு மக்கள், தங்கள் அரசனுல் பாதுகாக்கப்படுகின்றனர். அவர்கள் சுதந்திரப் பிரியர்களாகவும், தங்களுக்கெனத் தனியொரு மொழியை யுடையவராகவும் காணப்படுகின்றனர். இந்நாட்டிலிருந்து துருவ நட்சத்திரத்தை நோக்கினுல், அது பூமியின் தொடுவானத்தின் மேல் சுமார் பன்னிரண்டு அடி அளவில் இருப்பதுபோல் தோற்றமளிக்கும். இந்த நாட்டுக் கடற்கரையிலும், இதற்குச் சற்றுத் தொலைவிலிருக்கும் குஜராத்துப் பிரதேசத்துக் கடற்கரையிலும் ஏராளமான கப்பற் கொள்ளைக்காரர்கள் கப்பல் யாதாயினும் எங்கேயாகிலும் வருகின்றனவா என்று வேவு பார்த்த வண்ணம் அலைந்து திரிந்துகொண்டிருப்பார். அவ்வழியாக யாதாயினும் கப்பல் ஒன்று தன்னந்தனியாகப் பொருள்களை ஏற்றிச் செல்வது தெரிந்து விட்டால், அக்கப்பலைச் சிறு கூட்டமாக இக் கப்பற் கொள்ளைக்காரர் தாக்கி, அதில் காணப்படும் பண்டங்கள் யாவற்றையும் சூறையாடுவர். அவ்வாறு கொள்ளையடிப்பவரின் குடும்பம் முழுவதும் கடலிலேயே கப்பலில் தங்கள் நேரத்தைச்

---

1 Malabar - இங்கு ''மலபார்'' என்றே திட்டமாகக் கூறுவது காண்க. ஆகையால் மாபர் நாடு வேறு என்பது உறுதிப்படுகிறதல்லவா? ''மலபார்'' என்பதுதான் மலையாள நாடு. இது இந்தியாவின் மேற்குக் கடற் பிரதேசம் அடங்கிய மலைப் பிரதேசம் ஆகும். மலைகள் நிறைந்த நாடாக இருத்தலால் அதற்கு மலையாளம் எனப் பெயர் வந்தது.

செலவிடுவர். சிலபொழுது கோடைகாலம் முழுவதுமே அவர்கள் கப்பலில் காலத்தைக் கழித்து விடுகின்றனர்.

எத்தகைய கப்பலும் தங்களுடைய பார்வையினின்று தப்பிச் சென்று விடாதபடி ஐந்து மைல் தொலைவுக்கு ஒரு வேவுகாரராக, சுமார் நூறு மைல் தூரத்தில் இருபது வேவுகாரர் நின்று காவல் காத்து நிற்பர். அவ்வாறு கண்கொட்டாது காவல் புரிந்து கப்பல் வருகையை எதிர் நோக்கி யிருப்பர். அவ்வாறு கப்பற் கொள்ளை காவல் தொழில் புரியும்போது ஏதாவது அன்னியக் கப்பல் தங்கள் கண்களில் தென்பட்டதும், அதை முதலில் பார்ப்பவன் ஒருவிதக் குறிப்பால் மற்றவனுக்குத் தெரிவிப்பான். அக்குறிப்பை இன்னதெனத் தெற்றெனத்தெளிந்து அதை மற்றவன் தனக்கு அருகாமையில் உள்ள வேறு காவல் காக்கும் கப்பலோட்டிகளுக்குத் தெரிவிப்பான்[1]. இவ்வாறுக யாவரும் சிறிது நேரத்தில் ஒன்று சேர்ந்து அவ்வழியாகச் செல்லும் அக்கப்பலைத் தப்பித்துக்கொள்ள விடாதவாறு செய்து, அதைத் தங்கள் வசமாக்கிக் கொள்ள முயற்சிப்பர். கப்பலில் உள்ள மக்களுக்கு யாதொரு தீங்கையும் இழைக்கமாட்டார்கள். ஆனால் அதில் காணப்படும் பொருள்களை மட்டும் சூறையாடிய பிறகு அக்கப்பலை கடல் ஓரமாகப் போகுமாறு செய்து விடுவர். மீண்டும் அக்கப்பலில் உள்ளோர் அதே வழியாகச் சென்றால் அவர்கள் முன்னர் நேர்ந்த கதிக்கே மறுபடியும் ஆளாக நேரிடும்.

---

1 இக்குறிப்பு நெருப்பு எரியவிடும் புகையாலும், துப்பாக்கி வெடியாலும் தெரிவிக்கப்படும்.

மிளகும்,[1] இஞ்சியும்,[2] பாக்கும்,[3] உலகத்திலே எங்கும் கிடைத்தற்கரிய அவ்வளவு விலையுயர்ந்த துணிமணிகளும் இவ்விடத்தில் பெருவாரியாக உற்பத்தி செய்யப்படுகின்றன.[4] மஞ்சி நாட்டிலிருந்துவரும் கப்பல்கள் பித்தளைக் கட்டிகளைப் பெரிய அளவில் சுமந்து வருகின்றன. இதைத் தவிர்த்து, சரிகை வேலைப் பாடுகளும், பட்டும், பொன்னும், வெள்ளியும் மலையாள நாட்டில் கிடைத்தற்கு அரிய மூலிகைகளும், மருந்தும் கொண்டு வரப்படுகின்றன. இவைகளை இங்நாட்டில் இறக்கி, இப்பண்டங்களை விற்று, இவைகளுக்குப் பதிலாக வேறு பண்டங்களையோ பொருள்களையோ வாங்கிச் செல்கின்றனர். இங்நாட்டில் விளையும் பண்டங்களை ஆதென்[5] முதலிய நகரங்களுக்கு ஏற்றுமதி செய்யத் தகுந்த வியாபாரிகள் இங்நாட்டின் துறைமுகங்களில் எப்பொழுதும் காத்திருப்பர். ஆதெனிலிருந்து இப்பொருள்கள் அலெக்ஸாந்திரியா[6] என்னும் நகரத்துக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இதுகாறும் மலையாள நாட்டின் மகிமையைக் கூறினேம். இனி இதை அடுத்துள்ள குஜராத்து[7] என்னும் நாட்டினை விவரிக்க முயல்வோம். இந்தியாவில் உள்ள எல்லா நாடு நகரங்களையும் விவரிக்க முற்பட்டால் அவ்வரலாறு மிக மிக விரிந்து விடுமாதலின், சிறப்பாகவும், செய்திகள் அதிகமாகவும் உள்ள நாடு நகரங்களைப் பற்றி மட்டும் இங்கே சிந்திப்போமாக.

---

1 Pepper 2 Ginger 3 Areca Nuts and Indian nuts 4 Calico cloth என்பதைக் குறிப்பிடுகின்றார். 5 Aden 6 Alexandria 7 Guzzerat.

9. குஜராத்தும் தாணுவும்

குஜராத்தைப் பற்றிய குறிப்புக்கள்

மேற்குப் பாகத்தில் கடல் எல்லையாக உள்ள குஜராத்[1] என்னும் நாடு சுதேச அரசனால் ஆளப்பட்டு வருகின்றது. இங்கிருந்து வடக்கில் இருக்கும் நட்சத்திரத் தொகுதியை நோக்கினால், அது தொடுவானத்திலிருந்து ஆறு ஆட்களின் உயரத்தில் இருப்பதுபோல் தெரியும். இந்நாட்டின் துறைமுகம், மிகவும் கை தேர்ந்த கப்பற் கொள்ளைக்காரர்களுக்குப் பாதுகாப்பும் அடைக்கலமும் அளித்து நிற்கிறது. இக்கொடிய கப்பற் கொள்ளையடிப்போர், தங்களால் பிடிக்கப்படும் வியாபாரியை ஒரு கோப்பைக் கடல் தண்ணீரைக் குடிக்குமாறு பணிப்பர். இதனால் அவ்வணிகர், முத்து பவளம் போன்ற உயரிய பொருள்களைத் தங்கள் எதிரிகளிட மிருந்து காப்பதற்காக விழுங்கியிருந்தாலும், இக்கடல் நீரால் அவர்களுக்கு ஏற்படும் குமட்டலால், அவைகள் வெளியே கொணர்ந்து தள்ளப்படும் அல்லவா?

---

1 Guzzerat - அதாவது தற்காலத்தில் வழங்கும் குஜராத் என்னும் இடத்தையே குறிப்பிடுகிறார். அன்றைக்கும் இன்றைக்கும் மிகக் குறைவான மாற்றத்தை அடைந்த சொற்கள் சிலவற்றில் இதுவும் ஒன்றாகும். பெரும்பாலான சொற்கள் உருத் தெரியாமலேயே இக்காலத்தில் மருவி வழங்குகின்றன. அதற்கு இச்சொல் ஒரு விதிவிலக்கு என்றே கூறலாம்.

2 சென்ற அதிகாரத்தில் குஜராத்துக் கடற்கரைக் கப்பற் கொள்ளைக்காரர்களைப் பற்றிச் சொல்லும் போது, அவர்கள் கப்பலில் உள்ள மக்களைத் துன்புறுத்த மாட்டார்கள் என்று சொல்லிவிட்டு, இவ்வத்தியாயத்தில் அதற்கு மாறாக, துன்புறுத்துவதாகக் கூறுகிறார். இதனால் சில பாகங்கள் அவரால் பார்க்கப் படாமலேயே கேட்டதைக் கொண்டு எழுதப்பட்டது என்பது போதரும்.

இங்கு இஞ்சி, மிளகு, அவுரி முதலியன ஏராளமாகப் பயிராகின்றன. ஆறு கெசம் உயர அளவு வளரும் ஒருவித மரத்தை வளர்த்து, அதிலிருந்து பருத்தியை இருபது வருடங்கள் கழித்து எடுக்கின்றனர். அவ்வாறு எடுக்கப்படும் பஞ்சு, துணி நெய்ய உதவுகிறதில்லை.[1] ஆனல் குயில்ட்[2] போன்ற சிறு மெத்தைகளும் தலையணைகளும் தைக்கவே பயன் படுத்தப் படுகின்றன. அதற்கு மாருக, பன்னிரண்டு வருடங்கள் வளர்ந்த பருத்தி மரங்களிலிருந்து கிடைக்கும் பஞ்சு, மெல்லிய மஸ்லின் துணி நெய்யவும், மற்றும் பல துல்லிய நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த துணிகள் நெய்யவும் பயன்படுத்தப் படுகின்றது.

மெத்தைக்கு உறையாகத் தைக்கப்படும் துணியின் நிறம் சிவப்பும், நீலமும் உள்ளதாக இருக்கும். மற்றும் அவைகள் வழவழப் பாகவும், மிருதுவாயும், பொன் வெள்ளி முதலிய சரிகைகளினுல் செய்யப்பட்ட வேலைப்பாட்டோடும் விளங்கி நிற்கும். ஆக, இவ்வழகிய அபூர்வ வேலைப்பாடுகள் கொண்ட மெத்தைகள் மீதே மகமதியர்கள் கண்ணுறங்குவர் என்பது தெரிய வருகிறது. பொன் கம்பிகளால் பற்பல வேலைப் பாடுகள் கொண்ட தலையணைகள் பலவித வகைகளாகத் தயாரிக்கப் படுகின்றன. இவ்விதமான தலையணை யொன்று சிலபொழுது ஆறு ரூபாய் வரையிலும் விற்கப்படுகிறது. இங்கே சரிகை வேலைப்பாடும், தையல் வேலைப்பாடும், உலகின் மற்றெல்லாப் பாகங்களைக்காட்டிலும் மிகச் சிறந்த முறையில் நடத்தப் படுகின்றன.

---

1 இலவம் பஞ்சைக் குறிப்பிடுகிறர் போலும்.

2 Quilt-சிறுமெத்தை போன்ற விரிப்பு.

இங்கு ஆடு, எருமை, காண்டா மிருகம், காட்டெருது ஆகிய பற்பல மிருகங்களின் தோல்கள் பதனிடப்படுகின்றன. பதனிடப்பட்ட இத்தோல்கள் பெருவாரியாகக் கப்பல்களில் வெளி நாடுகளுக்கும், அரபு நாட்டின் பல நகரங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பதனிடப்பட்டுள்ள தோல்கள் கைக்கு மிருதுவாயும், அதிக நாள் உழைக்கக் கூடியனவாயும் காணப்படுகின்றன. அவற்றினுல் குல்லாய் முதல் கால் செருப்பு வரையில் பற்பல தினுசுகளைத் தயாரிக்கிறார்கள்.

இனி, இதனை விட்டுக் கானன்[1] என்னும் தாணு நாட்டைப்பற்றிப் பேசுவோமாக :

காணன் என்ற நாடு

காணன் என்ற நாடு மிகப் பெரியதும், சிறந்த பண்பாடடைந்ததாகவும் உள்ள உன்னத நாடாகக் காணப் படுகிறது. இந்நாடு, எவருக்கும் ஏதும் கப்பம் கட்டாத ஓர் அரச குமாரனுல் ஆளப்பட்டு வருகிறது. இங்குள்ள மக்கள் வியக்கிரக ஆராதனை செய்பவர்களாகக் காணப்படுகின்றர். தங்களுக்கென உரித்தான தனிப்பெரும் மொழியினைக் கொண்டுள்ளனர். இங்கு மிளகாவது, இஞ்சியாவது விளைவதில்லை. ஆனல், அவற்றிற்குப் பதிலாக வெளுப்பான நிறமுள்ளதாக இல்லாத – சிறிது கறுத்த நிறமுடைய – சாம்பிராணியை உற்பத்தி செய்கின்றனர்.[2] இந்நாட்டின்

---

1 Kanan - (Thana) என்ற நாடே இங்குக் குறிக்கப்படுகிறது.

2 சாம்பிராணி என்று சில பிரதிகளும், பெருங்காயம் போன்ற பொருள் என்று சில பிரதிகளும் தெரிவிக்கின்றன வாயினும், அடுத்துச் சொல்லப்படும் வரிகளிலிருந்து, அது சாம்பிராணி என்றே கொள்ளவேண்டியதாகிறது. சந்தனக்கட்டைகளும் பெருவாரியாக ஏற்றுமதி செய்யப்பட்டன எனவும் தெரிகிறது.

துறைமுகத்தில் வாசனைப் பண்டங்களை ஏற்றிச் செல்லப் பற்பல கப்பல்கள் காத்து நிற்கின்றன. மற்றும் வெளி நாடான அரபு நாட்டிலிருந்து குதிரைகள் பலவற்றை இறக்குமதி செய்து, அவைகளை இந் நாட்டிலிருந்து இந்தியாவின் பற்பல பகுதிகளுக்கும் விற்பனைக்காக அனுப்புகின்றனர். இந்நாட்டு மக்களுக்கு விவசாயமும் வாணிபமுமே வாழ்க்கைக்கு உதவும் உயரிய தொழில்களாம்.

10. இந்தியாவில் செய்த இறுதிப் பிரயாணம்

மேற்கே உள்ள நாடுகளில் செர்வனுத்[1] என்பது ஒரு நாடாகும். இங்குள்ள மக்களும் விக்கிரக ஆதாரனே செய்பவர்களே.

செர்வனுத் அவர்களுடைய அரசன் கப்பங்கட்டாதவன்; எவருக்கும் அடங்கி நடக்காத பெருமை வாய்ந்தவன். இவர்களும் தங்களுக்கெனத் தனியாக ஏற்பட்டுள்ளமொழியினைப் பேசுபவர் ஆவர். இங்கே வியாபாரம் பெருவாரியான அளவில் நடைபெறுகிறது. பற்பல வியாபாரிகள் இவ்விடம் வந்துதாங்கள் கொண்டு வந்துள்ள சரக்குகளே விற்று, அவைகளுக்குப் பதிலாக இந்நாட்டில் கிடைக்கும் பொருள்களையும் பண்டங்களையும் வாங்கித் திரும்புவர். ஆனால்

---

1 Servanath - சோமனுதபுரம் என்பதின் திரிபு. இதன் ஆங்கில உச்சரிப்பு சோமனுத் Somanath என்பதாகும். ஆக Somanath என்ற சொல்லே Servanath என்று திரிந்து வழங்கப் பட்டது. இவ்விடத்தில் ஓர் ஆலயம் மிக்க பிரசித்தி பெற்றிருந்தது. அவ்வாலயத்தில் உள்ள விக்கிரகம் உயர்ந்த பொன்னுல் ஆக்கப்பட்டும், அதனுள் விலை மதிக்க வொண்ணுத எண்ணற்ற நவ இரத்தினங்கள் கொண்டும் காட்சியளித்தது. இவ்வாலயத்தைக் கஜினி முகம்மது என்னும் மொகலாயப் பேரரசர் கி. பி. 1025-ஆம் ஆண்டில் சின்னு பின்னமாக்கி, அதனுள் இருந்த விக்கிரகத்தில் காணப்பட்ட நவமணிகளையும் கொள்ளையடித்துச் சென்றதாகச் சரித்திர வரலாறு கூறுகிறது.

கோயிலில் பூசை செய்யும் குருக்கள்மார்கள் மிக்க கொடுமை வாய்ந்தவர்கள் எனக் கேள்விப்படுகிறேன்.[1]

குமரி என்னும் நாட்டினைவிட்டுச் சுமார் மூன்நூறு மைல் மேற்காகச்[2] சென்றால் டெல்லி[3] என்னும் அரசாங்கத்தை அடைவீர்கள். இந்நாட்டுக்கும் சுதேச மன்னன் ஒருவன் உண்டு. தமக்கெனத் தனி மொழி ஒன்றையும் கொண்டு இந்நாட்டு மக்கள் விளங்குகின்றனர். மற்ற எந்தப் பேரரசுக்கும் இரண்டு மன்னன் கப்பம் கட்டுவதில்லை. இந்நாட்டு மக்களும் விக்கிரக ஆராதனை செய்பவர்களே. இதற்குத் துறைமுகம் என்று ஒன்றும் கிடையாது. ஆயினும், பெரிய அகன்ற ஆற்றின் முகத்துவாரத்தைக் கொண்டுள்ளது. அவ்வாற்றின் முகத் துவாரத்தின் வழியாகப் பெரும் கப்பல்கள் வாணிபத் துறைக்காக உட்செல்லும் தன்மையுடையன. மற்றபடி, இந்நாட்டின் உட்செல்வது சற்றுக் கடினமான காரியமே இத்தகைய இயற்கையையுடைய இந்நாட்டின்மீது மற்றவர்படையெடுத்து வருவதுஎன்பது எளிதில்

டெல்லி

---

1 மேற்கூறிய சம்பவத்துக்குப் பிறகு, அக்கோயிலின் குருக்கள் எவரையும் அதனுள் நுழைய விடாது பாதுகாத்து வந்தனர், மக்களிடமும் மூர்க்கத்தனமாக நடந்துவந்தனர். இதன் காரணமாக அவர்களைக் கொடுமை வாய்ந்தவர்களென்று வர்ணிக்கின்றார் போலும்.

2 "வடக்காக" என்றிருக்கவேண்டும். கவனக்குறைவினால் மேற்கு என வரைகிறார்.

3 Dely - இதை டெல்லி என்று உச்சரித்தார். இந்த ஊரும், வட நாட்டில் தலைநகராக விளங்கிய Delhi யும் வேறு வேறான நகரங்களாகும். இங்குக் குறிப்பிடப்பட்ட பிரதேசம் இப்போழுது Mt. Della என்றழைக்கப்படுகிறது. இது ஒரு சிறிய தீவுபோல் காணப்பட்டு, மேற்குக் கரையில் மங்களூர்க் கருகில் உள்ளது. 12 டிகிரி வடக்கு அட்சாம்சத்தில் உள்ளது.

கடக்கக்கூடிய காரியமல்ல. மக்களும் போர் வீரம் படைத்தவர்கள் அல்லர். நாட்டின் கரடுமுரடான தன்மையே மக்களைப் பிற நாட்டினரின் படையெடுப்பினின்றும் காப்பாற்றுகிறது. இந்நாட்டிலும் மிளகு, இஞ்சி, மற்றும் வாசனைப் பண்டங்கள் பலவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நாட்டிற்கென நியமிக்கப்படாத கப்பல்கள் ஏதாகிலும் இவ்வாற்றின்[1] வழியாக வந்துவிட்டால், இங்குள்ள மக்கள் அக்கப்பலைப் பிடித்துக்கொண்டு, அதில் உள்ள வாணிபப் பொருள் யாவற்றையும் பறிமுதல் செய்துவிடுவார்கள். அதற்கு இவர்கள் கூறும் காரணம் பின்வருமாறு: "வேறு எங்கேயோ செல்ல வேண்டிய நீங்கள் தற்செயலாக இங்குத் திருப்பப்பட்டது தெய்வச் செயலேயாகும். இது எதற்காக என்றால், உங்கள் பண்டங்கள்யாவற்றையும் நாங்கள் பெற்று வாழ்வதற்காகவே" என்பதே. மற்றும் மஞ்சி நாட்டிலிருந்து கப்பல்கள் பண்டங்களை ஏற்றிக் கொண்டு இந்நாட்டிற்கெனவே வந்து சேர்கின்றன. இங்கு மணற்பாங்கான மேடுகள் காணப் படுவதால், கடற்கரைப் பிரதேச வழியாகக் கப்பல் செல்வது அவ்வளவு நல்லதல்ல எனக் கருதப்படுகிறது. காற்றும் மிகக் கடுமையாக அடிப்பதால், கப்பல்கள்

---

1 இவ்வாற்றுக்குப் பெயர் சந்திரகிரி என்று கூறப்படுகிறது. இப்பிரதேசத்தில் உள்ள நதிகளில் இதுவே மிகப் பெரியதாகும். சில பிரதிகள் இம்மலைப் பிரதேசத்தை Yesay Malai (ஏழுமலை) என்று வரைந்திருக்கின்றன. அதாவது ஏழுமலை என்று சொல்லப்படும் திருப்பதி மலையைக் குறிக்கின்றன. அதற்குப் பக்கத்தில் சந்திரகிரி என்ற ஊர் இன்றுங் காணப்படுவது இதை உறுதிப்படுத்துகிறது. ஆகையால் மார்க்கோ போலோ திருப்பதி மலைமீதும் ஏறி ஏழு மலையானின் தரிசனம் பெற்றார் எனக் கொள்ளுதலும் சாலப் பொருத்தமானதே.

அடித்துச் செல்லப் படாதவாறு மரங்களால் நாட்டப்பட்ட தூண்களில் அக் கப்பல்கள் பிணித்துக் கட்டப்படுகின்றன. இங்நாட்டில் புலியும் மற்றும் உக்கிரம் மிகுந்த விலங்குகள் பலவும் பெருவாரியாகத் திரிந்து, திடீரென மக்கள் மீது பாய்ந்து, சொல்லொணு நாசத்தை விளைவிக்கின்றன.

இனி நாம் கேம்பையா[1] என்னும் நாட்டைப் பற்றிக் கூறுவோம்.

கேம்பையா

இங்நாட்டு எல்லையும் மேற்கு பக்கமாகப் பரந்துள்ளது. இங்நாட்டு அரசனும் சுதேசி அரசனுவான். அவன் எவருக்கும் கப்பம் கட்டுபவன் அல்லன். மக்களும் விக்கிரக ஆராதனைப் பிரியர்களே. இங்கிருந்துவட நட்சத்திரத் தொகுதியை நோக்கினால் அது இதுகாறும் பார்த்த மற்ற நாடுகளிலிருந்து தோன்றுவதைவிடச் சற்று உயரமாகவே தோன்றுகிறது. இங்கு அவுரிச்செடிகள் மிகுதியாகப் பயிரிடப் படுகின்றன. இங்நாட்டில் துணிகளும், கம்பளி நூலும் பெருவாரியாக உற்பத்தி செய்யப்பட்டு, ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நன்றுகப் பதனிடப்பட்ட தோல் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அவைகளுக்குப் பதிலாக, பொன்னும், வெள்ளியும், பித்தளையும் வெண்கலமுமாக இங்நாட்டில் இறக்குமதி செய்யப் பட்டுக் குவிக்கப்படுகின்றன.

---

1 Cambia or Kambia - இந்நாடு குஜராத்துக் கருகில் உள்ள காம்பையா வளை குடாவைக் குறிப்பதாகும். இத் துறைமுகம் அயினி அக்பாரி என்ற நூலில் காம்பாயட் Kambavet என்று அழைக்கப்படுகிறது. இது மிக முக்கியமான துறைமுகமாக முன்னர் விளங்கிற்று.

இனிக் கெஸ்மகோரான்[1] என்ற நாட்டினைப் பற்றி விவரிப்போம்.

இந்நாடு மிக்க விசாலமானதாயும், சுதேச அரசனால் ஆளப்பட்டதாயும், தனக்கென உரித்தாய தனிப் பெரு மொழியினை கெஸ்ம கோரான் உடையதாயும் விளங்குகிறது.

இந்நாட்டு மக்களில் சிலர் விக்கிரக ஆராதனை புரிபவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் பெரும்பான்மையோர் சாரசன் சாதி மக்களாகவே விளங்குகின்றனர். அவர்களில் பலர் வாணிபம் செய்தும், சிலர் விவசாயம் செய்தும் தங்கள் வாழ்க்கைப் படகைக் கடத்திச் செல்கின்றனர். அரிசியும், கோதுமையும், மீனும், பாலும் இங்கு அதிகமாகக் கிடைப்பதால், அவைகளே இவர்களுக்குப் பெரும்பாலும் உணவாக அமைந்துவிடுகின்றன. இவ்விடத்தில்

---

1 Kesmocaran–இப்பெயர் Kidg-makaran என்ற சொல்லினின்று ஏற்பட்ட திரிபுச் சொல்லாகும். அதாவது மகாரன் என்ற நாட்டிற்குக் கிட்ஜ் தலைநகரமாக விளங்கியதாக வரலாற்றுப் பேராசிரியர்கள் கூறுவர். இந்நாடு சிந்துநதி பாயும் பிரதேசத்தில் உள்ளது. இதைச் சிந்துப் பிரதேசம் என்றே அழைப்பர் (Sind).

மார்க்கோ போலோ வெனிசு நகரிலிருந்து புறப்பட்டபொழுது, இப்பிரதேசத்துக்கு வந்து, இங்கிருந்து மங்கோலியாவின் பாலைவனத்தைக் கடந்து திபெத்து வழியாகச் சென்று சீனு தேசத்தை யடைந்தார். பிறகு அவர் சீனு தேசத்திலிருந்து புறப்பட்டுத் தமிழ் நாட்டுக்கு வந்து, அங்கிருந்து மலையாளக்கரையை யடைந்து, பிறகு இலங்கை நாட்டைச் சுற்றிவிட்டு, அங்கிருந்து டெல்லி, சோமனாதபுரம், தாணு முதலிய நாடுகளைக் கண்டு, இறுதியாக இங்கு விவரிக்கப்பட்டிருக்கும் சிந்து பிரதேசத்தில் உள்ள கெஸ்ம கோரான் என்ற இடத்தை அடைந்தார். இதுதான் அவர் இந்தியாவில் பார்த்த கடைசி நாடாகும். பிறகு இதை விட்டு மேற்காகச் சென்று பாரசீக நாட்டை யடைந்ததாகத் தம் வரலாற்றில் கூறுகிறார். ஆகையால் அவர் தமிழ் நாட்டில் ஆரம்பித்த பிரயாணத்தைச் சிந்து நாட்டில் முடித்தார் எனத் தெரிகிறது.

வியாபாரத்தை முன்னிட்டுக் கடல் வழியாகவும் பல வணிகர்கள் அவ்வப்பொழுது பெருங் கூட்டமாகக் கூடுகின்றனர்; இதுதான் இந்தியப் பெருநாட்டின் கடைசி நாடாகும்.[1]

இது மாபர்[2] நாட்டிலிருந்து ஆரம்பமாகி இந்நாட்டுடன் முடிவடைகிறது. ஆக, இந்த இரண்டு எல்லைக்குள்ளாக அடங்கிய அகன்ற நாட்டின் கடற்கரையில் உள்ள முக்கியத் துறைமுகப் பட்டினங்களையே[3] பெரும்பாலும் அணுகி, அவைகளின் வரலாற்றையும், அந்தந்த நாட்டு மக்களின் வாழ்க்கையையும், பண்பாட்டினையும் மட்டும் குறிப்பாகக் கொடுத்துள்ளேன். மற்றும் நாட்டின் உள்ளே சென்று மிகவும் விவரமாகக் கண்டு, அவற்றின் வரலாற்றைக் கொடுக்க வேண்டுமென்றால், அவ்வரலாறு படிப்போருக்குப் பெருமலைப்பை உண்டாக்கும்; நம்முடைய வேலையும் ஒரு குறிப்பிட்ட பாதையில் செல்லாது வழி தவறி நிற்கும். ஆக, இங்கு மேற் கூறியவைகளே நான் கண்டு, கேட்டு, உள்ளத்தில் உய்த்துணர்ந்த இந்தியப் பெருமக்களின் பண்பாடும், அவர்களின் வாழ்க்கை வரலாறும் ஆகும். ஆண்டவன் உங்கள் யாவருக்கும் நல் ஆசி அருள்வாராக!''

''தாமின் புறுவது உலகு இன்பு உறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'' —திருக்குறள்

---

1 இந்தியாவில் மார்க்கோ போலோ பார்த்த கடைசி நாடாக இருத்தலால் இவ்வாறு கூறுகிறார் போலும்,

2 Maabar-தமிழ்க்கூறு நல்லுலகம். ஏற்கெனவே முன்னர் இதுபற்றி எழுதப்பட்டுள்ள குறிப்புக்கள் இங்கே நினைவு கூர்தற் குரியன.

3 இதனால் இவர் பெரும்பாலும் கப்பலிலேயே சென்றார் என்ற செய்தி உறுதிப்பாடடைகிறது. மற்றும் இவர் தமிழ் நாட்டிற்குக் கப்பலிலேயே வந்து இறங்கினர் என்பதும் இதனால் அறியப்படுகிறதல்லவா?

இரண்டாம் பகுதி

(வேளிநாடுகள் சிலவற்றைப் பற்றிய குறிப்புக்கள்)

1. பாரசீக நாட்டில் கண்ட புதுமைகள்

பாரசீகம்

'பெர்சியா[1] என்னும் இந்நாடு ஆதியில் ஓர் உன்னத நாடாக விளங்கியது. ஆனால், அந்நாட்டின் பெரும்பாகம் இப்பொழுது டார்டார்[2] என்னும் வமிசத்தாரால் அழிக்கப்பட்டு விட்டது. பாரசீகத்தில் உள்ள சபா[3] என்ற நகரத்திலிருந்துதான் இயேசுநாதரைத் தரிசிக்கப் பெத்லகேமுக்கு[4] மூன்று ஞானியர்கள்[5] வந்தனர். இந்த மூன்று ஞானியர்களும் சபா நகரிலே பெரிய சமாதிகளில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்கள் யாவரும் தாடியும் மீசையும் வைத்துக் கொண்டிருந்தவாறே அடக்கம் செய்யப்பட்டனர் எனத் தெரிகிறது. இந்த ஞானிகளில் முதல்வரின் பெயர் பல்தாஸார்.[6] காஸ்பார்[7] என்பவர் இரண்டாமவராவர். மூன்றாமவரின் பெயர் மெல்ஷியர்.[8] இம் முப்பெரும் ஞானியர்களைப் பற்றிய விவரங்கள் யாதாயினும் இந்நகரத்தில் கிடைக்குமாவென நான் இங்குள்ள மக்களைத் துருவித் துருவிக் கேட்டும், அவர்களிடமிருந்து சரியான விவரம் எதுவும் கிடைத்தபாடில்லை.

---

1 Persia—பாரசீகம் என்னும் நாடு. 2 Tartar—மங்கோலிய நாட்டு மக்கள். 3 Saba 4 Bethlakem 5 Megi—Sages of the East என்று விவிலிய நூலில் கூறப்பட்டுள்ளது. 6 Baldasar 7 Gaspar 8 Melchior.

ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது. அந்த ஞானியர் மூவரும் இங்நாட்டில்தான் ஆதி-காலத்தில் புதைக்கப்பட்டார்கள் என்ற செய்தி மட்டும் ஆதாரத்தோடு கூறப்படுகிறது.

இங்கிருந்து மூன்று நாள் பிரயாணத்திற்குப் பிறகு, பலாசதா [1] என்னும் பெயருள்ள ஊரை அடைவீர்கள். பலாசதா என்றால் தியை வணங்கு பவரின் கோட்டைகள் என்று பொருள்படும். இதற்கு ஆதாரமாக இக்கோட்டைகளில் வாழும் மக்கள் கூறும் வரலாறு பின் வருமாறு:

மூன்று ஞானியர் கதைப்பற்றிய விவரங்கள்

நெடுநாட்களுக்கு முன்னர் [2] பாரசீக தேசத்-தின் பகுதியைச் சேர்ந்த மூன்று முடிமன்னர்கள், புதிதாய்ப் பிறந்த மன்னுதி மன்னரைக் காணத் தங்கள் கைகளில் சாம்பிராணியும், பொன்னும், போளமும் தனித்-தனியே எடுத்துச் சென்றனர். பொன்னை [3] எடுத்துச் சென்ற-தால், அம்மன்னர் பூமியை யாளப்பிறந்த மன்னரா என்பதை யறியவும், சாம்பிராணியை [4] எடுத்துச் சென்றதால், அவர் தேவ கணத்தினரா என்பதை அறியவும், வெள்ளைப்போளம் [5] என்பதை எடுத்-துச் சென்றதால், அவர் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவரா என்பதை அறியவும் வேண்டி, அந்த முடிமன்னர் மூவரும் தங்களோடு இம்மூன்று விதப் பொருள்களையும் எடுத்துச் சென்றனர். இம்மூப்பெரு வேந்தரும், ஞானியர் என்ற நிலையில்

---

1 Palasatha 2 இயேசு நாதர் அவதரித்த வருடத்தில் அதாவது கி. மு. 4—ல், 3 Gold 4 Fankincense 5 Myrrh.

இயேசு நாதரிடம் அனுமதிக்கப்பட்டவுடன், இம் மூவரில் இளையவராக இருந்த ஞானியர் இயேசு நாதர் முன் முதல் முதலாக அனுப்பப்பட்டார். அந்த ஞானியர்க்கு என்ன வயது அப்பொழுது ஆகியிருந்ததோ, அதே வயதுள்ள இளைஞராக இயேசுவும் அவருக்குக் காட்சியளித்தார். இதே மாதிரியாக வெளிநின்ற ஏனைய இரு ஞானியர்களும் தங்கள் வரிசைப்படி சென்றதும், முன் போலவே இயேசு நாதர் அவரவர் வயதளவிலே காட்சியளித்தார். இவர்கள் மூவரும் வெளியில் வந்து ஒன்று கூடிப் பேசி, மீண்டும் உள்ளே ஒருங்கு சென்று பார்க்க, இயேசு நாதர் மிகச் சிறிய வடிவினராகவும், குழந்தை உருவினராகவும் காட்சியளித்ததைக் கண்கூடாகக் கண்டனர். இம்மூவரும் குழந்தையைத் தொழுது, வணக்கம் செலுத்திவிட்டுப் போகும்பொழுது, குழந்தையின் அன்புருவில் காட்சி கொடுத்த இயேசுநாதர் இவர்களிடம் ஒரு சிறு பெட்டியை அன்பளிப்பாக அளித்தார்., அன்புடன் அளித்த அச்சிறு பேழையை இவர்கள் பயபத்தியோடு தலைமேல் தாங்கித் தாங்கள் வந்த வழியே மீண்டு சென்றனர்.

இயேசு நாதர் ஈந்த பேழை

இவ்வாறு வழி நடந்து செல்லும்பொழுது இயேசுநாதர் கொடுத்த அச்சிறு பேழையில் என்ன இருக்கிறது என்று அறிய அவாக் கொண்டு, அப் பேழையைத் திறந்து பார்த்தனர். அதில் சிறிய கல் ஒன்று வைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். இவர்கள் ஞானியர்களாதலால், இவர்களுக்கு அதன் உட்கிடக்கை சட்டெனப் புலப்பட்டது. அதாவது இவர்கள் இயேசு நாதரிடமிருந்து தெரிந்துகொண்ட பொருள்களினின்-

றும் சிறிதும் வழுவாது திட நம்பிக்கையுடன் அக்கல்லைப் போன்று அசையா உறுதியுடன் அமைதியாயிருத்தல் வேண்டும் என்பதே.

அதிசயம் விளைவித்த அருமைக் கல்

ஆனால், சிறிது நேரத்துக்குள் அவர்களுக்கு எவ்வாறே ஐயம் ஒன்று, எழுந்தது. ஒருக்கால் இயேசு நாதர் தங்களுக்குக் கல்லைக் கொடுத்து ஏமாற்றி விட்டாரோ என்ற எண்ணம் மேலிட்டு, அக்கல்லைக் கைகளில் எடுத்துக் கீழே இருந்த குழி யொன்றில் வீசியெறிந்தனர். இவர்கள் இவ்வாறு கல்லை வீசி எறிந்தார்களோ, இல்லையோ, குழியி-லிருந்து தீயானது கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

அக்கினி வழிபாட்டினர்

இவ்வற்புதத்தைக் கண்டு, மெய்சிலிர்த்து, நெஞ்சு பதைத்துத் தங்களுடைய செயலுக்கு வருந்தி, அங்கு எரிந்துகொண்டிருந்த தீயில் ஒரு சிறு பாகத்தை அப்படியேபக்குவ-மாக எடுத்துப் பத்திரமாக அதைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். அங்கே அதற்கு வேண்டிய பூசைகளும் பலிகளும் இட்டனர். அவ்வூரில் இத்தீயை வேதக் கோயில் ஒன்றில் வைத்துப் பாதுகாத்து, அது எப்பொழுதும் அணையா வண்ணம் காப்பாற்றி வந்தனர். இங்ஙனம் சிரத்தையுடன் காப்பாற்றப்பட்டு வந்த இத்தீ எக்காரணத்தாலேனும் குறைந்து அவிந்து விட்டால், இந்நாட்டு மக்கள் நேராக முன் கண்ட கல் வீசியெறிந்த குழிக்குச் சென்று, அங்கு இடை

விடாது எரிந்துகொண்டிருக்கும் தீயில் ஒரு சிறு பாகத்தை எடுத்து வந்து, அணைந்த தீயை மீண்டும் பெருக்கி நெருப் பெழச்செய்து, திரும்பவும் எரியுமாறு செய்கின்றனர். இதில் காணும் அதிசயம் என்னவென்றால், முன்பு கண்ட குழியில் எரியும் தீ எப்பொழுதும் இடைவிடாது எரிந்து கொண்டே இருக்கும். இக்குழியில் கிடைக்கும் தீயைத் தவிர வேறு தீயை உபயோகிப்பதே இல்லை. தீயினுல் தூண்டப்பட்டு, அதையே பூசித்தும் தொழுதும் வருவதால், இந்நாட்டு மக்கள் அக்கினி வழிபாட்டினராகக் கருதப்படுகின்றனர். இது இந்நாட்டு மக்களது வாய் மொழியால் எனக்குத் தெரிந்த வரலாறாகும். மூன்று ஞானியர்களாகிய அரசர்களில் ஒருவர் சபா[1] என்னும் நாட்டின் வேந்தர். இரண்டாவது ஞானியர் தியாவா[2] என்னும் நாட்டு மன்னர். மூன்றுவது ஞானியர் மேற்கூறிய அரணின்[3] அதிகாரியாவர்.[4]

பாரசீகப் பெருநாட்டில் எண்வகை அரசாங்கப் பிரிவுகள் உண்டு. அவைகளின் பெயர்கள் பின் வருமாறு :

---

1 Saba 2 Dyava 3 Castle.

4 இக்கதை சத்தியவேதத்தில் விரிவாகச் சொல்லப்படவில்லை. ஞானியர்கள் மூவர் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கின்றனரேயன்றி (Math II-1-12), மற்ற விவரங்கள் யாவும் நாட்டிற்கு நாடு வலிந்தும் நலிந்தும் கூறப்பட்டிருத்தல் வேண்டும். கர்ண பரம்பரை வரலாறுகளில் வேறுபாடு அதிகமாகக் காணப்படுவது இயற்கையே.

பாரசீகத்தின் எண்வகை அரசாங்கம்

நாட்டின் எல்லைக்குள் முதல் முதலாகப் பார்ப்பது காசிபின்[1] என்ற அரசாங்கமாகும். இரண்டாவது தென் மேற்கில் உள்ள குர்திஸ்தான்;[2] மூன்றுவது லார்[3] என்ற பெயர் கொண்ட நாடு; நான்காவது சுவோலிஸ்-தான்[4]; ஐந்தாவது ஸ்பான்[5]; ஆறுவது சிராஸ்[6]; ஏழாவது சோன்கரா[7]; எட்டா-வது திமோகயன்[8]; இது பாரசீகத்தின் இறுதிப் பாகத்தில் உள்ள நாடாகும்.

---

1 Kasibin - அதாவது, காஸ்வின் (Kasvin) என்ற தலை நகரைக் கொண்ட நாட்டைக் கூறுகிறார். இந்நகரம் டாரிஸ் (Tauris) என்ற நதிவழியாக நுழையும்போது பெர்ஸியாவின் இராக் பகுதியில் (Persian Iraq) இருக்கும் முதல் நாடாகும்.

2 Kurdistan-அதாவது, குரிஸ்தான் (Kuristan) என்பதை தவறுதலாகக் கூறுகிறார்போலும். பெர்ஸியன் குடாவிற் கருகில் உள்ளது. ஆனல் Kurdistan என்பது ஆசியா நாட்டைச் சேர்ந்ததேயன்றி, பாரசீக நாட்டினைச் சேர்ந்திருந்ததாக வரலாறு உரைக்கவில்லை.

3 Lor - இது குரிஸ்தானுக்கு வடக்கே உள்ளது.

4 Suolistan – இது சியெஸ்தான் என்பதன் திரிபாகும். இது பெர்ஸியாவின் கீழ்ப்பாகத்தில் இருக்கிறது.

5 Spaan–இதைத்தான் Isphan என்று அராபிய மக்கள் அழைக்கின்றனர். இது Persian Iraq க்கிற்குத் தெற்கில் உள்ளது.

6 Siras – Shiras என்ற இந்நகரம் பாரசீகத்தின் தலை நகரம். இஸ்பானுக்கு அடுத்தபடியாயுள்ளது.

7 Soncara - காஸ்பியன் கடலுக்குத் தென்மேற்கில் உள்ள பிரதேசம். இது Socham என்றும், Sontara என்றும் பலவிதமாக உச்சரிக்கப்படுகின்றது.

8 Timocain - இது Damaghan என்பதையே குறிப்பிடுகிறது. வடகிழக்குப் பாரசீகத்தில் உள்ள Kumis என்ற நாட்டின் தலைநகராகும்.

கடைசியாகக் கூறப்பட்ட திமோகயன் என்ற அரசாங்கத்தைத் தவிர, மற்ற நாடுகள் யாவும் தெற்குப் பக்கமாகவே பரவியுள்ளன. திமோகயன் மட்டும் அரபார் செக்கோ[2] என்ற இடத்துக்குப் பக்கத்தில் வடக்குப் புறமாக உள்ளது. இப் பாரசீக நாடு முழுவதும் குதிரை வளர்ப்புக்குப் பெரிதும் புகழ் பெற்றது. நன்கு வளர்க்கப்பட்ட குதிரைகள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபாய்களுக்குக் குறைவில்லாமல், இந்திய மக்களுக்கு விற்கப்பட்டு வருகின்றன.[2]

குதிரை வளர்ப்பு

இங்நாட்டில் குதிரைகளைப் போலவே கழுதைகளும் நன்றாகக் கொழு கொழு என்று வளர்க்கப்படுகின்றன. உலகத்திலேயே இங்குதான் கழுதைகளும் மிக அழகான முறையில் பேணப்பட்டு வருகின்றன என்பது மிகையல்ல; உண்மையேயாகும். இதன் காரணமாக, கழுதைகளுக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கும் விலையைக் குதிரையின் விலையைவிட அதிகமாக்கி இருக்கிறார்கள். கழுதைகளுக்கு எளிதாக ஆகாரம் கிடைக்கிறது; இவை பொதி பொதியாக மூட்டைகள் சுமக்கும் தன்மை வாய்ந்தனவாகும். குதிரைகளும், ஒட்டகங்களும் போகும் தூரத்தைவிடக் கழுதைகள் சிறிதும் களைப்பில்லாமலே அதிக தூரம் செல்-

கழுதை வளர்ப்பு

---

1 Arbor Secco

2 பாரசீகம், இராக் ஆகிய இரு நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் குதிரைகள் மிக்க வலிமையும் வனப்பும் வாய்ந்தவை. இந்தியாவில் இருக்கும் பெரும்பான்மையான குதிரைகள் இந்த அராபு வமிசத்தைச் சேர்ந்தனவேயாகும்.

கின்றன. ஆகையால், வியாபாரிகள் வனந்தரங்-களைக் கடக்கக் கழுதைகளையே மிகுதியான அள வில் உபயோகப் படுத்துகின்றனர். [1] ஆகாரமும் குறைவான அளவினதாக இருந்தால், வனந்தரத்-தைக் கடந்து விடலாம் என்ற வசதியே முக்கிய மாகக் கருதப்பட்டு வருகிறது. இருப்பினும், ஒட்-டகங்கள் கழுதைகளைப்போல் அவ்வளவு சுறு சுறுப்பாகவும், துரிதமாகவும் ஓடும் தன்மை வாய்ந்தன வல்ல என்ற காரணத்தால், கழுதை களே வனந்தரத்தைக் கடக்கப் பெரும்பாலும் உப யோகப் படுத்தப்படுகின்றன. இங்நாட்டு வணி-கப் பெருமக்கள் தாங்கள் வளர்த்த கழுதைகளைக் கிஸி,[2] ஆர்மஸ்,[3] மற்றும் இந்தியத் துறைமுகங்-கள் பலவற்றுக்கும் கொண்டு செல்லுகின்றனர். ஆனல் அவைகள் சீதோஷ்ண நிலை காரணமாக, நீண்ட நாட்கள் வாழ்வதில்லை.

மக்கட் பண்பு

இப்பாரசீக நாட்டின் மக்களில் சிலர் காட்டு மிராண்டிகள் போன்றிருக்கின்றனர். இரத்த வெறி கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். கொலை செய்வதும், மற்றவர்களின் உட-லில் காயம் ஏற்படுத்துவதும் இவர்களுக்குச் சாதா ரண நிகழ்ச்சிகளாகும். வணிகப் பெரு மக்களை-யும் அளவுக்கு மீறியே துன்பத்துக்குள்ளாக்குவர். ஆனல் கிழக்கிலிருந்து வரும் டார்டார்[4] வமிசத்-தாருக்குப் பயந்து அவர்களை அவ்வளவாகத் துன்புறுத்த மாட்டார்கள். மற்றும் இங்நாட்டில்

---

1 இயேசு கிறிஸ்து கழுதைமீது சவாரி செய்ததாகச் சத்திய வேதத்தில் (Holy Bible) குறிப்பிடப்படுவது ஈண்டு நோக்கற்பாலது. 2 Kisi 3 Ormus 4 Tartar

பிரயாணம் செய்ய வேண்டி, பன்னிரண்டு குரோட்ஸ்[1] வரையில் பணம் கொடுத்து வழித்துணைவர்களை அமர்த்திக் கொள்ளலாம். அவ்வழித்துணைவர், மேற்கூறிய சுதேசி மக்களின் அபாயத்தினின்றும் வணிகப் பெருமக்களைக் காப்பாற்றுகின்றனர். பொருள்களும் பத்திரமாகக் காப்பாற்றப்பட்டு எடுத்துச் செல்லப் படுகின்றன. அவ் வழித்துணைவர்கள் யாவரும் மகமதிய மதத்தைப் பின்பற்றும் மகமதியர்களே. [2]

நாட்டின் விளைச்சல்

உள் நாட்டில் பட்டு நூல் நூற்பதிலும், பொன் ஆபரணம் செய்வதிலும் வல்லுனர் பலர் இருக்கின்றனர். இங்குப் பஞ்சு அதிகமாக உற்பத்தியாவதுடன், கோதுமை, பார்லி முதலிய தானிய வகைகளும் பெருவாரியாகப் பயிராக்கப்படுகின்றன. கொடி முந்திரிப் பழமும், மற்றப் பழ வகைகளும் விளைவிக்கப்படுகின்றன. சாரசன் மக்களுக்குக் குடிப்பது கூடாது என்றும் நிபந்தனை உண்டு. ஆனால் அந்நிபந்தனையை மாற்ற வேண்டுமென்ற எண்ணம் தோன்றினால், திராட்சைப் பழ இரசத்தை அப்படியே அருந்தாமல் காய்ச்சிக் குடிப்பார்கள். அவ்வாறு காய்ச்சிக் குடிப்பதால், அதன் சுவை இனிப்பாக மாறிப் போதையை உண்டாக்காது தவிர்க்கிறது என்று காரணம் காட்டுகின்றனர். அல்வாறு காய்ச்சின திராட்சை இரசத்தைச் சுராபானம் என்று கூறாமல் அதைப் பழ இரம் என்றே அழைக்கின்றனர். ஆயினும் பழ இரசத்தால் செய்யப்படும் பானம் சுராபானமாகுமே தவிர, வேறு எப்பெயரால் அதை அழைத்தால்தான் என்ன ?

---

1 Groats 2 Mohamadans

2. ஆர்மஸ் துறைமுகம்

துறைமுகத்தின் சிறப்பியல்பு

"முன்னர்க் கூறப்பட்ட இடத்திலிருந்து தெற்குப் பக்கமாக ஐந்து நாட்கள் பிரயாணஞ் செய்தால், நாம், இருபது மைல் நீள முள்ள வனந்தர மொன்றை அடைவோம். இங்குக் காணப்படும் பாதை கொடுமை மிக்கிருக்கும். இங்கே திருடர்களும், வழிப்பறிக் கொள்ளைக்காரர்களும் மலிந்திருக்கின்றனர். அவர்கள் அவ்விடத்தின் ஊடே செல்லும் யாத்திரிகர்களையும், வணிகர்களையும் வழி மடக்கிக் கொள்ளையடித்துத் துன்புறுத்துகின்றனர். ஆகையால் மிகவும் விழிப்பாகவே இப்பாதையைக் கடந்து சென்றால், இதற்கடுத்தாற்போல் மற்றோர் வனந்தரம் நம் கண்களுக்கெதிரே தென்படும். இவ்விரண்டாம் வனந்தரத்தின் காட்சி மிக்க இன்பத்தை யளித்து நிற்கும். இயற்கை வனப்பு மிக்கு, எழில் சிறக்கப்பெற்று, மனத்துக்கு உற்சாகத்தை அளித்து நிற்கும் இப்பிரதேசம் ஆர்மஸ் வனந்தரம் என்று பெயர் பெறும். இவ்வனந்தரத்தைக் கடக்கும் பொழுது, பல சிற்றோடைகளை நாம் காண்போம். மற்றும் இந்நாட்டில் பேரீச்சம் பழமும் ஏராளமாக விளைவிக்கப்படுகிறது. பற்பல பறவை இனங்களும் — நம் நாட்டில் பார்க்கமுடியாத பறவை வகைகளும் — இங்கு மிகுதியாகக் காணப்படுகின்றன. இப்பகுதியின் முடிவில், கடற்கரை காணப்படும். இக் கடற்கரையிலிருந்து சிறிது தூரத்திலேயே தீவு ஒன்று காணப்படும். இத்தீவில்தான் ஆர்மஸ்[1] என்ற அரும் பெரும் நகரம்

---

1 Ormus—இச்சொல் Hormuz எனறு சில பிரதிகளில் காணப்படுகின்றன. கீர்மானின் பல்வேறு இடங்களிலிருந்து இந்தியா செல்லும் கப்பல்களுக்கும் இந்தியாவிலிருந்து கீர்மானுக்கும் மற்ற வேறு நாடுகளுக்குப் போகும் கப்பல்களுக்கும் இளைப்பாறும் இடமாக இத்துறைமுகம் விளங்கியது. சூயஸ் கால்வாய் (Suez Canal) வெட்டின பிறகு, இதன் முக்கியத்துவம் குறைந்து, நாளடைவில் மக்களால் மறக்கப்பட்டது.

இருக்கிறது. இந் நகரம் கடலுக் கருகிலேயே ஒரு சிறப்பு வாய்ந்த துறைமுகமாக விளங்குவதால், இந்தியாவிலிருந்து கப்பலில் வரும் வணிகப் பெருமக்கள், இந்நகரில் கூட்டமாகத் தங்குகின்றனர்.

இவ் வணிகப் பெருமக்கள் வரும்பொழுது தங்களுடன் வாசனைப் பண்டங்கள், மூலிகைகள், முத்துக்கள், வைரங்கள், பொன், தந்தங்களாகிய யானைப் பற்கள், மற்றும் பற்பல உயர்ந்த வாணிபப்பண்டங்களையும் விற்பனைக்குக்கொண்டுவந்து குவிக்கின்றனர். இவ்வாறு கொணர்ந்த பொருள்களை இந்திய நாட்டிலிருந்து வரும் வணிகர்கள், இங்கு உலகத்தின் பல்வேறு பாகத்தினின்று வரும் மற்ற அயல்நாட்டு வணிகர்களுக்கு விற்றுப் பணமாகவும் பண்டமாகவும் மாற்றிக் கொள்கின்றனர். இதைப்போல் வாணிபம் நிறைந்துள்ள இடத்தை வேறெங்கும் காண்பது அரிதாகும். இங்கே தனியான கோட்டைகளும், நகரங்களும், பாதுகாப்பு அரண்களும் உள்ளன. இவைகள் யாவும் இத்துறைமுகத்தின் வருமானத்தால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இப்பெரு நகரமே கீர்மான்[1] என்ற அரசாங்கத்தின் தலைநகரமாகும்.

இத் தலைநகராகிய ஆர்மஸில்தான், இந்நாட்டு அரசனை ருக்மெதின் அகோமக்[2] தன்னுடைய ஏக சக்ராதிபத்தியத்தை நிலை நாட்டி ஆண்டு வருகிறான். ஆனால் தன்னைவிட ஆற்றல் மிக்க கீர்மானின் வேந்தனுக்குக் கப்பம் கட்டியே வாழ்கிறான். அவ்வேந்தனுக்கு அடங்கி நடக்கவும் முயல்கிறான். வேறு அயல் நாட்டினன்

ஆர்மஸின் அரசன்

1 Kirman

2 Rukmedin Achomak - இது Ruk Eddin - Mohamud என்பதன் திரிபாகும். Mohamad Ahmed ஆகிய சொற்கள் வழக்காற்றில் திரிந்து Achomak என்று ஆயிற்று. இத்தகைய வேறுபாடுகள் மொழி பெயர்ப்பாளரின் கைத்திறனிலும் ஏற்படுவது இயல்பே.

எவனுகிலும் தன் நாட்டின் எல்லைக்குள் புகுந்து விட்டால், இவ்வரசன் அவர்களுடைய பண்டங்கள் அனைத்தையும் நாட்டிற்காக வென்று எடுத்துக் கொண்டு, அப்பொருள்களால் கிடைக்கும் பணத்தைத் தன் உண்டியலில் சேர்த்துவிடுவான்.

பருவ காலங்கள்

கோடை காலத்தில் குடிமக்கள் இங்ஙகரில் பெரும்பாலும் தங்குவதில்லை. இக்காலத்தில், சிறிது உள்ளடங்கிய நதிகளிலும், ஓடைகளிலும் சிறு சிறு குடில்களைக் கட்டிக்கொண்டு, பெரும்பாலும் நீர்ப் படகுகளிலேயே தங்கள் பொழுதைக் கழிப்பர். இவ்வாறு இவர்கள் குளுமைதரும் ஏற்பாடுகள் பல செய்து வாழ்வதற்குக் காரணம், கோடையில் இவ்விடத்தில் நிலவும் கடுமையான வெப்பமேயாகும். இக் கோடையில் தினமும் சில மணி நேரங்களாவது, கடுங்காற்று—வெப்பம் மிக்க கொடுங் காற்று—இக் கடற்கரைப் பிரதேசங்களிலே வீசும். இக்காற்று உள்ளடங்கிய பிரதேசங்களிலும் சிறிது வரும். காலையில் பெரும்பாலும் 9 மணியிலிருந்து பகல் 12 மணி வரையிலும் இக்காற்று மிக்க கடுமையாக வீசும். இவ்வாறு அடிக்கும் காற்றுனது, மக்களை மூச்சு விடாமல் திக்குமுக்காடச் செய்து, இங்கிருப்பவர்களில் பெரும்பாலாரைக் கொன்றுவிடும். மற்றும் கடுமையான வெப்பம் காரணமாக, உடம்பின் மீந்தோல் காய்ந்து, உடம்பில் பல கீற்றுக்களும், பாளங்களும், வெடிப்புக்களும் ஏற்பட்டு, இரத்தம் 'குபுகுபு'வென வெளியே கொட்டும். ஆகையால் இச்சமயங்களில், இப்பிரதேச மக்கள், கொடுமை மிக்க வெப்பத்துக்குப் பயந்து, முன்னர்க் கூறப்பட்ட புதிய படகு

களில் உறைந்து வருவார்கள். மற்றும் இக் கொடுங்காற்று சிறிது வேகமாக அடித்தால் ஓர் அகன்ற பாத்திரத்தில் நீரை வைத்துக்கொண்டு, அந்நீரில் தங்கள் முகத்தைப் பதிய வைத்து, காற்றின் வேகம் குறைந்ததும், தங்கள் முகத்தை வெளியே எடுப்பார்கள். இவ்வாறு செய்வது அவர்களுடைய முகத்துக்கும், கண், காது முதலிய முக்கிய உறுப்புக்களுக்கும் சிறந்த பாதுகாப்பு அளிப்பதாகும்.

மேற்கூறிய வெப்பத்தின் கொடுமையை நான் இங்கு வந்திருந்த பொழுது அனுபவத்தால் கண்டறிந்தேன். பின்வரும் நிகழ்ச்சி இதன் விவரத்தை நன்கு தெளிவாக்கும் என எண்ணுகிறேன்.

மார்க்கோ போலோ கண்ட ஒரு காட்சி

ஆர்மஸின் சிற்றரசர்கள் கீர்மானின் பெருவேந்தனுக்குத் தாங்கள் கட்டவேண்டிய கப்பத்தைக் கட்டாது காலம் நீட்டித்ததற்காக, கப்பத்தைக் கட்டாயம் வசூலிக்கப் பெருவேந்தன் ஆயிரத்து நூறு குதிரைகளும், ஐயாயிரம் காலாட் படைகளும் கொண்ட படையொன்றினைத் திரட்டி அதை ரியோ பார்லி[1] என்ற இடத்துக்கு அனுப்பினன். சிற்றரசர்களைத் துன்புறுத்திக் கப்பத்தைக் கட்டாயம் பெற்று வருமாறு கட்டளையிட்டான். அவ்வாறு அப்படைகள் புறப்பட்ட காலம் கோடை காலம் ஆகும்; இக்காலத்தில் மக்கள் அனைவரும் காற்றின் கொடுமைக்குப் பயந்து, கடற்கரைப் பிரதேசத்தை விட்டு, உட்சென்று, நதிப் படுகைகளில் உறைந்து வந்தனர். படை யெடுத்து வந்த சேனைகள் வழித்துணைகளின் தவறுதலால்,

1 Reo Barle

மாற்று வழிச் சென்று ஓர் இரவு ஆர்மஸ் அருகில் இருந்த தோப்பு ஒன்றில் இளைப்பாற ஏற்பாடு செய்தன. இரவு இளைப்பாறிவிட்டு, மறுநாட் காலை எழுந்து, தங்கள் பிரயாணத்தைத் தொடங்கியதும், கோடைக் காற்று "கோ"வென அடிக்க ஆரம்பித்துவிட்டது. அவ்வெப்பக் காற்றினின்றும் பிழைத்து வெளியேறுபவர் எவரேனும் உண்டோ? இல்லை. எனவே அச் சேனைகளின் பரிதாப நிலையைத் திரும்பிச் சென்று தங்கள் அரசரிடம் தெரிவிக்க ஒருவர்கூட மிகுதியில்லாமல் யாவரும் அக்கொடுங் காற்றுல் திக்குமுக்காடப் பெற்று, உயிரிழந்து, கீழே வீழ்ந்தனர். இச் செய்தியை எவ்வாறோ அறிந்து, அன்றிரவு சென்று பார்த்த ஆர்மஸ் மக்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர். அவ்வளவு பெயர்களும் வரிசையாக மடிந்திருந்ததைக் கண்டனர். சுற்றும் காற்றடித்த வேகத்தால் கீழே விழுந்திருந்தவர்களின் கைகால்களைத் தூக்கின மாத்திரத்தில், அவைகள் உடனே உடலிலிருந்து பிரித்தெடுத்தது போல், கழன்று வந்துவிட்டன. அதனுல் அப்பிணங்களுக் கருகிலேயே குழிகளைத் தோண்டி அவைகளை அக்குழிகளில் புதைத்துவிட்டனர். பிணங்களை அவ்வாறே வெளியில் போட்டு வைத்திருந்தால், காற்றுனது அசுத்தமடைந்து, அதன் காரணமாகப் பற்பல நோய்கள் பரவுமாதலால், அவைகள் குழிகளில் நன்கு புதைக்கப்பட்டன. இவைகள் யாவற்றையும் அன்றிரவே செய்து முடித்து மறுநாள் விடியுமுன் தங்கள் இருப்பிடமாகிய நதிப் படகுகளுக்குச் சென்றுவிட்டனர். இல்லாவிடில் இந்நாட்டு மக்களை நாடிவந்த சேனைகளுக்கு நேர்ந்த கதியே இவர்களுக்கும் நேர்ந்துவிட்டால் என்ன செய்வது? இவர்களுக்கு உதவி செய்பவர் வேறு

எவரேனும் உளரோ? ஆகவே இந்நிகழ்ச்சியை என் கண்களால் பார்த்த பிறகு அங்கு நிலவிய சீதோஷ்ண நிலையை ஒருவாறு நான் உள்ளபடி அறிய முடிந்தது.

கப்பல் கட்டும் விவரம்

ஆர்மஸ் துறைமுகத்தில் கட்டப்படும் கப்பல்கள் மிகவும் அபாயகரமானவை. இவைகளால் மக்களுக்கும், ஏற்றப்படும் பண்டங்களுக்கும், திடீர் திடீர் எனச் சேதங்கள் ஏற்படுவதுண்டு. இதற்குக் காரணம் கப்பலில் ஆணிகள் உபயோகப் படுத்தப்படுவதில்லை. ஆணிகள் அறையப்பட்டால், மரங்களின் கனமான தன்மையின் காரணமாய், அம்மரங்கள் மட்பாண்டங்கள் போல் விரிவடைந்து, முற்றிலும் உடைந்துவிடுகின்றன. இப்படியிருக்க மேலும், ஆணியைச் செலுத்தினால், அவ்வாணிகள் உடைபட்டும், வெளியே தள்ளப்பட்டும் நிற்கின்றன. இதனால் ஒருபலகையை மற்றப் பலகையில் கிராதி எடுத்து, ஒன்றுக்குள் ஒன்று பொருத்தி, அவைகளைத் தண்ணீரில் மிதக்க விடுகிறார்கள். நீரின் தன்மையால், பலகைகள் நன்றாக இறுகிக் கொள்கின்றன. இதற்குப் பிறகு, கப்பலை ஒருவகைக் கயிற்றால் சுற்றிக் கட்டுகிறார்கள். இக்கயிறு பனைமரத்திலிருந்து பெற்ற கயிறாகும். இது குதிரையின் உரோமம் போன்று மிக்க உறுதியாக இருக்கும். கப்பலின் அடிப்பாகத்துக்குப் பசையாதும் உபயோகப்படுத்துவது கிடையாது. பசைக்குப் பதிலாக, ஒருவகை மீனினின்று எடுக்கப்படும் எண்ணெயைத் தடவி அதனால் நீரானது கப்பலின் உட்புகாதவாறு பாதுகாக்கின்றனர். கப்பலுக்கு ஒரு பாய்மரமும், ஒரு தளமுமேதான் உண்டு. அக்கப்பலில் சரக்குக்கள் ஏற்றப்

பட்டதும், அவைகள் உரோமமுடைய ஆட்டுத் தோலால் மூடப்படுகின்றன. அதன் பிறகு, ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய குதிரைகள் அம்மூட்டைகள் மீது ஏற்றப்பட்டு, அவைகள் இந்தியாவுக்குக் கொண்டு வரப்படுகின்றன. இக்கப்பல்களுக்கு இரும்பினாலான நங்கூரம் கிடையாது. அதற்குப் பதிலாகப் பூமியில் தாங்கும் ஒரு கற்பாறையையோ அல்லது கனமான மரக்கட்டையையோ உபயோகப்படுத்துகின்றனர். ஆனால், அக்கப்பல்கள் பெருங்காற்று அடிக்கும் போது, ஏதாகிலும் ஒரு கரைக்கு அடித்துச் செல்லப்படுவதுண்டு. சிற்சில சமயம் அவைகள் கண்காணாத்தீவுக்கு அடித்துச் செல்லப் படுவதுமுண்டு. மற்றும், சிலகப்பல்கள் காற்றாலும் அலைகளாலும் மோதப்பட்டு உடைந்து, உருத் தெரியாமல் போவதுமுண்டு.

ஆர்மஸின் ஆதிவாசிகள்

இப்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் யாவரும் கருமை நிறம் கலந்த உடலோடு காணப்படுகின்றனர். இவர்கள் யாவரும் மகமதியர்கள். இவர்கள் கோதுமை, அரிசி முதலிய தானியங்களை நவம்பர் மாதத்தில் விதைத்து, மார்ச்சு மாதத்தில் அறுவடை செய்வார்கள். பேரீச்சம் பழம் தவிர மற்றெல்லாப் பழங்களும் இம்மாதங்களிலேயே பறிக்கப்படுகின்றன. இப்பேரீச்சம் பழத்தை மற்றச் சரக்குகளோடு சேர்த்து ஒருவகை உயர்ந்த பானத்தைத் தயார் செய்கிறார்கள். முதன் முதல் அப்பானத்தை அருந்தும் எவரும் தீராத மயக்கத்தில் ஆழ்ந்து விடுவது இயல்பு. ஆனால், சிறிது பழக்கத்தில் வந்துவிட்ட பிறகு அதுவே, அவர்கள் உடல்

பெருக்கத்திற்குக் காரணமாகவும் ஆகின்றது. இந்நாட்டு ஆதிவாசிகளின் உணவு நம்முடைய உணவைப்போன்றதன்று. கோதுமை ரொட்டியையும், ஊனையும் தின்றுல், இவர்களுடைய உடல் நலம் பாதிக்கப்படும். இக்குடி மக்களின் முக்கிய உணவு பேரீச்சம் பழமும், உப்பிட்ட மீனிறைச்சியுமாம்.

பசுமை காணுத வனந்தரம்

சூரிய வெப்பத்தின் கொடுமையாலும், சுழன்றடிக்கும் காற்றின் வேகத்தினுலும் புற்கள் சிறிது முளைத்தாலும், அவைகள் தீய்ந்து காய்ந்து போகின்றன. நீர் சுரக்கும் இடங்கள் தவிர, மற்றப் பாகங்களில் பசும்புல் காணப்படாது. ஆகவே இங்குப் பசுமை காணுத வனந்தரம் பல மைல்களுக்குக் காணப்படும்.

கூலிக்கு ஒப்பாரி

இந்நாட்டின் பெரிய கனதனவான்கள் இறந்து விட்டால், அவர்கள் மனைவிமார்கள் தங்கள் கணவர்களை நினைத்துக்கொண்டு, நான்கு வாரங்கள் தொடர்ச்சியாக அழுது புலம்புவார்கள். இவ்வாறு அழுது புலம்புவதற்கு எனக் கூலி பெறும் ஆட்களும் நிறையக்கிடைக்கிறுர்கள். அழத் தெரியாதவர்களுக்கும், தாம் அழுவதை நாகரிகமற்ற செயலாக நினைப்பவர்களுக்கும், இத்தகைய அழும் கூலிகள் தங்கள் சிறந்த ஒப்பாரியால் அப்பணியை நிறைவேற்றி வைப்பார்கள். இவர்கள் தங்களுக்கு எம்முறையிலும் சொந்தமில்லாதவரின் சடலத்தின் முன் உட்கார்ந்து அழுது புலம்புவது, அவ்விறந்தோரின் உறவினர்க்கும் உற்றுர்க்கும் அடக்க

முடியாத சோகத்தை வருவிக்கும் இயல்பு வாய்ந்ததாகும். இவ்வாறு கூலிக்கு ஒப்பாரி வைப்பவர்கள் அவ்வளவு அழகாக ஒப்பாரி வைத்து அழுவார்கள். இவர்கள் அழுவதைப் பார்த்து, சுற்றி நிற்கும் மற்றவர்களும் அழுது புலம்புவார்களாம்[1]. இருப்பவர்கள் இறப்பவர்களுக்கு அழுவது அன்னரின் ஆத்தும சாந்திக்காக என நம்பப்படுகிறது."

1 இவ்வழக்கம் இன்றும் சிலருடைய குலத்தில் நடைமுறையில் உள்ளது. அழத்தெரியாதவரிடம், இவர்கள் தகுந்த கூலி பெற்று, அழுது புலம்பி ஊரையே ஒன்று கூட்டுவார்கள். இக்காரணத்தால்தான், "கூலிக்கு மாரடித்தல்" என்ற பழமொழியும் நம் நாட்டில் ஏற்பட்டுள்ளது போலும்.

கட்டுரைப் பயிற்சி

1. மார்க்கோ போலோ ஒரு தலை சிறந்த யாத்திரிகர் என்பது அவர் மேற்கொண்ட யாத்திரையால் எவ்வாறு விளங்குகிறது என்பதை ஒரு பக்க அளவில் எழுதுக.

2. மார்க்கோ போலோ வெனிசு நகரடைந்த வரலாறு குறித்து இரண்டுபக்க அளவில் கட்டுரை வரைக.

3. மாபர் நாடு என்பது யாது? அதன் வரலாற்றினை யும், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கையும் பற்றி இரண்டு பக்கங்களில் கட்டுரை வரைக.

4. மாபர் நாட்டில் வேந்தர்கள் வாழும் வகையினைப் பற்றி இருபது வரிகளில் எழுதுக.

5. மாபர் நாட்டில் விக்கிரக வழிபாட்டை எவ்வாறு வருணிக்கிறார் என்பதை ஒரு பக்க அளவில் வரைக.

6. தாமஸ் முனிவரின் வரலாறு குறித்து ஒன்றரைப் பக்கத்தில் கட்டுரை ஒன்று வரைக.

7. காயலும் குமரியும் என்பதைப்பற்றி ஒன்றறைப் பக்கத்தில் கட்டுரை ஒன்று வரைக.

8. ஆதாம் சிகரத்தின் மகிமையை மார்க்கோ போலோ எவ்வாறு விவரிக்கிறார் என்பதை இரண்டு பக்க அளவில் எழுதுக.

9. லார் நாட்டின் பெருமையைக் குறித்து இருபது வரிகளில் கட்டுரை எழுதுக.

10. மலேயாள நாட்டின் வளமையையும் பெருமையையும் பற்றி இரண்டு பக்க அளவில் கட்டுரை வரைக.

11. குஜராத்தில் வாழும் மக்களின் பண்பாட்டைப் பற்றிப் பதினைந்து வரிகளில் கட்டுரை வரைக.

12. மார்க்கோ போலோ இந்தியாவில் செய்த இறுதிப் பிரயாணத்தைப் பற்றி ஒன்றரைப் பக்க அளவில் எழுதுக.

13 யாத்திரை செய்வதால் ஏற்படும் நன்மைகளை விவரித்து ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.

14. மார்க்கோ போலோ கூறும் ஊர்ப் பெயர், நாட்டுப் பெயர், வேந்தர் பெயர் ஆகியவைகள் அக்காலத்தில் உச்சரிக்கப்பட்ட வகைகளைப் பற்றி இரண்டு பக்கங்களில் கட்டுரை ஒன்று எழுதுக.

15. கடல் கோளைப்பற்றி மார்க்கோ போலோ கூறும் வரலாற்றைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

—

★

பல நூற்றாண்டு
களுக்கு முன் தரை
வழியாகவும் கடல் வழி
யாகவும் உலகின் பல இடங்
களுக்கும் அஞ்சாது சென்று அரும்
பெரும் புதுமைகளை உலகிற்கு அறிவித்த
யாத்திரிகர்களுள் சிறந்து விளங்குபவர்
மார்க்கோ போலோ. இவர் தாம் கண்டு களித்த
புது நாடுகளையும், அங்கங்கே தாம் கண்ட காட்சி
விநோதங்களையும் குறித்து யாத்திரைக் குறிப்புக்கள்
பல எழுதிவைத்துள்ளார். இவரது குறிப்புக்கள்
மத்திய காலத்தின் சிறப்பையும், நமது பாரத நாட்
டின் பெருமைகளையும் தெரிவிக்கும் சீரிய
சான்றுகளாக மிளிர்கின்றன. இப் பெரி
யாரது வாழ்க்கை வரலாற்றையும்,
இவர் கண்ட புதுமைகளையும்
இந் நூலகத்தே கண்டு
களிக்கலாம்.

★

MARCO POLO

(IN TAMIL)

By

V. S. V. RAGHAVAN

RAJALAKSHMI PUBLICATIONS
128, CORAL MERCHANT STREET,
MADRAS - 1.

Copy Right] 1965 [Price Rs. 0-80 P.

Bharathi Printers, Broadway, Madras-1